520

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 OCT 1933
MADRAS

520

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 4

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 10

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 ஜமாதுல் ஆகிர்மீ 1933 அக்டோபர்

உள்ளடக்கம்.

1. ஸூரயே வன்னஜிஆத் ... 361
2. நாயக வாக்கியம் ... 366
3. ஹிஸ்புல்லாஹ் ... 368
4. காதியானி அபிமானிகள் விழிப்பார்களா? 370
5. "இப்பொழுது முஸ்லிம்கள் செய்யவேண்டுவ தென்னை! ... 374
6. மார்க்கத் தீர்ப்பளிக்க காஜீவேண்டும் ... 378
7. ஸிம்லாவில் காதியானிகளின் பஹிரங்கத் தோல்வி ... 383
8. பிராணிகளை அறுப்பதன் பயன் ... 384
9. ஸையித்மார்கள் யார்? ... 387
10. ஹஸ்ரத் ஈஸா (அலை.) மரணமாய் விட்டார்களா? ... 392
11. ஆசிரியர் குறிப்புகள் ... 399

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	,,	4 0 0
தனிப் பிரதி ...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

OF THE REGISTRAR OF BOOKS
24 OCT 1933
MADR

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1352 ஜமாதுல் ஆகிர் மீ 1933 ௵ அக்டோபர் மீ	இதழ் 10

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு (ஆரம்பஞ் செய்கிறோம்)

ஸூரயே வன்னாஜிஆத்

1. மூழ்கி இருப்பவர்கள் மீது பிரமாணமாக,
2. இன்னும் சந்தோஷமாக முன்னேக்கிச் செல்பவர்கள் மீது,
3. இன்னும் துரிதமாக நீந்திச் செல்பவர்கள் மீது,
4. பிறகு முன்னேக்கிச் சென்று முதன்மையாய் முந்துகிறவர்கள் மீது,
5. பிறகு காரியத்தை ஆலோசிக்கும்படியானவர்கள் மீது (பிரமாணமாக)
6. அதிரும்படியான அதிர்ச்சி ஏற்படும் நாளில்,
7. பிறகு வரவேண்டியது அதன் பின்னே வரும்.
8. சில ஹிருதயங்கள் அந்நாளில் கலக்கமான நிலைமையை அடையும்,
9. அவர்களின் பார்வைகள் கீழே நோக்கியிருக்கும்,
10. (காபிர்கள்) சொல்வார்கள். என்ன! நாங்கள் முந்திய நிலைமைக்கு மீட்டுவிக்கப்படுவோமா?
11. என்ன! நாங்கள் மக்கிப்போன எலும்புகளாக ஆய்விடும்போதா?
12. (மறுபடியும் சொல்கிறார்கள்) அப்போழுது அது (மீட்கப்படுதல்) நஷ்டம் தரக்கூடிய மீட்சியாக யிருக்கிறது,
13. நிச்சயமாக அச்சம்பவமானது பயத்தைக் கொடுக்கக் கூடிய ஒரே சப்தமாக யிருக்கும்.
14. பிறகு அதே நேரத்தில் அவர்கள் பூமியின் மீது ஆய்விடுவார்கள்.
15. மூஸாவின் செய்தி உம்மிடத்துக்கு வரவில்லையா?
16. அவருடைய நாயன் அவரை 'துவா' என்னும் பரிசுத்தப் பள்ளத்தாக்கில் கூப்பிட்டபோது,
17. 'பிர்அவ்' னிடம் செல்வீராக; நிச்சயமாக அவன் (பஸாது செய்வதில்) வரம்பை மீறிவிட்டான்.
18. பிறகு நீ பரிசுத்தமடைவதற்காக விரும்புகிறீரா? என்று கேட்பீராக,

19. இன்னும் நான் உன்னுடைய ரப்பின் பக்கல் வழி காண்பிக்கின்றேன், அப்போழுது நீ அச்சப்படுவோய்,

20. பிறகு அவர் (மூஸா) அவனுக்கு (பிர் அவ்னுக்கு) பெரிய அடையாளத்தைக் காண் பித்தார்.

21. ஆனால் அவன் (அதைப்) பொய்யாக்கி மாறுபாடு செய்தான்.

22. பிறகு முயற்சி செய்தவனாகத் திரும்பி விட்டான்.

23. பிறகு (மனிதர்களை) சேகரஞ் செய்து கூப்பிட்டான்.

24. பிறகு நான் உங்களுடைய பெரிய ரப் பேன்று கூறினான்.

25. ஆதலின் அல்லாஹ் அவனை பின் னுள்ளவும் முன்னுள்ள தானவுமாகிய வேத னையில் அகப்பட வைத்தான்

26. நிச்சயமாக அச்சப் படுகிறவனுக்கு இதில் ஒரு (பெரும்) படிப்பினை இருக்கிறது.

27. சிருஷ்டியில் நீங்கள் அதிகம் வன்மை யானவர்களா? அல்லது வானமா? அவன் அதைச் சிருஷ்டித்தான்.

28. அதன் முகட்டை உயர்த்தி, பிறகு அதைச் செம்மையாக்கினான்.

29. மேலும் அதன் இரவை இருளாக்கி அதன் பிரகாசத்தை வெளியாக்கினான்.

30. மேலும் பூமியை அதன் பின் ஒழுங்கு படுத்தினான்.

31. (பிறகு) அதினின்றும் தண்ணீரையும் தீனியையும் வெளியாக்கினான்.

32. மேலும் மலைகளை அதற்கு உதவாக ஆக்கினான்.

33. நீங்களும், உங்களுடைய ஆடுமாடு ஒட்டகங்களும் புழங்குவதற்காக.

34. மகாப் பெரும் நிகட்சி வரும் போழுது,

35. மனிதன் தான் செய்ததை நினைத்துப் பார்க்கும்படியான நாள்,

36. மேலும் காண்கிறவனுக்கு முன்னால் நரகம் கோண்டு வரப்படும்.

37. ஆதலின் எவன் வரம்பை மீறினானோ,

38. இன்னும் உலக வாழ்க்கையைத் தேரிந்து கோண்டானோ,

39. அதுபோழுது நிச்சயமாக நரகந்தான் அவனுடைய ஒதுங்குமிடமாகும்.

40. மேலும் எவன் தன்னுடைய நாயனின் சன்னிதானத்தை அஞ்சி நப்ஸை ஆசையி னின்று விலக்கினானோ,

41. அப்போழுது நிச்சயமாக சுவர்க்கந் தான் அவனுக்கு ஒதுங்குமிடமாகும்.

42. (ஏ முஹம்மதே!) உம்மிடம் (அந்த வேளையைக் குறித்து) அது எப்போழுது ஏற்படு மேன்று கேட்கிறார்கள்.

43. நீர் எதை ஞாபகப்படுத்துவதில் ஈடு பட்டிருக்கிறீரோ அதைப் பற்றி,

44. அதன்முடிவு உன் நாயன் பக்கமாயி ருக்கிறது.

45. அதை அஞ்சுகிறவனுக்கு நீர் அச்ச முட்டுகிறவராகவே இருக்கின்றீர்.

46. அவர்கள் அதைக்காணும் நாளில் உல கினில் ஒரு மாலைப் போழுதோ, அல்லது அதன் அதிகாலை நேரமோ தான் தரிபட்ட தாக (எண்ணுவார்கள்.)

[அதாவது, ஒரு விஷயத்தில் கஷ்டப்பட்டு பிரயாசை செய்பவர்கள் மீதும், சந்தோஷ மாக ஒருவேலையி லீடுபடுபவர்கள் மீதும், தண்ணீரில் நீந்து செல்வதுபோல் ஒருகாரிய யத்தில் முன்னேக்கிச் செல்பவர்கள் மீதும், தமக்குச் சமமானவர்களைவிட ஒரு காரியத் தில் முந்துகிறவர்கள் மீதும், ஆழ்ந்த சிந்த னைக்குப்பின் ஒரு காரியத்தில் ஈடுபகிறவர் கள் மீதும் பிரமாணமாக, மறுமை நாளை மறுக்கிறவர்களே! அதிரும்படியான அதிர்ச்சியும் அதன்பின் துயர்ந்து வரும்படியான நிகழ்ச்சிகளும் ஏற்படும் நாளில், நீங்கள் கணக்கு ஒப்புவிப்பதற்காக எழுப்பப்படு வீர்கள்; அந்நாளில் சில ஹிருதயங்கள் கலக்க மானதாகவும் பார்வைகள் கீழே நோக்கியவைகளாயு மிருக்கும். நாங்கள் மரணமாகி மக்கிப்போன எலும்புகளாய் விட்டபிறகு முந்திய நிலைமைக்கு மீட்டப் படுவோமாவென காபிர்கள் சொல்வார்கள். மறுபடியும் அக்காபிர்கள் பரிகசித்தவர் களாய், ஒவ்வொரு உறுப்புக்களும் தனித் தனியாகி ஈரமெல்லாம் காய்ந்துலர்ந்து போனபின் மீட்டுவிக்கப்படுதலானது பெரும் நஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய மீட்சியாக யிருக்கிறதென்று சொல்கிறார்கள். ஆனால்

அவ்வாறான மீட்சியானது பயத்தைக்கொடுக்கக்கூடிய ஒரு சப்தத்தினாலுண்டாய் விடக்கூடியதாகும்; அச்சப்தத்திற்குப்பின் யாவரும் பூமியின்மீது ஆய்விடுவார்கள். முஹம்மதே! (ஸல்) மூஸாவின் செய்தி உம்மிடத்திற்கு வரவில்லையா? அவருடைய நாயன் அவரை 'துவா' என்னும் பரிசுத்த பள்ளத்தாக்கிற்கு அழைத்து, பிர்அவ்னிடம்சென்று அவனுக்கு உபதேசம் புரியும்படி கூறியதும், அவர் அங்குசென்று பெரிய அடையாளங்களைக் காண்பித்தும் அவன் ஒப்புக்கொள்ளாது மானிடர் பக்கல் சென்று யாவரையும் அழைத்து, யான் உங்களுடைய பெரிய ரப்பாக யிருக்குமென்று கூறியபொழுது அல்லாஹ்த ஆலா அவனுக்கு இம்மை மறுமையிலுண்டான வேதனையை அளித்தான் என்பதும் உமக்குத் தெரியாதா? உங்களைப் படைப்பது பெரியகாரியமா? அல்லது வானுலகைப் படைப்பது பெரிதா? வானத்தை யாதொரு தூணின் உதவியின்றி, செம்மையாக உயர்ந்திருக்கும்படியும், இருளில் பிரகாசம் வெளியாகும்படியும் செய்து, பூமியை ஒழுங்குபடுத்தி மலைகளை அவைகளுக்கு உதவியாக அமைத்து அதினின்று உங்களுக்காகவும் உங்கள் ஆடுமாடு ஒட்டகங்களுக்காவும் தண்ணீரையும் தீனியையும் வெளியாக்கி யிருக்கிறான். அஃது மானிடன் தான்செய்ததை நினைத்துப் பார்க்கும்படியான மாபெரும் நிகழ்ச்சி யுடைய நாள். இன்னும் நரகம் காண்கிறவனுக்கு முன்னால் கொண்டு வரப்படும் நாள். ஆகவே எவன் உலக வாழ்க்கையைப் பெரிதெனக் கருதி ஆண்டவனுக்கு மாறுசெய்து அவனது கட்டளையை மீறினானோ, நரகந்தான் அவனது இருப்பிடமாகும். இன்னும் எவன் ஆண்டவனது சன்னிதானத்தை அடைய வேண்டுமென்பதைக் கருதி அவனுக்கு பயந்து தன்மனம் நாடியவைகளை விட்டு விலகியிருந்தானோ, அவனது இருப்பிடம் சுவனலோகமாகும். முஹம்மதே! (ஸல்.) மறுமை நாள் எப்பொழுது ஏற்படுமென்று அவர்கள், உம்மிடம் கேட்கிறார்கள். அது விஷயம் உம்முடைய நாயனின் கைவசமிருப்பதால் உமக்கு என்னதெரியும்! எவன் அந்நாளை உண்மை கொண்டிருக்கிறானோ அவனுக்கு அச்சமூட்டுபவராக யிருக்கின்றீர். அவர்கள் அந்நாளைக் கண்டவுடன் உலகில் ஒருமாலைப் பொழுதே அல்லது அதன் அதிகாலை நேரமே யொழிய தாங்கள் தரிபடவில்லை எனக் கருதுவார்கள் என்பதே.]

இவ்வத்தியாயம் மக்கீயாம். அல்லாஹ்த ஆலா இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் ஐந்து நிகட்சிகள்மீது பிரமாணஞ்செய்திருப்பதால் அவ்வைந்தினுக்கும் அவைகளின் வெளிரங்கமான கருத்தையே கொள்கின்றனர் சிலர். வேறு சிலரோ வெனில், 'நாஜிஆத்' என்பது ஆண்டவனது பாதையில் செல்லுபவர்களினது இருதயங்களென்றும், 'நாஷிதாத்' என்பது ஆண்டவனது சன்னிதானத்தை அடைய விரும்பும் ஹிருதயங்களென்றும், 'சாபிஹாத்' என்பது, 'மஅரிபத்' என்னும் கடலில் நீந்திச் செல்லும்படியான ஹிருதயங்களென்றும், 'ஸாபிகாத்' என்பது, பற்பலவாறான கஷ்ட சங்கடங்களையும் கடந்து ஆண்டவனின் முடுகுதலை அடைந்த ஹிருதயங்களென்றும் 'முதப்பிராத்' என்பது பூர்ண நிலைமை அடைந்த மகான்களின் ஹிருதயங்களென்றும் கூறாநிற்கின்றனர். எவ்வாறாயினும் அல்லாஹ்த ஆலா இவ்வைந்து வஸ்துக்கள் மீதும் பிரமாணஞ் செய்து, மறுமை நாளை மறுத்துக் கொண்டிருக்கும் மதியீனர்களை அழைத்து, எதற்காக நீங்கள் மறுமைநாளை மறுக்கின்றீர்கள்; நீங்கள் மரணமடைந்தபின் கேள்வி கணக்கிற்காக எழுப்பப்படுவீர்கள்; அந்நாளில் வானம் பூமி இவைகளில் பெரும் மாறுதல் ஏற்படும் என்றும், இனி உலகிற்குத்திரும்பச் சென்று நற்கருமங்கள் புரிவதற்கு ஹேதுவில்லாமற் போய் உலகினில் புரிந்த தீயகருமங்களின் பிரதிப் பலன்களை கண்ணாரக் காண்பது கொண்டு அநேக ஹிருதயங்கள் திடுக்கிட்டதாகவும் வெட்கத்தால் அநேகப் பார்வைகள் கீழானதாகவு மிருக்குமென்றும் அறிவிக்கிறான்.

மறுமைநாளி லேற்படும் சம்பவங்களைக் குறிப்பிட்டுவிட்டு, 'குப்பார்கள்' இவ்வுலகின் ஆசாபாசங்களில் மூழ்கிப் போயிருந்ததால் அன்னோர், என்ன! நாங்கள் மரணமடைந்தபின் மறுபடியும் எழுப்பப்படுவோமா? எங்கள் எலும்புகளெல்லாம் உக்கிமடித்துப் போனபின் மறுபடியும் ஒன்று சேருமா?; நீண்டகாலத்திற்குப் பின் அவ்வாறு ஒருக்கால் உயிர்ப்பித்து எழும்புவதானாலும்

அஃது நஷ்டமான—பூர்ணமற்ற முறையிலேயே இருக்கும். எனவே, வெகு நீண்ட காலத்திற்குப்பின் உறுப்புகளெல்லாம் எங்கெங்கோபோய்விடும்; சிலருக்குக் காலில்லாமலும் சிலருக்குக் கையில்லாமலும் சிலருக்கு கண், வேறு சிலருக்கு விரல் இல்லாமலும் மற்றுஞ் சிலருக்கு உரோமமோ அன்றி மூக்கோ இல்லாமலுமாய்விடும். தவிர உலகினில் சம்பாத்தியஞ் செய்துவைத்திருந்த ஐசுவரியங்களும் கையிழந்ததாக ஆய்விடும் எனப் பரிகாசமாகக் கூறிக் கொண்டிருந்தார்களென்று அல்லாஹ்தஆலா எடுத்து விளக்கி, இவ்வாறு மறுமுறை உயிர்ப்பிக்கிறதென்பது ஒரு கஷ்டமான-அற்புதமான காரியமல்ல, அஃது ஒரு சத்தத்தினால் உண்டாய்விடக் கூடிய விஷயமென்று இதன் 13-வது வாக்கியத்தின்மூலம் அறிவிக்கிறான். அவ்வாறு சத்தமேற்பட்டவுடன் சற்றேனும் தாமிதமில்லாது உறுப்புகளெல்லாம் ஒன்று சேர்ந்து திரேகம் தயாரானவுடன் சரீரங்களுடன் ஆத்மாக்களுக்குச் சம்பந்தமேற்பட்டுவிடும். எனவே, தூங்கிக்கொண்டிருப்போர்களை விழிப்பாட்டி வைப்பதே போலாய்விடும்.

மறுமை நாளில் மறுமுறை எழுப்பப்படும் என்னும் விஷயத்திற்குள்ள ஆதாரத்தை எடுத்துக் காண்பித்தபின், மரணமடைந்தவைகள் பிறகு உயர்ப்பித்தெழுந்த சம்பவங்களை ஆயிரக்கணக்கானோர் கண்ணாரக் கண்டிருப்பதையும், வெளிரங்கமான பார்வையில் உயிர்ப்பிப்பதற்கு தகுதியற்றவை என்று கருதப்பட்டவைகளில் ஆண்டவன் உயிர் விட்டிருப்பதையும் விளக்கும் நோக்கத்தோடு, அரபிகளிடையே பிரஸ்தாபமாகயிருந்துவரும் ஓர் அரும் சம்பவமாகிய சரித்திர சம்பந்தமான விஷயத்தை—அதாவது ஹஸ்ரத்மூஸா (அலை) அவர்களின் காலத்தில் தோன்றியுள்ள அற்புத நிகழ்ச்சியை விளக்கி மூசாவின் செய்தி உம்மிடம் வரவில்லையா? அவசியம் வந்தே இருக்கும்; அதுபொழுது மரணமடைந்தவஸ்து உயிர்ப்பித்து எழும்ப வில்லையா? என இதன் 15-வது வாக்கியத்தின் மூலம் தெரிவித்திருக்கிறான். இது சம்பந்தமான முழு விவரமும் ஸூரயேபகராவில் சவிஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களிடமிருந்த தடி சர்ப்பமாக மாறிய அற்புதமும் யாவருக்கும் தெரிந்ததே. ஆகவே மரணித்தவைகளை உயிர்ப்பிக்கச் செய்வது காய்ந்து உலர்ந்துபோன ஒரு தடியை பாம்பாக ஆக்குவதைவிட பெரிய கடினமான விஷயமா? ஒருக்காலுமில்லை என்பதைத் தெரிந்துகொள்கிறோம்.

இதன் 17-வது வாக்கியத்தில், மூஸாவை அவருடைய நாயன் 'தூர்' மலைக்குச் சமீபமாகவுள்ள 'துவா' என்னுமிடத்திற்கு அழைத்தபொழுது எனக் கூறுகின்றான். அதாவது, ஹஸ்ரத் மூசா (அலை.) அவர்கள் மிஸர்தேசத்தில் பனூஇஸ்ராயில் வம்ஸத்தில் ஜனனமானார்கள். பனூஇஸ்ராயில் குலத்தில் ஜனனமாகும் ஒரு பிள்ளையால் பிர்அவ்னின் உயிருக்கு ஆபத்துநேரிடுமென்று குறிகாரர்கள் பிர்அவ்னிடம் தெரிவித்திருந்ததால், அதுகாலை ஜனனமாகும் ஒவ்வொரு சிசுவையும் பிர்அவ்ன் கொன்றுவிடும்படி ஏற்பாடு செய்திருந்தான். இக்காரணத்தால் ஹஸ்ரத் மூசா (அலை.) வின் தாயார், ஹஸ்ரத் அவர்களை ஒரு மரப்பெட்டியில் அடைத்து நீல நதியில் விட்டு விட்டார்கள். அப்பெட்டி அப்படியே மிதந்து சென்று பிர்அவ்னின் கட்டடத்திற்குள் பிரவேசித்துவிட்டது. பிர்அவ்னின் மகள் அப்பெட்டியை எடுத்துத் திறந்து பார்க்கவே, பதினான்காம் மதிபோலொத்த வதனத்தையுடைய ஒரு சிசு இருப்பதைக் கண்டு, பிர்அவ்னுக்கு யாதொரு ஆண் சந்ததியுமில்லாததால் அவன் பெண்சாதி அச்சிசுவை தமது புத்திரராக ஆக்கிக் கொண்டனள். அச்சிசு பிர்அவ்னின் வீட்டிலேயே மிக்க சுவண்டியோடு வளர்ந்துவந்து வாலிபரானகாலை, ஒரு நாளன்று கடை வீதியில் பிர்அவ்னின் குடும்பத்திலுள்ள ஒருவன் பனூஇஸ்ராயீல் வம்ஸத்திலுள்ள ஒருவனை அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்த இடத்திற்கு ஹஸ்ரத் மூசா (அலை.) சென்றார்கள். உடனே துன்புறுத்தப்படும் இஸ்ராயீலீ ஹஸ்ரத் அவர்களிடம் முறையிட்டுக்கொள்ளவே, தாங்கள் கஷ்டத்திலகப்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்ராயீலீயை விடுதலை செய்வதற்காக முன்னோக்கிச்சென்று பார்த்தும் பிர்அவ்ன் வர்க்கத்தைச் சேர்ந்தவன் ஏற்றுக்கொள்ளாததால் அவனது கன்னத்தில் ஒரு அடிகொடுத்தார்கள். அதனால் அவன் மரணமாய்விட்டான். இதன் காரணமாய் ஹஸ்ரத் அவர்கள் மிஸர் தேசத்தைவிட்டு ஷுஐப் (அலை.) அவர்களிருக்கும் ஊருக்குச் சென்று அங்கு தங்கி

யிருந்து ஹஸ்ரத் ஷுஐப் (அலை.) அவர்களின் புத்திரியை விவாகஞ் செய்துகொண்டு 10 வருட காலம் வரை அங்கேயே வாசஞ் செய்து வந்தார்கள். இந்நிலைமையில் ஹஸ்ரத் மூசா (அலை.) அவர்களுக்கு மிஸர் தேசத்திற்குச் செல்லவேணுமென்னும் பிரீதி ஏற்பட்டு, ஏற்கனவே நிகழ்பெற்ற சம்பவத்தை யாவரும் மறந்திருப்பார்களென்று கருதி பெண்சாதி பிள்ளைசகிதம் புறப்பட்டார்கள். அதுகாலை பெண்சாதி கர்ப்பவதியாயிருந்தார்கள். இந்நிலைமையில் புறப்பட்டு வருங்காலை ‘ துவா ’ என்னும் குன்றுக்குச் சமீபமாய்விடவே பாதை தெரியாமலாய்விட்டது. குளிர்காலமாகயிருந்ததுடன் இராக்காலமுமாய்விட்டதால் திகைத்து அங்கேயே நிற்குங்கால், தொலை தூரத்தில் ஒரு நெருப்பு வெளிச்சமிருப்பதைக் கண்டு, பெண்சாதி வேலைக்காரர் முதலானோரை அங்கேயே இருக்கும்படி செய்து நெருப்புக் கொண்டு வருவதற்காக அந்தப் பக்கல் சென்றார்கள். ஒருக்கால் நெருப்புக் கிடைக்காவிட்டால் பாதையையாகிலும் அறிந்து வருவதாகச் சொல்லிப் போனார்கள். நெருப்பு இருக்குமிடம் சென்று பார்க்கும்போது ஒரு மரத்தில் ஒளி வீசிக்கொண்டிருப்பதையும், அதன் கிளை இலை முதலியவைகளினின்று ஆண்டவனைத் துதிசெய்துகொண்டிருக்கும் சப்தம் வெளியாவதையும் ஹஸ்ரத் மூசா (அலை.) அவர்கள் கண்டு திகைத்தார்கள். அதுபொழுது அம்மரத்தினின்று பெரியதோர் ஒளி வெளியாயிற்று. அதனை ஹஸ்ரத் அவர்கள் பார்க்க முற்படவே, கண்கூசுதல் ஏற்பட்டு விழித்துப் பார்ப்பதற்கும் இயலாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. உடனே ஏ மூசாவே! நான் உம்முடைய நாயனாகயிருக்கின்றேன்; என் சமீபம் வாரும், உன் கையில் யாது வஸ்து விருக்கின்றது? என்றொரு சப்தம் ஏற்பட்டது. அதற்கு ஹஸ்ரத் அவர்கள், கையில் தடியிருப்பதாகக் கூறினார்கள். அதனை அல்லாஹ்த ஆலா பூமியில் போடும்படி கட்டளையிட்டான். அவ்வாறு செய்யவே அஃதொரு சர்ப்பமாக ஆய்விட்டது. ஹஸ்ரத் அவர்கள் அதனைப் பார்த்து பயந்தவர்களாக பின்னோக்கி ஓட ஆரம்பித்தார்கள். பயப்படாது கையிலெடுத்துக் கொள்ளுமென்று அல்லாஹ்த ஆலா அறிவித்தான். அவ்வறிவிப்பின்படி செய்யவே, அஃது மறுபடியும் தடியாக மாறிவிட்டது மறுபடியும் இடதுகையை கம்முக்கட்டியில் வைத்து அழுத்தி எடுக்கும்படி கட்டளையிட்டான். அவ்வாறு செய்யவே அக்கை சந்திரனைப்போல் பிரகாசிக்க முற்பட்டு விட்டது. அல்லாஹ்த ஆலா ஹஸ்ரத்மூசா (அலை.) அவர்களுக்கு இவ்விரு அற்புத நிகட்சிகளை வெளியாக்கிக் காண்பித்த பிறகு, யான் உம்மை நபியாக ஆக்கியிருக்கிறேன்; நீர் மிஸர் அரசனான பிர்அவ்னிடம் செல்லும்; அவன் வரம்பை மீறிச் சென்று ஆண்டவனென பிதற்றிக்கொண்டும் ஆண்டவனது அடியார்களுக்கு நோவினை கொடுத்துக்கொண்டும் அடாச் செயல்கள் புரிந்துகொண்டிருக்கின்றான்; அதனால் அவனைப்பின்பற்றி நடப்போர் துர்ச்செய்கை என்னும் கடலில் மூழ்கிப்போயிருக்கின்றார்கள் ஆதலின் அவ்விடம் சென்று, அவனுடைய குணத்தை தூய்மை படுத்திக்கொள்ளவும் துர்நடத்தையைப் போக்கிக் கொள்ளவும் நாடுகின்றானா? என்றும், அவ்வாறு துர்செய்கைகளை எல்லாம் விட்டு தூய்மையாய் விடுவானாகில் அவனுடைய நாயனளவில் செல்வதற்குள்ள பாதையைக் காண்பிப்பதாகவும்கூறும் என அறிவித்தான். இக் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் மூசா (அலை.) அவர்கள் பிர்அவ்னிடஞ்சென்று நேர்வழியின் பக்கல் அழைத்தார்கள். இதனைக்கண்டு பிர்அவ்ன் என்பான் நேர்வழி காண்பிப்பது, ஆண்டவனது பாதையில் அழைப்பது இவைகள் ஒரு பக்கலிருக்கட்டும் முதன்முதல் நீர் ஆண்டவனால், எங்கள் அளவில் அனுப்பப்பட்ட ரசூல் என்பதையும், நீர் ரசூல் என்பதை யாங்கள் ஒப்புக் கொள்வதற்குள்ள தக்க காரணங்களையும் காண்பியுமென்று கூறினான். உடனே ஹஸ்ரத் மூசா (அலை.) அவர்கள், மாபெரும் அற்புத நிகட்சிகளைக் காண்பித்தார்கள். ஆனால் அந்த பிர்அவ்ன் அவைகளை எல்லாம் கண்டு ஈமான் கொள்ளாது ஹஸ்ரத் அவர்களைப் பொய்யாக்கி வைத்து, நீர் பெரிய சூனியகாரராகயிருக்கின்றீர்; என்னிடமுள்ள சூனியக்காரன் உம்மைப் பார்க்கினும் மகாப்பெரும் சூன்யங்கள் செய்கிறவனாகும் ஆகவே ஒரு தினத்தைக் குறிப்பிட்டு உம்மையும் அவனையும் அழைக்கின்றேன்; உங்களுடைய வேலைகளைக் காண்பியுங்கள் எனக்கூறி அவ்வாறே செய்தான். ஆனால் பிர்அவ்னிடத்திலுள்ள

சூனியக்காரன் தோல்வியடைந்து ஈமான் கொண்டு விட்டான்; பிர்அவ்னோ ஆண்டவனது கட்டளையை ஏற்றுக்கொள்ளாது முன்னைவிட அதிகமாய் மாறுசெய்ய ஆரம்பித்து பனூஇஸ்ராயீல் வர்க்கத்தாரைத் துன்புறுத்த முற்பட்டுவிட்டான். தவிர மூசா (அலை) என்ன! அவருடைய ஆண்டவனைக் கூட எதிர்ப்பதற்குத் தயாராகயிருக்கிறேன் எனக் கூறிக்கொண்டு ஒரு தர்பார் கூட்டி யாவரையும் ஒன்றுசேர்த்து, "ஜனங்களே! யான் உங்களுடைய மேலான நாயனாகயிருக்கும்; நீங்கள் மூசா (அலை.) வின் வார்த்தையைக் கேளாது எனக்கு வழிப்பட்டு நடவுங்கள் எனக்கூறினான். இவ்வாறு பிர்அவ்ன கிறவன் ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களின் வார்த்தையைக் கேளாது ஆண்டவனுக்கு மாறு செய்வதிலேயே பிடிவாதமாக யிருந்ததால் அல்லாஹ்த ஆலா அவனை கடிசான பிடியாகப் பிடித்து பெரும் துன்பத்தை அனுபவிக்கச் செய்தான். அதுகாலை அவனுடைய ராஜரீகமெல்லாம் காற்றில் பறந்து போய்விட்டது.

இதன் 25-வது வாக்கியத்தில் அல்லாஹ்த ஆலா, பின்னுள்ள முன்னுள்ளதான வேதனையால் அவனைப் பற்றிக்கொண்டான் எனக் கூறுகின்றான். அதாவது, பிர்அவ்னும் அவனைத் துயர்ந்தோரும் சேர்ந்து ஹஸ்ரத் மூசா (அலை) அவர்களையும், அவர்களைப் பின்பற்றியவர்களையும் பிடிப்பதற்காக வெளிப்புறப்பட்டு வருங்காலை, பனூ இஸ்ராயீல்கள் 'குல்ஜூம்' என்னும் நதியைக் கடக்குங்கால் வழிதிறக்கப்பட்டுப் போயிற்றென்றும் பிறகு பிர்அவ்னும் அவனைத் துயர்ந்தோரும் செல்லுங்கால் எல்லோரும் தண்ணீரில் மூழ்கி மாண்டுபோனது கொண்டு அவனுக்கு உலகில் வேதனை கிடைத்ததென்றும், மறுமையில் அவனுக்கு நரகம்தயாராக இருந்து கொண்டிருக்கிறதென்றும் அறிவிக்கிறான்.

மறுமை நாளை மறுத்துக் கொண்டிருந்தோர் மேலேகூறப்பட்ட அற்புத நிகட்சிகளை எல்லாம் கேட்டுவிட்டு, தடியைப் பாம்பாகச் செய்து விடுவதும், மழைத் தண்ணீரினின்று உயிர்ப் பிராணிகளை உண்டாக்கி விடுவதும், தவளை உயிர்வாழ்ந்த மண்ணிலிருந்து தவளைகள் உண்டாகும்படி செய்வதும் வேறு விஷயம்; இதுபொழுது, மானிடர் மரணமடைந்தபின் உயிர்ப்பித்து எழுப்புவார்களா என்னும் விஷயத்தில்தான் தங்களுக்கு ஆக்ஷேபனை இருப்பதாகக் கூறினர். அதற்கு விடையிறுப்பதற்காக அல்லாஹ்த ஆலா இதன் 27-வது வாக்கியத்தில், சிருஷ்டியில் நீங்கள் வன்மையானவர்களா? அல்லது வானமா? என வினவி, மாபெரும் வல்லமைபொருந்திய எந்த அல்லாஹ்த ஆலா இவ்வளவு விசாலம் பொருந்தியவும்உயரமானதாவுமாகியவானத்தைப் படைத்து அதில் பற்பலவாறான அதி ஆச்சரியங்களை அமைத்து வைத்தும், இன்னும் பூமியைப்படைத்து அதை பற்பல விதமாகச்செய்து அதில் மானிடர் மற்றும் உயிர்ப்பிராணிகளுக்கு ஊன்தீன் முதலியவைகளை உற்பத்திசெய்தும் வைத்திருக்கின்றானோ அந்த அல்லாஹ்வுக்கு மானிடனை மறு முறை எழுப்புவது பெரிய காரியமா? அளவற்ற இரகசியங்களும் நுட்பங்களும் அமையப்பெற்றுள்ள வானம் பூமி இவைகளைப் படைப்பதற்கு சக்தியுள்ள நாயன், சிறிய வஸ்துவாகிய மானிடனை எழுப்புவதில் அதிலும் ஒருமுறை சிருஷ்டித்தபின் மறுமுறைஎழுப்புவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

(வல்லாஹ் அஃலம்.)

நாயக வாக்கியம்

வழிநடைப்பாதையில், கடைவீதிகளில் உட்கார்ந்திருப்பதைத் தவிர்த்துகொள்ளுங்களென எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதனைச் செவியுற்ற சங்வைான்களான சஹாபாக்கள், அவ்வாறு செய்ய இயலாதிருக்கிறதே; அங்கு உட்கார்ந்து கொண்டுதான் (அநேக) காரியாதிகளைப் பேசவேண்டி யிருக்கிறதெனக் கூறினார்கள். அதற்கு எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள், அவ்வாறு உட்காரவேண்டுமாயின் பாதையின் ஹக்கை (கடமையை) நிறைவேற்றிவிடுங்கள், எனக் கூறினார்கள்

அதற்குச் சஹாபாக்கள், அல்லாஹ்வின் ரசூலே! பாதையின் ஹக்கு யாதாகுமென வினவினர்கள். உடனே ரசூல் நாயகம் (ஸல்.) அவர்கள், பார்வையைக் கீழாக்கி வைப்பதும், அங்கு ஏற்படும் கஷ்டங்களை நீக்கிவைப்பதும், சலாமுக்கு மறுமொழி கூறுவதும், நல்லகாரியங்களை அறிவித்துக்கொடுப்பதும், கெடுதியைவிட்டு விலக்குவதுமாகுமென்று அறிவித்தார்கள்.

அன்புற்ற நேயர்காள்! மேலே கூறப்பட்டுள்ள அரும்பெரும் போதனைகளை நாம் எவ்வளவுதூரம் சிறமேற்றாங்கி நடக்கிறோமென்பதை சற்று உற்றுணர்ந்து பார்ப்போமாக. அவ்வாறு ஆராய்ந்து பார்ப்போமாகில் அச்சேவையி லீடுபடுவதற்குப் பகரமாய் புறம்பேசுவதிலும், பெருமைக் கொள்வதிலும் கெட்டெண்ணம் வைப்பதிலும், அவதூறு பேசிக்கொண்டிருப்பதிலும் ஈடுப்பட்டிருப்பதைத்தான் கண்டுகொள்வோம்.

எம்பெருமானர் (ஸல்.) அவர்கள், பரமாதர்களைப் பார்க்கலாகாதென கட்டளையிட்டிருக்க, நாம் அன்னவர்கள் பக்கல் நமது கூர்மையான பார்வையைச் செலுத்துகின்றோம்; வழிநடைப் பாதையில் கிடக்கும் நோவினை கொடுக்கும் வஸ்துக்களை அப்புறப்படுத்துவதை கௌரவக்குறைவாகக் கருதுகின்றோம்; ஒருவருக்கொருவர் "சலாம்" சொல்லிக்கொள்வதை வெட்கக்கேடானதெனவும் கேவலமான விஷயமெனவும் நினைத்துக் கொள்கிறோம்; நலவை ஏவுவதையும் கெடுதியை விலக்குவதையும் மறந்து உட்கார்ந்து கொண்டு அவ்வாறு செய்வோமானால் நம்மை மார்க்கப்பற்றுக்கொண்டலை பவர்களென்று ஒருக்கால் சொல்லி விடுவரோவென்று அஞ்சிக்கொண்டிருக்கின்றோம். சன்மார்க்கபோதனை, சத்தியப்பிரசாரம் இவைகளி லீடுபடுவதை சிலரின் மனம் வெறுத்துத்தள்ளுகிறது; சற்றேனும் அதன்மீது பிரீதி ஏற்படுவதே கிடையாது அவ்வாறு ஒருக்கால் சிலருக்கு உபதேசஞ்செய்தபோதிலும் அவ்வுபதேசப்படி நடப்போர் சொற்பமாகவே காணப்படுகின்றனர். சிலக்கால் உபதேசம் புரிவது கொண்டு பெரும் கட்சிப் பிளவுகள் ஏற்பட்டு கடைசியாக வீண்சச்சரவுகளுமுண்டாகி ஒற்றுமை ஏற்படுவதற்குப்பகரமாய் ஒற்றுமைப் பங்கம் தாண்டவமாட ஆரம்பமாய்விடுகிறது.

சோதரர்காள்! இதுகாலை நாம் அல்லாஹுதஆலாவின் கட்டளைப்பிரகாரமும், எம்பெருமானர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களது உபதேசப்படியும் நடந்து, சற்குணம் நன்னடக்கை இவைகளைப் பின்பற்றி வருவோமாயின் நிச்சயமாக நமக்கு ஆண்டவனது உதவி கிடைக்கவேசெய்யும்; இஸ்லாமியக் கல்விமுழுதும் நமது கைவசமே ஆய்விடும். இப்பொழுதும் சமயம் தப்பிப்போகவில்லை. எனவே ஒவ்வொரு மனிதரும், தான் இஸ்லாமியப்பிரசாரஞ் செய்வதற்காகவென்றே இப்பூவுலகினில் ஜனித்திருப்பதாகக் கருதிக்கொண்டும் நஞ்சிறார்கட்கு இவ்வாறான போதனை செய்துகொண்டு மிருப்பராயின் ஜயமடைவரென்பது திண்ணம். எம்பெருமானர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் சகல முஸ்லிம்களுக்கும் எச்சரிக்கைசெய்து சத்தியப் பிரசாரம் புரியும்படி ஆக்கினை பிறப்பித்திருக்கின்றார்கள். ஆகவே அன்பர்கள் விழிப்புற்று எவ்வளவுதூரம் சன்மார்க்கப்பிரசாரத்திலீடுபட முடியுமோ அவ்வளவுதூரம் அத்தொண்டிலீடுபட்டு, இப்பிரசாரத்தொண்டிற்காகவேதான் இப்பூவுலகினுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக கருதவேண்டும் எனவே அல்லாஹுதஆலா நம்மனைவரையும் அவனுக்காக உண்மைத் தொண்டாற்றிய சாலிஹீன்களின் கூட்டத்தில் சேர்த்துவைப்பானாக.

வஸ்ஸலாம்.

பொன்மொழிகள்

பேசுவதானால் உண்மையே பேசுங்கள், வாக்குச் செய்தால் அதை நிறைவேற்றுங்கள், அமானத் வைக்கப்பட்டால் அதைக் காப்பாற்றிக் கொடுங்கள். மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள், உங்களுடைய பார்வையை கீழே நோக்கி வையுங்கள் நியாமல்லாத செய்கையினின்று உங்கள் கைகளைத் தடுத்துக்கொள்ளுங்களென்று எம்பெருமானர் (ஸல்) கூறியிருக்கின்றார்கள்.



ஹிஸ்புல்லாஹ்

(சத்திய பிரசாரத் திருக்கூட்டம்.)

சமீபத்தில் தஞ்சை ஜில்லாவில் சத்தியபிரசாரம் புரிந்த ஹிஸ்புல்லாக்களின் நடவடிக்கைகளை பத்திரிகைமூலமாக அறிந்திருப்பீர்கள். அத்திருபெயரைச் சிலர் புதிதென நினைக்கக்கூடும். இஸ்லாம் மதம் இக்குவலயத்தில் தோன்றிய அன்றுதொடுத்து இன்றுவரை 'ஹிஸ்புல்லாஹ்' இருந்தேவருகிறது. இஸ்லாத்திற்கு யார் யார் ஊழியம் செய்து இருக்கின்றனரோ இன்னமும் ஊழியம் செய்துவருகின்றனரோ அவர்கள் யாவரும் ஹிஸ்புல்லாஹ்தான். ஹிஸ்புல்லாஹ் என்றால் அல்லாஹ்வின் கூட்டத்தினர் என்பது பொருள். அல்லாஹு தஆலாவால் அவனியோருக்கு அறிவிக்கப்பெற்ற அந்தத் தூய மதத்தைப் பிரசாரம் செய்து தீயமதத்தை ஒழிப்போரை அல்லாஹ் தனது திருமறையில் ஹிஸ்புல்லாஹ் என்றழைக்கிறான். மேலும், இவர்களே இறுதியில் வெற்றிபெறுவர் என்பதையும் வற்புறுத்தி "(நபியே) அறிந்துகொள்! நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர் (ஹிஸ்புல்லாஹ்) தான்வெற்றி பெருபவர்கள்" என்று கூறி நபிகள் நாயகமவர்களுக்கு சத்திய சன்மார்க்கத்தினர்தான்-ஆரம்பத்தில் அவர்களுக்குச் சில இடுக்கண் ஏற்படுவதுபோல் தோன்றினும் இறுதியாக—வெற்றிபெறுவார்கள் என வாக்களித்திருக்கிறான். இச்சத்திய பிரசாரத் திருக்கூட்டத்தினர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலந்தொடுத்து இன்றளவும் இருந்து வந்தாலும் சிற்சில சமயத்தில் தாங்கள் சன்மார்க்கப் பிரசாரவேலையில் அதிகம் சிரத்தை கொள்ளாதிருந்திருக்கின்றனர். இவ்விதமாக அசிரத்தை காட்டிய காலங்களில் தான் சில அசத்தியவர்க்கத்தார் தங்களது அசத்தியப் பிரசாரத்தைச் செய்யத் தொடங்குவர். முற்காலத்தில் இவ்வர்க்கத்தார் பகிரங்கமாக இஸ்லாத்தை எதிர்த்துப் பிரசாரம் புரிந்து தோல்வியுற்றனர். எனவே, சமீபகாலமாக இவர்கள் புதிய முறையைக் கொண்டு அதாவது இஸ்லாத்திற் குழைப்பதாக, இஸ்லாத்தின் ஏற்றத்தை எடுத்தியம்புவதாக, இஸ்லாத்தின் இணையில்லாக் கொள்கைகளை இனியில்லா வண்ணம் இனி தோதுவதாகக் கூறிக்கொண்டு அதன் வேரையே கெல்லி எறியும் படியான பணியைச் செய்து வருகின்றனர். முஸ்லிம் பொதுஜனங்களும் புதுமுறையில் புரியப்படும் இப்புன்மைப் பிரசாரத்தை நன்மைப் பிரசாரமென நம்பி அதனைப் போற்ற முற்படுகின்றனர். இத்தகைய புன்மைப்பிரசாரமானது இந்நாட்டில் புதுமாதிரியாக சென்ற 15-16 வருஷங்களாகப் புரியப்பட்டுவந்தது. இதனை அவ்வப்போது சன்மார்க்கத் தொண்டர்கள் கண்டித்துவந்தனர். ஆயினும், அப்பிரசாரம் உச்சஸ்தானத்தை யடைந்து வந்ததையும் நமது இளவாலிபரில் சிலர் அதனை மெய்யென்று நம்பி வருவதையுங் கண்ட மார்க்கபக்தர் பலர்கூடி சென்னையில் 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' என்ற நமது சங்கத்தைக் கண்டனர். அதற்கென நமது பத்திரிகையையும் அதே பெயரால் தோற்றுவித்தனர். இப்பத்திரிகையும் இச்சங்கமும் சென்ற நான்காண்டுகளாக இந்நாட்டிற்குச் செய்த பல ஊழியங்கள் உங்களுக்குத் தெரியாததன்று. நம்மவரிலேயே இஸ்லாத்தின் பெயரால் இன்னல் இழைத்துவரும் காதியானி மிர்ஜாயிகளினுடைய கூற்றுக்களையும், பிற மதத்தவரால் இழைக்கப்பட்டுவரும் பல இடையூறுகளையும் மக்களுக்கு எடுத்தறிவித்தும், மகாநாடுகளை கூட்டுவித்துத் தீர்மானங்கள் செய்தும், அரசாங்கத்

தின் உதவி பெற்றும் அவைகளை அவ்வப் போது தடுத்துவந்த விஷயங்களை எல்லாம் ஈண்டு எடுத்துக் கூறினல் ஏடு விரியுமென் றஞ்சி விடுத்தனம். எனவே, இக்காதியானி மிர்ஜாயிகள் பதுங்கிக்கொண்டு பிரசாரம் புரிந்ததை விடுத்து இப்பொழுது சில கால மாகப் பகிரங்கப் பிரசாரம் புரியவும் முற் பட்டுவிட்டனர். சென்ற வாண்டின் ஆரம் பத்தில் சாத்தன் குளத்தில் இந்தக்காதி யானிகள் குதர்க்கஞ் செய்ததும், அதற் காக நமது சங்கத்தாரும் ஹிஸ்புல்லாஹ் வும் எடுத்துக் கொண்ட முயற்சியும் யாவ ருக்கும் தெரிந்த விஷயமே. இவ்வாண் டின் மீலாதுன்னபியின் புனித விழாவைப் புகலாகக் கொண்டு இந்த மிர்ஜாயிகள் பகிரங்கமாக மேடையின் மீது தங்கள் தீய பிரசாரத்தைப் புரியத் தலைப்பட்டு விட்ட னர். ஆனல், நாயக மான்மியத்தை நவில்வ தாகவே இவர்கள் வெளிக்குக் கூறிக் கொண் டாலும் தங்களுடைய தீய பிரசாரத்தை யும் புரியாமல் நிறுத்திக்கொள்ளவில்லை. இவ் வுண்மையைக் கண்ட சில மார்க்காபிமானி கள் சத்திய பிரசாரம் புரியும்படியாக எமது சங்கத்தை வேண்டிக்கொண்டமை யால் எமது சங்கக் காரியதரிசி மௌலா னல் ஹாஜ் மௌலவி ச. அ. முகம்மது அலீ சாகிப் பாக்கவீ அவர்கள் சில பிரபலஸ்தர்க ளுடையவும் உலமாக்களுடையவும் அபிப் பிராயப்படி ஹிஸ்புல்லாஹ் என்ற பெயரால் சத்திய பிரசாரத் திருக்கூட்டத்தைச் சேர் த்துத் தஞ்சை ஜில்லாவிலுள்ள பல தாலுக் காக்களில் சன்மார்க்கப் பிரசாரத்தைச் செய்தார். இத்திருக்கூட்டத்தினரின் திவ்ய மான பிரசாரத்தால் ஆங்கு 4 பேர்களைப் புதிதாக இஸ்லாத்தில் சேர்க்கப்பட்டது. ஒற்றுமையில்லாதிருந்த ஊர்களும் தலைவர் களும் ஒற்றுமையாயினர். மாற்றக்கொள் கையில் மாட்டிக்கொண்டிருந்த பலர் அதை விட்டொழித்து சத்தியக் கொள்கையில் சார்ந்தனர். இவ்விவரம் அவ்வப்போது பத் திரிகையில் வெளியிடப் பட்டிருக்கிறது. இப் பிரசாரக்கூட்டத்தில் உலமாக்கள் மாத்திரம் சேர்ந்திருக்கவில்லை. மார்க்க பக்தியுள்ள தனவந்தர்களும் சாமான்யரும் ஹாஜிகளும் இன்னும்பலரும் சேர்ந்திருந்தனர். இவர்களை அந்தப் பிரதேசமே கொண்டணைத்து மகா நாடுகளைக் கூட்டி மக்களுக்கு நற்றொண்டி னைச் செய்யும்படி செய்தது. இத்தாலுக் காக்களில் நடைபெற்ற பிரசாரத்தையும் அதனலேற்பட்ட நற்பயனையும் கண்ட தஞ்சை ஜில்லாவிலுள்ள ஏனைய தாலுக்காக் களும் ஹிஸ்புல்லாக்களை அழைக்க முன் வந்துவிட்டன. இது சம்பந்தமாக எமக்கு வந்த பல நிருபங்களை விரிவஞ்சி நிறுத்திக் கொண்டனம். இன்ஷா அல்லாஹ் இவர் கள் வேண்டுகோளின்படி சீக்கிரத்தில் ஹிஸ்புல்லாஹ்வின் மற்றொரு சுற்றுப் பிர யாணப் பிரசாரம் தஞ்சை ஜில்லாவின் ஏனைய தாலுக்காக்களிலும் நடைபெறும் என் பதை மிக மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள் ளுகிறோம். ஈதன்றி, கூத்தாநல்லூர் இரண் டாவது மகாநாட்டில் நிறைவேறிய தீர்மா னப்படி மதுரை ஜில்லாவிலும் சத்தியப்பிர சாரம் புரியவேண்டியதாக இருக்கிறது. இன் னமும் திருநெல்வேலி, ராமநாதபுரம், கோய முத்தூர், சேலம் முதலிய ஜில்லாக்களிலும் சன்மார்க்கப் பிரசாரம் புரியும்படி அழைப் புக்களும் வந்துகொண்டிருக்கின்றன.

நிற்க, ஹிஸ்புல்லாஹ்வின் அமைப்பையும் அப்பிரசாரத்தின் தன்மையையும் அதனு லேற்படும் நன்மையையும் கண்ட மௌலவி களும் மார்க்கபக்தர்களும் தங்களையும் ஹிஸ் புல்லாஹ்வில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டு தங்களது முழுவிலாசத் தையும் நமக்கு அறிவித்திருக்கின்றனர். எனவே இதுவரையில் ஹிஸ்புல்லாஹ்வில் சேர்ந்து சத்தியபிரசாரம் புரிந்த மௌலவி களுக்கும் மார்க்க பக்தர்களுக்கும், இனிச் சேர விரும்புவதாக நமக் கறிவித்திருக்கிற ஏனைய மௌலவி மார்களுக்கும் மார்க்க பக்தர்களுக்கும் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங் கம் தனது மனமார்ந்த நன்றியை இதன் மூலம் செலுத்துவதுடன், அவர்களது மார்க்க பக்தியையும் போற்றுகிறது. இத் திருக்கூட்டத்தில் சேர்ந்து பிரசாரம் செய் யும்பொருட்டு ஹஜ்ரத் மௌலானு மௌலவி முப்தி ஷெய்கு ஆதம் அலிம் சாகிப் அவர் களை இராயவேலூர் மத்ரஸா பாக்கியாத் ஸாலிஹாத்தின் பிரதிநிதியாக அனுப்பி வைத்த அஃலா ஹஜ்ரத் கான்பகதூர் அல் ஹாஜ் மௌலானு மௌலவி ஜியாவுத்தீன் முஹம்மது சாகிப் கிப்லா அவர்களுக்கும், இந்த ஹிஸ்புல்லாஹ்வுக்குத் தலைமை வகித்து அப் பிரசாரத்தை நடத்திய திருச்சி ஆலீ

ஜனுப் மௌலானு ஸெய்யிது முர்த்தஜா சாகிப் பகதூர், M. L. A., பொதக்குடி மத்ரஸா அந்நூருல் முஹம்மதியுவின் நாஜிர் மௌலவி ஸெய்யிது முகம்மது ஷர்புத்தீன் சாகிப் ஆகியவர்களுக்கும், பொதக்குடி மத்ரஸா, அத்திக்கடை மத்ரஸா, கூத்தா நல்லூர் மத்ரஸா மன்பஉல் உலாவுக்கும் நன்றி செலுத்துகிருேம். இம்மத்ரஸாக்களின் ஆசிரியர்கள் அம்மத்ரஸாக்களின் பிரதிநிதியாகச் சேர்ந்து கொண்டதுமட்டுமில்லாமல் அம்மத்ரஸாவின் மாணவர்கள் இத்திருக்கூட்டத்துடன் பல இடங்களுக்குக் கால்நடையாகவும் வந்து பிரசங்கம் செய்ததுடன் பிரசாரகர்களுக்கு வேண்டிய ஊழியமும் செய்தது பாராட்டத் தக்கதாகும். இவ்விதமாகத் தமது மாணவர்களையும் ஆசிரியர்களையும் அனுப்பிவைத்து சத்தியப் பிரசாரத்திற்குத் தக்க ஊன்றுகோலாக இருந்த அந்த மத்ரஸாக்களின் நாஜிர்களுக்கும் வந்தனம் செலுத்துகின்ருேம். இப்பிரசாரகர்களைத் தங்களூர்களுக்கழைத்து மகா நாடுகளைக் கூட்டுவித்து, ஆங்காங்குள்ள அசத்திய வாதங்களை அகற்ற உதவிபுரிந்த ஊர்தலைவர்கள்பிரபலஸ்தர்கள் மகாஜனங்கள் யாவருக்கும் பொதுவாகவும், ஹிஸ்புல்லாஹ்வின் பிரசாரத்திற்கு முக்கிய காரணமாக இருந்த கூத்தாநல்லூர் வாசிகளுக்கு சிறப்பாகவும் எமது சங்கம் தனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறது.

காதியானி அபிமானிகள் கண்விழிப்பார்களா?

[நடு நிலைமையாளன் நவில்வது]

சென்ற 8-9-33-ல் வெளிவந்த "தாருல் இஸ்லாம்" பத்திரிகையில் "உண்மை உலமாக்கள் உணர்வார்களா?" என்ற மகுடத்தின் கீழ் நியாயவாதி எழுதுவதாக ஓர் வியாசம் வெளிவந்திருக்கிறது அதில் ஆக்ஷேபணைக்குரிய விஷயங்கள் அனேகமுள. ஆனல் ஒரு சிலவற்றை மட்டில் இவண் குறிப்பிடுவாம்.

அடியற்கை மங்கலத்தில் மௌலானு முர்த்தஜா சாஹிபைப் பார்த்து ஒருவர், அவர் தாம் அஹ்மதியுமல்ல, காதியானியுமல்லவென்று கூறும்போது அவரை அஹ்மதியென்று எவ்வாறு கூறுவது? மேலும், உண்மையாகவே அஹ்மதியர்களாயுள்ளவர்கள் காபிர்களா? என்று இரண்டு வினக்களை வினவியதாகவும், அதற்கு இரண்டாவது வினவிற்கு பதில் கூறிவிட்டு முதல் வினவிற்குப் பதில்கூற முடியவில்லையென்றும், நியாயவாதி வரைகின்ருர். முதல் வினவிற்கு அவர் பக்கா அஹ்மதி தான் என்று ரிக்கார்டுடன் பதில் கூறிவரும் உண்மையை இவர் உணரவில்லைபோலும். இவரைத் தென்னுட்டுக் காதியானி மிஷனரியாக நியமிக்கப்பட்ட விவரம், "தத்துவ இஸ்லாம்" கமலம்-3, இதழ்-5 பார்க்க! அவரின் சம்பளம் விவரம் 2-8 29 தாருல் இஸ்லாம் பார்க்க! இவ்வாறே அவர் அஹ்மதியர்களின் பிரமாணப் பத்திரத்தில் கையொப்ப மிட்டு லாஹூர் பார்ட்டித் தலைவர் முகம்மத் அலியிடம் பைஅத்துச் செய்தும், லண்டனுக்குச் சென்று மாதச் சம்பளம் பெற்றும் அவர்களின் தென்னுட்டு மிஷனரியாக இருந்தவரை அஹ்மதியரென்று கூருமல் வேறென்னென்று கூறுவது? அவர் தன்னை அஹ்மதி யல்லவென்று கூறிக்கொண்டிருந்தாலும், அவர்களிடம் சம்பளம் வாங்கியதையும், பிரமாணப் பத்திரத்தில் கையொப்பமிட்டதையும் அவர் மறுக்கவில்லை. மேலும், இவர் காதியானி முகம்மது அலியின் சிஷ்யர்தாமென அஹ்மதிய சங்கத்தார் கூறியதை மறுத்து அச்சங்கத்துக்குக் கடிதம் எழுதி அதை வாபஸ் வாங்கும்படி செய்யவும் முன் வரவில்லை மேலும் இவர் லாஹூர் பார்ட்டியாருடைய காதியானி நூல்களை தமிழில் அப்படியே மொழி பெயர்த்து வெளியிட்டு வருகிருர். அவ்வா

றிருக்க, அவருக்காக வக்காலத்து வாங்கிய இந்த நியாயவாதிக்கு இவ்விஷயமொன்றும் புலப்படாது போனதுதான் விந்தை.

அவ்வியாசத்தினூடே இவரும் தலையிட்டு அஹ்மதிகள் முஸ்லிம்களே யென்று நிரூபிக்க முற்படுகின்றார். ஆனால், அவருக்கு நேர்மையான அத்தாக்ஷி யொன்றும் கிடைக்காமல் சென்னை ஹைக்கோர்ட்டும், சிங்கப்பூர் சூப்ரிம் கோர்ட்டும் அஹ்மதிகள் பக்கா முன்னேற்ற முஸ்லிம்களென்று தீர்ப்புக்கூறி இருக்கின்றன வென்று குறிப்பிடுகின்றார். ஒருவரை காபிரென்றோ, அல்லது முஸ்லிமென்றோ கணிப்பது இஸ்லாமிய ஷரீ அத்தா? அல்லது, அயல் மதத்தினரால் ஏற்படுத்தப்பெற்ற கோர்ட்டுத் தீர்ப்பாவென இவரை கடாவுகின்றேன். என்றாலும் அந்த ஜட்ஜ்மெண்டை இவர்கள் பதம்பதமாக அர்த்தஞ்செய்து வெளியிடுவார்களானால், அப்போதுதான் புலப்படும் இவர்களின் வண்டவாளம். குலாம் அஹ்மதைப் பின் பற்றுபவர்களான அஹ்மதியர்கள், காபிர்கள்தாம் என அகில உலக உலமாக்கள் தீர்ப்பளித்திருக் கின்றனரென்பது உலகப் பிரசித்தம். இவர் உண்மையில், காதியானி அஹ்மதியத்தை விரும்பவில்லையானால், அன்னார் விஷயத்தில் அனுதாபங் காட்டுவானேன்; இவர், அந்த அஹ்மதிகளின் நூல்களையும், பிரசுரங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருவானேன்? இவர் மூலியமாகத்தான் காதியானிக் கொள்கைகளை இத்தென்னாட்டு முஸ்லிம்கள் பலர் நம்பிவருகின்றனர். இவ்வேலையை இவர் தந்திரமாகவும், வெகுதிறமையாகவும் செய்து வருகின்றார். மற்றொரு புறத்தில் தான் காதியானியுமல்ல; அஹ்மதியுமல்ல என்று நொண்டிச் சமாதானங் கூறுவதையும் கைவிட்டவரல்லர்.

"ஜனங்களில் சிலர் (முனாபிகீன்கள்) நாங்கள் அல்லாஹ்வையும், கடைசி நாளையும் விசுவதித்தோம் என்று கூறுவர். ஆனால் அவர்கள் விசுவாசிகளல்லர்"

(சூரத்துல் பகரா)

"உம்மிடத்தில் முனாபிகீன்கள் வந்து நிச்சயமாய் நீர் அல்லாஹ்வுடைய திருத்தூதராய் இருக்குமென்று சாக்ஷியம் பகர்வதாகக் கூறுவர். என்றாலும் அல்லாஹு தஆலா நீர் தனது திருத்தூதர்தானென்பதை நன்கறிவான். ஆனால், நிச்சயமாய் அந்த முனாபிகீன்கள் பொய்யர்களா யிருக்கிறார்களென்று அல்லாஹு தஆலா சாக்ஷியம் பகர்கின்றான்."

(சூரத்துல் முனாபிகீன்)

எனவே, முனாபிகீன்களான உள்ளாளுங் கள்ளர்கள் சத்தியமிட்டு வாயால் சாக்ஷியம் பகரிடினும், அவர்களின் செய்கை அதற்கு விரோதமா பிருப்பதால், அவர்களின் சாக்ஷியம் பிரயோஜனமற்றதென்று மேற்கூறிய ஆயத்தில் அல்லாஹு தஆலா அருள் செய்துவிட்டான் உதாரணமாக திருடிய ஒருவன் அகப்பட்டுக் கொண்டால், தான் திருடியதை ஒப்புக்கொள்ளுகின்றானா? 100-க்கு 99 பேர் அவ்விதம் ஒத்துக்கொள்வதில்லையே. சாக்ஷிகள் மூலம் திருட்டு ருஜுவாகிவிட்ட பின், இவர்கள், தாங்கள் திருடவில்லையே யென்று வாயால்மட்டும் கூறுவதை ஒப்புக்கொண்டு கோர்ட்டார் அவனை விடுதலை செய்துவிடுகின்றனரா? இவ்வாறேதான் அஹ்மதிகளின் கதையும் இருந்து வருகின்றது. அவர்கள் பக்கா அஹ்மதி மிர்ஜாயியென்பது அவர்களது கையெழுத்துக் கொண்டே ருஜுவாகி வரும்போது அஹ்மதியுமல்ல, காதியானியுமல்ல, ஹனபி மத்ஹபைச் சேர்ந்தவர்களென்றே ஆயிரம் முறை கூறினாலும்—எழுதினாலும், அது பிரயோஜனமற்றதென்பது அல்லாஹ்வின் திருவசனத்தால் உணரக் கிடக்கின்றது. இவைகளெல்லாம் இந்த நியாயவாதிக்கு தோன்றாது போய்விட்டதுதான் விந்தையாக இருக்கின்றது.

மேலும், அவர் அஹ்மதிச் சங்கத்தில் சேர்ந்து லண்டனுக்குபோய் வேலைசெய்துவந்ததை ஜனப் மௌலானா முர்த்தஜா சாஹிப் சட்டசபையில் போய் ஐயங்காருடனோ ஐயருடனோ சேர்ந்துகொண்டு ஒட்டுக்கொடுப்பதற்கு ஒப்பிடுகின்றார் நமதுநியாயவாதி. சட்டசபையில் போயிருக்கிற மௌலானா முர்த்துஜாசாஹிப் அந்த ஐயங்காருக்கோ அல்லது ஐயருக்கோ சம்பளக்காரருமல்ல; அன்றி ஐயரின் மிஷனரியாகவு மிருக்கவுமில்லை. சுயேச்சையுள்ள ஒரு மனிதராகவே இருக்கிறார்கள். தனக்கு பிடித்தவைகளை ஆதரிக்கின்றார்கள். இதிலிருந்தேனும், அவர் லண்டனுக்குச் சென்ற முறை வேறு. மௌலானா முர்த்தஜா சாஹிப் அவர்கள் சட்டசபைக்

குச் சென்ற முறை வேறு என்பதை உணருவார்களாக!

அவர் ஹனபி மத்ஹப் காரராம்!

என்னே ஆச்சரியம்! அவர் ஹனபி மத்ஹபைச் சேர்ந்தவரென்று எண்பிக்க நியாயவாதி முயலுகின்ருர். அவர் உண்மையாகவே, ஹனபி மத்ஹபுக்காரராக இருக்கட்டுமென்றுதான் யாவரும் கோருகின்றனர். ஆனல். அவர், கிரியாம்சையில் ஹனபியாக இல்லையென்பது வெள்ளிடை. 'ஹனபி மத்ஹப் பிரகாரம், ஈசா (அலை.) அவர்கள் சிலுவையில் அறையப்படவில்லை; அவர்கள் மரணமடையவுமில்லை; கியாமத்து நாளுக்குச் சமீபத்தில் உலகத்தில் இறங்குவார்கள்; சுவர்க்க நரகம் உண்டு; அதில் வேதனை செய்யப்படுவதும் உண்மை; ஸ்தூல சரீரம், ஆன்மா ஆகிய இரண்டுந்தான் வேதனையடைகின்றது; நபிமார்களுக்கு அற்புதங்கள் உண்டு என்றெல்லாம் சட்டம் இயற்றப்பெற்றிருக்க இவைகளை எல்லாம் மறுத்து திருக்குர்ஆனுக்கும், ஹதீதுகளுக்கும் மாற்றமாய் எழுதியும் இயம்பியும் வருகிற ஒருவர் "ஹனபி" யாவாராவென்பதை சிந்தித்துப் பாருங்கள்.

இஃதொருபக்கல் கிடக்க ஹனபி மத்ஹபுக்கும், ஷாபி மத்ஹபுக்கும், இடையிலுள்ள அபிப்ராய பேதத்தைப்போல்தான் அவரின் அபிப்பிராய பேதமும் இருக்கிறதென்று ஒப்பிட்டுக்கூற முற்படுகிருர் நமது நியாயவாதி. என்னே இவரின் வியாக்கியானம் போனவாறு! இவர் அவ்வாறு ஒப்பிட்டுக் கூறுவது சரியல்ல. ஷாபி மத்ஹபுக்காரர்கள் திருக்குர்ஆன் முழுதையுமோ, அல்லது ஒரு சிலவற்றையோ மறுத்துக்கூற முன்வரவில்லை. அவரோவெனின் திருக்குர்ஆனின் பகிரங்க போதனையை மறுத்துக்கூற வன்றே முன்வந்திருக்கின்ருர்? என்ருலும் இனி, இவருடைய பிக்ஹு சட்டங்களை சிறிது கவனிப்போம்.

ஒருவன் தன் மனைவிக்கு ஹைலு (மாதவிடாய்) காலத்தில் தலாக்கு (விவாக விலக்கு)ச் சொன்னல் அந்த தலாக்கு செல்லத்தகுந்ததல்ல வென்று ஜவாஹிருல் புர்க்கான் 4-வது வெளியீட்டில் இவ்வாசிரியர்கள் வரைந்திருக்கின்றனர். இவ்வாறு எந்த இமாம்களும் கூறவில்லையே. அவ்விதமிருக்க இக்காலை இவர் ஓர் இமாமாய்த் தோன்றுகிருர் போலும்.

"பொதுவாக ஒப்புக்கொண்டிருக்கின்ற இறுதி தீர்ப்புநாள் விஷயத்திலும், பொதுவாக ஒப்புக்கொண்டிருக்கின்ற ஈஸா (அலை.) விஷயத்திலும், வியாக்கியானம் செய்வதில் ஒருவருக்கொருவர் ஒரு சிறிது அபிப்பிராயபேதப்பட்டிருப்பது சகஜமே! ஏனென்ருல், குர்ஆன் ஷரீபிலும், ஹதீதுகளிலும், பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கின்ற அந்த விஷயங்களை நாம் அப்படியே ஒப்புக்கொண்டிருக்கின்ருேம். இதுவே, நம் ஆயுள் முழுவதிற்கும் போதுமானது. அப்படி இருக்க அதற்குமேல் விரித்துக்கூற போகும்போதுதான் ஒருவருக்கொருவர் வித்தியாசம் தோன்றுகின்றது" என்று நியாயவாதி நிகழ்த்துகின்ருர். ஈஸா (அலை.) அவர்கள் விஷயமும், கியாமநாள் விஷயமும், பொதுவாய்க் கூறப்பட்டிருக்கின்றது என்று அவர் கூறுவது முற்றிலும் தவருகும். விஷயமோ அவ்வாறன்று முற்காலத்திலுள்ள காபிர்களுக்கும் மானிடன் இறுதிநாளில் எழுப்பப்படும் விஷயத்தில் பலத்த ஆக்ஷேபனை யிருந்துவந்தது. அவர்களின் ஆக்ஷேபனைகளை அகற்றுவான்வேண்டி, அல்லாஹு தஆலா அநேக திருவசனங்களை அருட் செய்திருக்கின்ருன். அவைகளை எல்லாம் ஒருங்கே திரட்டிப் பார்ப்போமாயின், ஓராயிரம் திருவசனம் சேர்ந்துவிடுமென்று கூறுவது மிகையாகாது.

அது விஷயங்களை விவரமாய் எடுத்துக் கூறியிருப்பதோடு ஹஜ்றத் உஸைர் (அலை) அவர்களையும், அவர்கள் கழுதையையும் மௌத்தாக்கி 100-வருடம்வரை அவ்விடத்திலேயே கிடக்கும்படி செய்து அதன்பிறகு அவர்களை உயிர்பித்தான். அவர்களின் கண் முன்னலேயே மடித்து மண்ணேடு மண்ணுக்கிடந்த கழுதையை உயிர்ப்பித்துக் காட்டினன். முதன் முதலாய் எலும்புகள் ஒன்று சேர்ந்து பலமடைந்தன. பிறகு, சதைகளும், தசைகளும், ரோமங்களும் வந்து சேர்ந்து கொண்டன. அதன்பின் அக் கழுதையை உயிர்ப்பித்து உஸைர் (அலை.) அவர்களுக்கு நிதரிசனமாய்க் காட்டினன். அதைக்கண்டு கியாமத்து நாளையில் உயிர்ப்பிக்கும் விஷயத்தை கண்கூடாய்த் தெரிந்துகொண்டார்கள். இதுவிஷயம், சூரத்துல் பகரா 259

* ஆயத்தில் விவரிக்கப்பட் டிருக்கின்றது. மேலும், கபுருகளிலிருந்தே மானிடர் எழுப் பப்படுவார்கள் என்னும் விஷயத்தையும், அல்லாஹு தஆலா அனேக வசனங்களில் குறிப்பிட்டிருக்கின்ருன். கபுருகளில் ரூஹு தரிபட்டிருக்கவில்லை யென்பது நிச்சயம் எனவே மானிடர்கள் ஸ்தூல சரீரத் துடனேதான் எழுப்பப்படுவர் என்னும் விஷயத்தை திருக்குர் ஆனைக்கொண்டு விவர மாய்த் தெரிந்துகொள்ளுகிருேம். இப்பகி ரங்க போதனை பொதுவாய்க் கூறப்பட் டிருக்கிறதென்று புலம்பி கியாமத்துநாளில் ஆத்மாக்கள்மட்டுந்தான் எழுப்பப் படும் எனக் கூறுவது அறிவீனமேயன்றி வேறல்ல. இதனாலேயே ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர் கள், "அல்முன்கிது மினல்லலால்" என் னும் நூலில் ஸ்தூல சரீரத்துடன் எழுப் பப்படுவதை யாரேனும் மறுப்பாராயின் நிச்சயமாய் காபிராய் விட்டார் என்று வரைந்திருக்கிருர்கள். அதுபோலவே ஈஸா (அலை.) விஷயமும் பகிரங்கமாக குர் ஆன் ஹதீதில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிலுவையில் அறைப்படவில்லை யென்றும், வான லோகத்தளவில் உயர்த் தப் பட்டார்களென்றும், கியாமத்து நாளில் இறங்குவார்களென்றும், அது சம்பந்தமாய் அநேக விஷயங்களுடன், திருக்குர் ஆனில் கூறப்பட்டிருக்கின்றது. குறிப்பாக சஹீ ஹான ஹதீதுகளிலும், ஈஸா நபி விஷயமாக சந்தேகங் கொள்வதற்கு இடமில்லாது எல்லா விவரங்களும் அறிவிக்கப் பட்டிருக் கின்றன. நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஈஸாநபி அவர்கள் சம்பந்தமாய் 100-க்கு அதிகமான விவரங்களைக் கூறி இருப்பதாக ஹதீது கிரந்தங்களில் வரையப்பட்டிருக்கின் றது.

விஷயம் இவ்வாறிருக்க ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் யூதர்களால் சிலுவையில் அறைப் பட்டார்களென்றும், இறந்துபோய் ஸ்ரீநகர், கான்யார் வீதியில் அடக்கப்பட் டார்களென்றும், மஹ்ஷரில் மானிடரின் ஆன்மா மட்டுந்தான் எழுப்பப்படுமென்றும் அஹ்மதிகள் எழுதிவைத்திருக்கிருர்கள்.

தவிர 1-11-29 தா. இ. இல் தமது நூற்க ளில் எழுதப்பட்டுள்ள காதியானிக்கொள்கை களை திருத்தி ஒழுங்குசெய்து விடுவதாக அவர் எழுதி வெளியிட்டார். தமது நூற்க ளில் தப்பும், தவறுமில்லாதிருக்கின் திருத்து வதர்க்கு ஏன் அவர் ஒப்புக்கொள்கின்ருர்? இவ்வுண்மையை யுணராத நியாயவாதி ஹிஸ் புல்லாக்களைக்குறைகூற முன்வந்து இச்சத்தி யப்பிரசாரத்தை மார்க்கத்திற்கு விரோத மானதென்று கூற முற்பட்டிருக்கிருர். என்னே! இவரின் அறியாமைக்கூற்று. இப் பொழுது உலமாக்கள் என்ன சொல்லிவிட் டார்கள். அவர் திருத்துவதாக அறிவித்த விஷயங்களை உடனே திருத்தும்படியும் அக் கெட்ட கொள்கையை முஸ்லிம்களிடை பர வாதிருக்கும்படியும் தானே பிரசாரம் செய் கின்றனர். இதற்காகவா அவர்களின் பிரசா ரம் பொய் பிரசாரமாகி விடுகின்றது. இவை கள் எல்லாம் இந்த நியாயவாதிக்கு விளங் காமற்போன காரணந்தான் புரியவில்லை?

நியாயவாதி எழுதியுள்ள விஷயங்களில் ஒருவிஷயம் மிகவும் விந்தைக்குரியதா யிருக் கிறது. "நமது தீனுல் இஸ்லாம் மார்க்கம் எந்த மனிதனாலும் புரட்டப்படக்கூடியதல்ல அப்படி இருக்க ஒருசிலர் தங்களுக்கு கிடைத் துள்ள செல்வாக்கை உபயோகித்து........... இஸ்லாத்திற்கே தினே தினே பாடுபட்டுவரு கின்ற ஒருவரை குறை கூறுகின்றனர்" என வரைகின்ருர். நமது தீனுல் இஸ்லாம் எந்த மனிதனாலும் புரட்டிவிட முடியாதென் பது வாஸ்தவந்தான். ஆனல் அவ்வாறு புரட்டுவதற்கு எவரும் முயற்சி செய்யமாட் டார்களென்பதல்ல. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவுளமானார்கள்."எனக்குப்பின் அநேக தஜ்ஜால்கள் கிளம்பி என்னுடைய தீனுக்கு இன்னல்களை விளைவிப்பார்கள். ஆனல் என்னுடைய உம்மத்துகள் அவர்களு டன் போராடி ஜெயம்பெறுவார்கள்" என் பதே. எனவே இத்திருவாக்கியத்திற் கேற்ப புல்லர்கள் புண்ய மார்க்கத்தை புரட்ட முற் படுவதும் அவர்களை எதிர்த்துப் பிரசாரம் புரிவதும் அன்றுமுதல் இன்றுவரை இருந்து வருகிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கா நிற்கிறது. இதையுங்கூட அறியாது இந்த நியாயவாதி நியாயங்கூற

* இவ்விஷயம் அரபுத்தமிழில் எழுதப்பட்ட பத்ஹுல் கரீம் 1-வது வால்யூம் 162-ம் பக்கத் பக்கத்தில் விவரமாய் கூறப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் விபரமாகத் தெரிந்துகொள்ள லாம்.

வந்ததுதான் நியாய விரோதமாக இருக்கிறது. எனவே, இவர் தம்மை நியாயவாதி என்று போட்டுக்கொண்டதற்குப் பதிலாக அநியாயவாதி என்று எழுதிக்கொண்டிருந்தால் அது மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும் என்பதை அறிவித்துக் கொள்வதுடன் இச்சிறு வியாசத்தை முடித்துக் கொள்கிறேன்.

இதுபொழுது முஸ்லிம்கள் செய்யவேண்டுவ தென்னை!

இதுகாலை, உலகமுழுதிலுமுள்ள முஸ்லிம்களை அதிலும் குறிப்பாய் இந்தியாவின்கண் வதிந்துவரும் 8-கோடி முஸ்லிம்களாய நஞ்சோதிரர்களை வறுமை என்னும் கொடிய வியாதி பீடித்திருக்கிறதெனக் கூறுவதில் எவருக்கும் ஆக்ஷேபனை இராதென திண்ணமாய்க் கூறலாம். நம் சமூகத்தினருக்கிடையே வெவ்வேறு விஷயங்களில் அளவற்ற விகற்பங்கள் காணப்பட்ட போதிலும் இதனை யாவரும் ஏகமாய் ஒற்றுமையோடு ஒப்புக்கொண்டே தீருவர் என்பது திண்ணம். எனவே, நம் முஸ்லிம் சமூகத்தினர் அளவற்ற வறுமையால் பீடிக்கப்பட்டிருப்பதால் தினைதினை அவர்களின் நிலைமை க்ஷீணதிசை யடைந்துகொண்டே கீழ் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதையும் அவர்களின் மானமரியாதைகளில் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்பதையும் யாவரும் நன்கறிவர். ஆகவே, இவ்வாறான கொடிய வியாதியைப் போக்குவதற்கு நாம் முற்பட்டு வரலாகாதா? அவசியம் வந்தே தீரவேண்டும்.

ஆனால், சிறிது காலமாக நம் சமூகத்திலுள்ள ஒவ்வொரு கூட்டத்தினரும் தங்கள் சிற்றறிவுக் கெட்டியவரை வறுமையென்னும் படுகுழியிலிருந்து வெளிவர முயற்சி செய்வதி லீடுபட்டுக்கொண்டு தான் வருகின்றனர். என்றாலும் காலத்தின் மாறுபாட்டிற் கேற்ப இதர சமூகத்தினர் தினைதினை மேன்பாடு அடைந்து செல்வதையும் முஸ்லிம் சமூகத்திலுள்ள தலைவர்களும் ஐசுவரியவான்களும் ஐசுவரியம் குன்றி தரித்திரவான்களின் கூட்டத்தில் வந்து சேர்ந்து வருவதையும் கண்கூடாக பார்த்து வருகிறோம். முஸ்லிம்கள் கீழ்திசையின் பக்கல் விரைந்து செல்வதைப்பார்த்தால், கூடிய சீக்கிரம் இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் தரித்திர திசையுடையவர்களில் சேர்த்து கணக்கிடப் பட்டுப்போய் விடுவார்களோ வென ஐயுற வேண்டியதாக யிருக்கிறது. முஸ்லிம்களுக்கு எவ்வளவு காணி, பூமி, சொத்து சுதந்திர மிருந்ததோ அதில் குறைந்த பக்ஷம் $\frac{3}{4}$ பாகம் அவர்களின் கைவிட்டு இதர சமூகத்தினரிடத்திற்குப் போய்விட்டது. மீதமுள்ள கால்பாகத்தில் $\frac{1}{4}$ பங்கு வட்டிக் கடனுக்காக அடமானம் வைக்கப்பட்டிருப்பதால் அதுவும் கூடிய சீக்கிரம் முஸ்லிம்களின் கைவிட்டுப் போய்விடக் கூடியதாக யிருக்கின்றது. இவைகள் போக மீதமுள்ள $\frac{1}{16}$ பாகமும் இவ்வாறே காலம் சென்றுகொண்டே போகுமானால் 20, 25-ஆண்டுகளுக்குள் ஒன்றுமில்லா தொழிந்து போய்விடும்.

வட்டியைவிட்டு விடுதலை.

முஸ்லிம்களுக்குக் கிடைக்கும் வருவாயில் பெரும்பாகம் வட்டியாகக் கொடுக்கப்பட்டுப் போய்விடுகிறது. இதற்காக முதன்முதலாக முஸ்லிம்கள் வட்டிக் கடன்களை நிவர்த்தி செய்வதற்குள்ள மார்க்கத்தைக் கண்டு பிடிக்கவேண்டும். இதற்காக ஆங்காங்கே நமது தலைவர்களும் சமூகப்பெரியார்களும் வட்டியால் விளையும் பாதங்களையும் அது விஷயமாய் நமது சன்மார்க்கம் கட்டளையிட்டிருப்பதையும் பொது ஜனங்கள் பால் எடுத்துக் காண்பிக்கவேண்டும். இதுவன்றி முஸ்லிம்கள் சாதாரண வாழ்க்கையைக் கைகொண்டு தங்கள் வருவாயில் சிலதை மீதப்படுத்தி வைப்பதற்குள்ள பழக்கத்தைக் கைகொள்ளும்படி செய்வதற்கு முயற்சித்தல் வேண்டும்.

மனைவிமக்களின் வீண்செலவு

வீண்செலவு செய்யும் பழக்கம் முதன்முதலாக மனைவிள், மக்களினின்றுமே ஏற்படுகிறது. இதற்காக ஆரம்பத்தில் அன்னோருக்குக் கணக்கைக் கற்பித்து குறிப்பிட்ட ஒரு தொகையைக் கொடுத்து சிக்கனமாகச் செலவு செய்துவரும்படிசெய்து, குறிப்பிடப் பட்டவைகளைப் பார்க்கினும் குறைவாகச் செலவு செய்திருக்கும் மாதருக்கோ அன்றி பிள்ளைகளுக்கோ இனமளிக்க வேண்டும், சதாவும் பாக்கிட்டில் காசு பணத்தை வைத்துக்கொள்ளாது, கடைவீதிக்குச் செல்லுங்கால் தேவையான சாமான்கள் வாங்குவதற்கு மட்டும் ரூபாய் கொண்டுபோகவேண்டும். மேலதிகமாகக் கொண்டு செல்வோமாகில் கண்ட சாமான்களை எல்லாம் வாங்குவதற்கு மனவிரும்பும். வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்வதே விவேகிகளின் செயலாகும் என்பதை சதாவும் கவனத்துக்குக் கொண்டு வந்து வருவாயை அதிகப்படுத்திக் கொள்வதற்கே முயற்சிக்க வேண்டும். அதிலும் வரவு செலவுகளை எழுதிப் பார்ப்பது முக்கியமாகும்.

சிக்கனத்திற்கு வழி

நமது ஐசுவரியங்கள் அநேகமாக உணவு உடை, கட்டடம், மருந்து, நகை, சடங்குகளை நிறைவேற்றல், சுவண்டியை அனுபவிப்பது போன்றவைகளில் தான் செலவாகிக் கொண்டுபோகிறது ஆனால் இவைகளிலொன்றையும் விட்டுவிடுவதற்கு இயலாதவர்களாயிருந்து வருவதால், அவைகள் ஒவ்வொன்றிலும் சிக்கனத்தைக் கைகொள்வது அத்தியாவசியமாகும். உதாரணமாக, உணவை எடுத்துக் கொள்வோம்: வெகு பிரயாசையோடு அதிகச் செலவு செய்து சமைத்த சாப்பாடுதான் ருசி பொருந்தியதாகவும் ஆரோக்கியத்தை அளிக்க வல்லதாயுமிருக்கிறதென்று நம்மிலனேகர் கருதியிருக்கின்றனர். உண்மையில் பதார்த்தங்களின் ருசி விருப்பத்தைப் பொருத்திருக்கின்றது. சாப்பாட்டின் தேவை ஏற்பட்ட நேரத்தில் சாதாரண சொற்பக் கிரயமுள்ள சாப்பாடு அளவற்ற ருசியுள்ளதாகத் தோன்றும்; தவிர சாதாரண சாப்பாட்டைப் பார்க்கினும் கஷ்டத்துடன் தயார் செய்த விலைமதிப்புள்ள சாப்பாடானது மனிதனுக்கு அதிகம் கெடுதி செய்கிறது. சீக்கிரம் ஜீரணம் ஆய்விடுவதிலும் தேகத்திற்கு எளிதில் பலம் கொடுப்பதிலும் இரத்த சுத்தி செய்வதிலும் சாதாரண உணவுதான் அதிகப் பிரயோசனமளித்து வருவதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். தவிர நாம் முன் வந்து பலவாறான ருசி பொருந்திய பதார்த்தங்களையும் தேவையற்ற உணவுகளையும் விட்டு சாதாரண உணவுகளைத் தெரிந்து கொள்வோமாகில் நமது செலவுகள் மிக்க குறைந்து விடும்; திரேகத்திற்குக் கெடுதி ஏற்படுவதற்குப் பகரமாய் ஆரோக்கியம் ஏற்பட்டு விடும்.

(2) உடுப்பு: இதரர் நம்மைப் பார்த்து மதிப்பதற்காக விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து கொள்ள நாடுகிறோம். இந்த எண்ணத்தை விட்டு, ஆடைகள் அணிவது ஆரோக்கியத்துக்காகவும் தூய்மையோடிருப்பதற்காகவுமென்று கருதுவோமாகில் நமது ரூபாய்களிலனேகம் மீதப்பட்டுப் போய்விடும் இதுகாலை விலைக்குறைவில் நல்லவிதமான உடைகள் கிடைக்கின்றன.

(3) கட்டடம்: உணவு, உடுப்புக்குப் பின் வாஸஸ்தலத்தின்மீது கவனஞ் செலுத்துவது அத்தியா அவசியமாகும். ஆனால் கட்டடங்களில் ரூபாய் செலவு செய்வது உடை, உணவு இவைகளில் பணத்தை விரயஞ் செய்வதைப் போல் அவ்வளவு கெடுதியுடையதல்ல. ஐசுவரியம் கைவசமிருக்குமானால் உறுதியான தக்க நடுத்தரமான ஒரு இடத்தைத் தயார் செய்து கொள்ளவேண்டும். வீடு, அழியாப் பொருளைப்போலிருக்கின்றது. அஃது அவனுக்கு மட்டுமின்றி அவனது சந்ததிகளுக்கும் உதவுகின்றது. உறுதியான தூய்மை பொருந்திய வீடானது மனிதனின் சுகாதாரத்துக்கு இன்றியமையாச் சாதனமாக இருக்கின்றது.

(4) ஊண், உடை: இவைகளில் நாம் அளவற்ற பிரயாசையோடு அபரிமிதமான செலவு செய்து வருவது மானிடனை நாசமாக்கி விடுவதற்குக் காரணமாகயிருந்து வருகிறது; இவைகளில் சிக்கனத்தை அனுஷ்டிப்பது கொண்டு பெருவாரியான ரூபாய்கள் மிச்சப்பட்டுப் போய்விடுகிறது. ஆனால் முக்கியத் தேவையையும் குறைத்து நிர்வாணமாகத் திரியும்படியும் சுகமற்ற வாழ்க்கை நடத்தும்படியும் யாரும் கூறவில்லை. வருவாய்க்குத் தக்கவாறு சிக்கனத்தைக் கடைபிடித்து

வாழ்க்கை நடத்தி வரும்படியே போதனை புரியப்படுகிறது.

(5) மருந்து: வைத்திய சிகிட்சை பெறுதல், மருந்து சாப்பிடுவது இவைகளில் அநேக ரூபாய்கள் செலவாய் விடுகின்றன. நாம், நமது தேக நிலைமையை தக்கவாறு அறிந்து ஊண் தீனில் கவனஞ் செலுத்தி பேணுதல் செய்து வருவோமாயின் மருந்து சாப்பிடுவதை விட்டுவிடுதலை பெற்றுவிடுவோம். நாம், தக்க முறையில் பேணுதலுடன் நடந்து வராக் காரணத்தினால் அநேக வியாதிகளுக்கு ஆளாகிவிடுகிறோம். இவ்வாறு பேணுதலற்றிருப்பது நாம் சுகஜீவியாக வாழ்வதற்கு இடையூறாக இருப்பது மட்டுமன்றி நம்மை நிம்மதியற்றவர்களாக ஆக்கிவிடுவதுடன், நம்முடைய சந்தோஷ வாழ்க்கையைக் கெடுத்துவிடுவதாகவும் அமைந்து விடுகின்றது.

(6) நகை: இதுவும் உல்லாசமாக வாழ்வதற்கு வேண்டற்பாலதாக இருக்கின்றது. நகைகளை அதிகமாக்கிக் கொள்வதும் ரூபாய்களைச் சேகரஞ்செய்து வைப்பதிலுள்ளதாகும். ஆனால், வெள்ளி தங்கத்தின் விலையில் ஏற்றத் தாழ்வு ஏற்படுவதினால் பெரும் நஷ்டமடையும்படி நேரிடுவதுடன் நகை செய்த பிறகு ஒரு ரூபாய் தங்கம் முக்கால் ரூபாயாகவும், ஒரு ரூபா வெள்ளி எட்டணா மதிப்புக்கும் வந்துவிடுகிறது. இதுகாலை அநேக இடங்கில் புழக்கத்திலிருக்கும் நகைகள் பெயரளவில் தங்கமென்றிருந்தபோதிலும் அவை சில காலம் பரிமாற்றம் செய்யப்பட்டபின் உறுக்கிப் பார்ப்போமானால் ரூபாய்க்கு நான்கு அணாகூட தேறாத நிலைமைக்கு வந்துவிடுகிறதைக் காண்கிறோம். எனவே, முஸ்லிம்கள் தாங்கள் க்ஷீணதிசை யடைவதைப் பயப்படுவார்களானால் நகையில் வீணாகப் பணத்தைப் போடாதிருப்பார்களாக. எனவே, பெண்களுக்கு சாதாரணமான விலை குறைவாகவுள்ள இரண்டு மூன்று நகைகளைக் கொண்டு போதுமாக்கிக்கொள்ளும்படி செய்வதே சாலச் சிறந்ததாகும்.

சடங்குகளை ஒழித்தல்

முஸ்லிம்களை கீழ் திசைக்குக் கொண்டு சென்று நஷ்டவாளிகளாக ஆக்கிவைப்பது அர்த்தமற்ற சடங்குகளேயாகும் அச்சடங்குகளானது நம்முடைய சம்பாத்தியங்களின் பெரும் பாகத்தை நாசமாக்கி விடுகின்றது. இதனைத் தடுப்பதற்காக முஸ்லிம்கள் இயன்றவரை சுப, மங்கள காரியங்களில், சன்மார்க்க ஆசாரத்தைப் பின்பற்றி நடப்பவர்களாக அமைந்து விடவேண்டும்; யார் கேலி பரிகாசஞ் செய்த போதிலும், தான் ஏற்படுத்தியிருக்கும் எல்லையைவிட்டு சற்றேனும் கடந்து விடலாகாது. இவ்வாறு கூறுவதனால் ஸ்ரீவதனம் கொடுக்கலாகாது; கலியாணத்தில் வலீமா சாப்பாடு அளிக்கலாகாது; மரணமடைந்தவர்களுக்காக தான தருமம் செய்யலாகாது என்று கூறுவதாகக் கருதிவிடலாகாது. இவ் விஷயங்களிலெல்லாம் நடுத்தரமான முறையையும், தன் அந்தஸ்துக்குத் தக்க விதத்தையும் கைக் கொள்ளவேண்டுமென்றே கூறுகின்றோம்.

இக் காலை நம் முஸ்லிம் சமூகத்தார்களிடையே மட்டில்லா—கணக்கற்ற பழக்க வழக்கங்கள் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. பிள்ளை இப்பூ உலகினில் ஜனிப்பதற்கு முன்னிருந்து அது கிழவியாகி மரணமடைந்த பிறகுங் கூட, அதற்காக தேவையற்ற—வீண் அர்த்த மற்ற அநேக சடங்குகள் நிறைவேற்றப்படுகின்றன. சிசு மாதாவின் வயற்றிலிருக்கும் போதே அதற்காகச் சடங்குகள் நிறைவேற்ற முற்பட்டுவிடுகின்றனர். அதற்குப் பின் ஆயிரக்கணக்கான சடங்குகள் நிறைவேற்றி வைக்கப்பட்டு மரணமடைந்த பின்னும் எத்தனையோ சடங்குகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. இவ்வாறு நம் சோதிரர்கள் சடங்குகளை நிறைவேற்றி வைப்பதற்காகச் செலவிடும் ரூபாய்களில் பெரும் பாகம் வட்டிக்கு வாங்கிய கடனாகவே இருக்கின்றது. இக் கடன்களின் பயனாய் நம் முஸ்லிம்களின் காணி பூமிகளெல்லாம் இதர சமூகத்தார்களிடம் போய்விடுவதற்கும் முஸ்லிம்கள் ஏழைகளாய் பிழைப்புக்கு இதரர்கள் கைகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதற்கு ஆளாய்விடுவதற்கும் ஹேதுவாய் விடுகின்றது. இன்னோர் ஏழைகளாய் விடுவது கொண்டு கடைசியாய் மனிதத் தன்மையின் உரோஷம் நீங்கி மதிமயங்கியவனே போலாய் விடுகின்றான். இதனைத் தடுப்பதற்காக முஸ்லிம்கள், அர்த்தமற்ற வீண் சடங்குகளை நிறைவேற்றுவதை விடுத்து வீண் ஆடம்பரச் செலவுகள் செய்வதைவிட்டுத் தவிழ்ந்து நடந்து கொள்வது முஸ்லிம்களின் முக்கியக் கடமையாகும்.

மீதப்படுத்தும் வழி

ஐசுவரியங்களைச் சம்பாத்தியஞ்செய்வதில் மனிதன் எவ்வளவு தூரம் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமோ அதைவிட பதின் மடங்கு சிக்கனத்தை அனுஷ்டிப்பதில் கஷ்டத்தை அடைய வேண்டியதாகயிருக்கிறது. ஒருவனிடத்தில் ஏதாகிலும் கொஞ்ச ரூபாய் மீதப்பட்டுவிடுமானால், முதன்முதலாக அவனது அபிலாஷைகள் அன்னோனை ஏமாற்ற முற்படுகின்றன. அதினின்று அவன் தப்புவதே பெரும் கஷ்டமாய் விடுகின்றது. எனவே, அநேகர் அவ்வபிலாஷைகளிற் சிக்குண்டு கையிலுள்ள ஐசுவரியங்களைச் செலவு செய்துவிட்டு வெறுங்கையாக உட்கார்ந்து விடுகின்றனர். ஒருக்கால் அவன் புத்திசாலியாக இருந்து மனோ இச்சைக்கு வழிப்படாது தப்பித்துக்கொள்வானாகில் அவனிடம் ஐசுவரியம் அப்படியே இருந்துவிடும். ஆனால் அதுவும் வெகு காலத்திற்கு இருப்பதில்லை. இதற்கிடையில் சடங்குகளை நிறைவேற்றுவதென்பது அன்னோனுக்குக் குறுக்கிட்டு விடுகின்றது. அது விஷயத்தில் இவனது மனம் விருப்பங் கொள்ளாது போயினும் இதரர்களைப் பார்த்தாகிலும் அல்லது மற்றவர்களின் வற்புறுத்துதலுக்காகிலும் பணப்பையைத் திறந்து வைப்பதற்குள்ள நிற்பந்தத்திற்கு ஆளாய் விடுகின்றான். எவர்கள் தன்னடக்கத்தோடு செலவு செய்ய நாடுகின்றார்களோ அன்னோர் இருவித பகைவர்களோடு யுத்தம் புரியவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டு விடுகிறது. அவ்வாறு யுத்தம் புரிந்து வெற்றி பெறுவார்களாயின் கோரிய பலனை அடைவார்களென்பது திண்ணம். முந்திய விரோதி, தன் நப்ஸாகயிருக்கும். அது பெரும் கஷ்டத்தோடு சுவை பொருந்திய பதார்த்தங்களைப் புசிப்பதையும், அநேக சுவண்டிகளை அடைவதையும் விட்டுவிட வேண்டியிருக்கிறது. இரண்டாவது விரோதி அவனது மானமரியாதைகளைக் காப்பாற்றி ஸ்திரப்படுத்தி வைப்பதாகக் கூறும் கூட்டத்தாராகும். அன்னோர் சொற்பமாகச் செலவு செய்வதால் இன்னோனது மரியாதைக்கே பங்கமேற்பட்டு விடுகிறதெனப் பறை சாற்றுகின்றனர். ஆகவே, முந்திய பகைவனை மிகைத்துவிடுவது இலேசான காரியமாகும். அது, தன் நப்ஸை அடக்கி ஆடம்பரமற்ற வாழ்க்கையைக் கைக்கொள்வதாலேற்பட்டுவிடும். இரண்டாவது பகைவனை மிகைப்பதற்குப் பற்பலவாறான சங்கங்களை அமைத்து அதன்மூலம் சிக்கனத் திட்டம் தயாரித்து பொதுஜனங்களுக்கு சிக்கனத்தால் ஏற்படும் பலாபலன்களை நன்கு விளக்கிக் காண்பித்து அதன் பிரயோசனத்தை அன்னோர் தெரிந்துகொண்டபின் தான் அக்காரியம் சித்திபெறும். ஆகவே, முஸ்லிம் சமுகத் தலைவர்களும் அறிவாளிகளான கியாதியஸ்தர்களும் முதன்முதல் தாங்களே சிக்கனத்தை அனுஷ்டித்துக் காட்டி இதரர்களும் அதனைப் பின்பற்றி நடப்பதற்குள்ள ஹேதுவுகள் செய்து வைத்து சிக்கனத்தைக் கைக்கொள்ளாது வீண்செலவு செய்பவர்களை யாவரும் வெறுக்கும்படி செய்து சாதாரண வாழ்க்கையைக் கைக்கொள்ளும்படி செய்தாலன்றி அப்பகைவனை வெல்ல முடியாது. மேலும், சிக்கனத்தை அனுஷ்டிப்பவனை யாவரும்போற்றிப் புகழ்வதற்கும் வீண் டாம்பீகச் செலவு செய்பவனை வெறுப்பதற்கும் ஒவ்வொரு தெருவிலுமுள்ள தலைவர்கள் ஒன்று கூடிய யாவருடைய ஆலோசனையின் மீது சிக்கனத்திட்ட மொன்று தயாரித்து வீண்செலவுகளை யாவரும் விட்டுவிடவேண்டுமென்று அதில்கையெழுத்துச் செய்யவேண்டும். ஆனால் இவைகளுக்கெல்லாம் ஒற்றுமைதான் பிரதானமாகும். ஊரில் வேறு ஏதாகிலு மொருவிஷயத்தில் ஒற்றுமைப் பங்கம் விளைவிப்பார்களாயின் அன்னோரின் அடாச்செயலால் இச்சிக்கனத் திட்டம் கைவிடப்பட்டுபோய் விடுமாதலின், உண்மையிலேயே திரிகரண சுத்தியோடு சிக்கனத்திற்காகப் பாடுபடுவோர் ஊரில் எக்காரியத்திலும் பிணக்கு யேற்படாது பார்த்துக் கொள்வது அத்தியா அவசியமாகும். அவ்வாறு செய்வார்களாயின் உண்மையிலேயே அன்னோர் நம் முஸ்லிம் சமுகத்தினரின் க்ஷீணதிசையை யுன்னி கவலைப்படுவோர் என்று கூறுதல் சாலும். இவ்வாறு சிக்கனச்செலவை கைகொள்வதனால் அநேகப் பிரயோசனங்கள் ஏற்படுவது கண்கூடு. ஆகவே சமுகத்தாரின் முன்னேற்றத்தைக்கருதி சிக்கன முறையைக் கைக்கொண்டு முன்னேற்ற மடைவதற்கு முயற்சிப்போமாக.

மார்க்கத் தீர்ப்பளிக்க காஜீவேண்டும்

(மௌலானா முப்தீ அஷ்ரப் அலீசாஹிப் தஹானவீ)

வினா:—இதுகாலை சட்ட நிரூபண சபையில் ஸ்தானம் வகித்திருக்கும் முஸ்லிம்பிரதிநிதிகளிற் சிலர், இந்தியாவில் முஸ்லிம் சமுகத்தினருக்காக மார்க்கச் சட்டங்களைத் தீர்மானஞ் செய்வதற்காக காஜீ ஸ்தானம் ஏற்படுத்த வேண்டுமென்று கவர்ன்மெண்டாரிடம் விண்ணப்பித்துக் கொள்ளப் போகிறபடியால் அதுசம்பந்தமாய் அடியில் குறிப்பிடப்படும் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது ஆகவே இவ் விஷயங்களுக்கு பதிலளிக்கும்படி மேன்மை தங்கிய உலமாக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(1) மார்க்க சட்டப்படி முஸ்லிம்களுக்காக தனியே காஜீ ஏற்படுத்துவது அவசியமா?

(2) அந்த காஜீ எவ்வாறான அம்சம் பொருந்தியவராக யிருக்கவேண்டும்?

(3) அவர் எந்தெந்த விஷயங்களில் தீர்ப்பளிக்கவேண்டும்?

(4) எவ் விஷயத்தைத் தீர்ப்பதற்கு காஜீ நியமிக்கப்படுவது அவசியமோ அவ்விஷயங்களில் முஸ்லிம் அல்லாதார்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததா?

(5) எங்காகிலும் முஸ்லிம்கள் ஏகோபித்து விவாகப் பிரிவினை முதலிய விஷயங்களுக்கு ஒருவரை காஜீயாக நியமித்துக் கொள்வார்களாயின் மார்க்கப்படி அவர் காஜீயாக ஆய்விடுவாரா? இல்லையா? எந்த விஷயத்திற்காக காஜீ நியமனம் அவசியமாக யிருக்கின்றதோ அது விஷயங்களுக்கு அவரின் தீர்மானத்தை அங்கீகரித்துக் கொள்ளலாமா?

(6) கவர்ன்மெண்டார் தாங்களாகவே இந்தியாவில் யாதொரு முஸ்லிமை விவாகப் பிரிவினைபோலொற்றவைகளுக்காக காஜீயாகவோ, அதிகாரியாகவோ நியமனஞ் செய்துவிடுவார்களாயின், அவர் மார்க்கச் சட்டப்பிரகாரம் காஜீயாக ஆய்விடுவாரா? அவர் விவாகப் பிரிவினை முதலியவைகளில் தீர்ப்பளிப்பது செல்படியாகுமா, கூடாதா?

(7) இது சமயம் சட்ட நிரூபண சபையில் அங்கம் வகித்திருக்கும் மெம்பர்கள் காஜீநியமன விஷயமாய்க் கொண்டுவரப்போகும் பிரேரணைக்குப் பொது முஸ்லிம்கள் ஆதரவளிக்க வேண்டுமா? இல்லையா? மேலும் அதுவிஷயத்தில் நாம் முயற்சிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறோமா, இல்லையா?

விடை:—(1) தாருல் இஸ்லாம் போலொற்ற முஸ்லிம் இராஜியங்களில் மார்க்கத் தீர்ப்பளிப்பதற்காக காஜீயை ஏற்படுத்துவது முஸ்லிம்கள்மீது கடமையாகும். முஸ்லிம் இராஜியமல்லாத இந்தியாபோலொற்ற இடங்களில் காஜீ நியமன விஷமாய் கவர்ன்மெண்டாரிடம் முறையிடு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

காஜீ, அதிகாரம் கொடுக்கப்பட்டவராக யிருத்தல் வேண்டும் எனவே அவர் எங்கு காஜீயாக நியமிக்கப்படுகின்றாரோ அங்கு அவருடைய அதிகாரம் செல்படியாக வேண்டும். ஒருவர் காஜீயாக நியமிக்கப்பட்டு அவருடைய தீர்ப்புச் செல்படியாவதற்கு அவரில் அநேக அம்சங்கள் பொருந்தி யிருக்கவேண்டும். அவர் முஸ்லிமாகவும் வயதை அடைந்தவராகவும், அடிமை அல்லாதவராகவும், கண் பார்வையுடையவராகவும் படர் பேசுவது கொண்டு தண்டனை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும், மேலும் காஜீப்பதவி வகிக்கக் கூடியவர் மார்க்கக் கல்வியைக் கற்றறிந்த ஆலிமாகவும் இருக்க வேண்டியது அத்தியா அவசியமாகும். ஒருக்கால் முஸ்லிம்களெல்லோரும் சேர்ந்து ஆலிமல்லாத ஒருவரை காஜீயாக நியமித்து விடுவார்களாயின் அவர் விவகாரங்களைத் தீர்த்து வைப்பதில் உலமாக்களிடம் விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து அதன்படி தீர்ப்பளிக்க வேண்டும். இது விஷயமாகவும் ஒருக்கால் தவறுதல்களேற்பட ஹேதுண்டாயிருக்கிறது எனவே, உலமாக்கள் அளிக்கும் மார்க்கத் தீர்ப்பை ஆலிமல்லாத அந்த காஜீ நன்கு தெரிந்து

கொள்ளாது போயின் பெரும் தவறுகளேற்பட்டுவிடும் ஆகவே, காஜீயைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் பாத்தியதை முஸ்லிம்களுக்கு இருக்கும் நிலைமையிலும், காஜீப் பதவிக்குத் தகுதியான ஆலிம் இருக்கும் போதும், அவரைவிட்டு ஆலிமல்லாதாரை காஜீயாகத் தெரிந்தெடுப்பதனால் முஸ்லிம்கள் பாவிகளாய் விடுகின்றனர். மார்க்க விவகாரங்களைத் தீர்ப்பதில் எவைகளுக்கு காஜீ அவசியமாக யிருக்கின்றதோ அவ் விவகாரங்களில் முஸ்லிம் அல்லாத அதிகாரியின் தீர்ப்புப் போதியதாக மாட்டாது. எனவே முஸ்லிம் அல்லாத அதிகாரியின் தீர்ப்பினால் விவாகப் பிரிவினை ஏற்படமாட்டாது; தலாக்கும் உண்டாக மாட்டாது; தேசாந்தரம் சென்று, இருக்குமிடம் தெரியாதவனை மரணமாய் விட்டதாகத் தீர்ப்பளிக்கவு முடியாது.

இஸ்லாம் மார்க்கத்தில், சில விஷயங்களில் காஜீ அதாவது முஸ்லிம் அதிகாரி தீர்ப்பது தான் செல்படியாகக் கூடியதாக இருக்கின்றது. அவ் விஷயங்களில் எவ்வகையிலும் முஸ்லிம் அல்லாதாரின் தீர்ப்புப் பிரயோசனம் தரத்தக்கதாகயில்லை; அதனால் எவ்விதப் பிரயோசனமுமில்லாது போய்விடுகிறது. ஆகவே அவைகளில்நின்று உதாரணமாக இரண்டொன்றை இங்கு எடுத்துக் காண்பிக்கின்றேன். அதனால் இந்தியாவின் கண் வதிந்து வரும் முஸ்லிம்களுக்கு காஜீ நியமன விஷயம் ஆவசியமானதென்பது நன்கு புலனாகி விடும்.

(1) ஒரு சிறு பெண்ணை, அவள் வயதை அடைவதற்கு முன் தகப்பன் பாட்டன் அல்லாத வலிகாரன் விவாகஞ் செய்து கொடுத்த நிலைமையில் அவள் (புலூக்) பருவத்தை அடைந்தவுடன் அந்த விவாகத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் காஜீ சில நிபந்தனைக்குட்பட்டு அந்த விவாகத்தைப் பிரிவினை செய்து விடலாம். இவ் விஷயத்தில் முஸ்லிம் அல்லாத அதிகாரி பிரிவினை செய்துவிட முடியாது. அவ்வாறு பிரிவினை செய்துவிட்டால் அப் பிரிவினை செல்லுபடியாக மாட்டாது.

(2) பாலிகான (பருவத்தையடைந்த) ஒரு பெண் தன் குடும்பத்தில் இதரர்க்கு ஏற்பட்டுள்ள மஹருக்குக் குறைவாக 'குப்வு' தகுதியற்ற ஒரு மாப்பிள்ளையை வலிகாரனின் சம்மதமின்றி விவாகஞ்செய்து கொள்வாளாகில் அதுபொழுது அந்தஸ்தான குடும்பத்திலுள்ளவர்கள் காஜீயிடத்தில் பிராது கொடுத்து விவாகத்தைப் பிரிவினை செய்துகொள்ளும் பாத்தியதை அளிக்கப்பட்டவர்களாகயிருக்கின்றார்கள். அவ்வாறு பிரிவினை செய்யும் அதிகாரம் காஜீயத்தைத் தவிர வேறு யாருக்குமில்லை.

(3) ஒருவன் தன் மகனின் பெண்சாதியிடம் சம்சர்க்கம் புரிந்துவிடுவானாகில் அல்லது கெட்ட எண்ணத்துடன் அவள்மீது கைபோட்டு விடுவானாகில் பிறகு இவள் தன் புருஷனோடு சம்பந்தப்படுவது கூடாது. ஆனால் இந்நிலைமையில் காஜீ இருவருக்கிடையிலுள்ள விவாகப் பந்தத்தைப்பிரித்துவிடும் வரை அல்லது அவர்களிருவரும் சம்பந்தத்தைப் போக்கிக்கொள்ளும் வரை விவாகப் பிரிவினை ஏற்பட்டுவிடமாட்டாது. இந்நிலைமையில் புருடன் விவாகத்தைப் பிரிவினை செய்துவிடாதுபோனால் அந்தப் பெண்ணுக்குப்பெரும் கஷ்டம் ஏற்படுவதால் காஜீயின் அதிகாரம் அதுபொழுது அப்பெண்ணுக்கு அத்தியா வசியமாய் வேண்டற்பாலனவாகயிருக்கின்றது.

(4) புருஷன் ஆண்தத்துவ மற்றவனான நிலைமையில் தலாக் சொல்லாமலிருப்பானாகில் அதுபொழுது காஜீயார் ஒரு வருஷம் சகவாசங் கொடுத்தபின் அந்த விவாகத்தைப் பிரிவினை செய்துவிடலாம். இதில் காஜீ தலையிடாது போனால் ஆண்தத்துவமில்லாதவனின் பெண்சாதி பெரும் கஷ்டப்படும்படி நேரிட்டுவிடும்.

(5) அவ்வாறே புருஷன் பைத்தியக்காரனாக ஆகிவிடுவானாகில் காஜீ அவனுடைய விவாகத்தைப் பிரிவினை செய்யலாம்.

(6) ஒருவளுடைய புருஷன் யாத்திரை சென்று அவனிருக்குமிடம் தெரியாதுபோய் விட்டால் சில காலத்திற்குப்பின் சன்மார்க்க கிரந்தங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரப்படி, மார்க்கச் சட்டப்படி தீர்ப்பளிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் காஜீ அவளைப் பிரித்துவிடலாம்.

(7) புருடன், தன் பெண்சாதி விபசாரம் புரிந்ததாகக் கூறினாலும் அல்லது பிள்ளை வேறு யாருக்காகிலும் பிறந்ததென்று கூறி

னாலும் அப்பெண் காஜீயிடம் பிராதுசெய்து மான நஷ்டம் கோரலாம். அதுவிஷயமாய்க் காஜீ விசாரணை செய்து அவன் பொய்யனென ஏற்பட்டால் அவன் அவதூறு கூறியதற்காக தண்டனை கொடுப்பார். அல்லது விவாகப் பிரிவினை செய்துவிடுவார்.

(8) பாலிகில்லாத (வயதை அடையாத) பெண்பிள்ளைக்கு யாதொரு வலியுமில்லாது போய் அவளுடைய சம்ரக்ஷணைக்காக சீக்கிரம் விவாகஞ் செய்துகொடுக்கவேண்டுமென்னும் அவசியமேற்பட்டுவிட்டால் அவ்வாரிசற்ற பெண்பிள்ளைகளுக்கு காஜீதான் வலியாகும். இவ்வாறான விஷயங்களில் மார்க்க சட்டப்படி தீர்ப்பளிக்கும் காஜீகள் இல்லாதுபோயின் முஸ்லிம்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கும்படி நேரிட்டு விடுகிறது. காஜீகளிருந்து விவாகப் பிரிவினை செய்துவிட்டால் அப்பெண் வேறு புருஷனை விவாகஞ் செய்துகொள்வதற்கு ஹேது உண்டாகிவிடுகிறது. அவ்வாறில்லாது போயின் அவளுக்கு யாதொரு மார்க்கமுமில்லாது அப்படியே இருந்து மடிய நேரிட்டுவிடும்.

(9) ஒருவன் தன் பெண்சாதிக்கு மூன்று தலாக்குக் கொடுத்துவிட்டு தான் சுய அறிவோடிருக்குங்கால் தலாக்குச்சொல்லவில்லை; போதை அல்லது கோபம் மிகைத்த நேரத்தில் சொல்லிவிட்டதாகக் கூறுவானாகில் அப்பொழுது அந்தப் பெண் தனது புருஷனது வார்த்தையின்மீது நம்பிக்கை வைக்கலாகாது. ஆனால், இவ்விஷயத்தைக் காஜீக்குத் தெரிவித்து அவர் அதனைத் தீர விசாரித்து முடிவு கூறுகிறபடி நடந்துகொள்ளவேண்டும். எனவே, அக்காஜீ அதற்குள்ள நிபந்தனைப்படி விசாரித்து தலாக்கு ஏற்படவில்லை என்று கூறுவாராகில் அவள் புருஷனுடன் கூடி வாழலாம்; இல்லாதுபோனால் வாழ முடியாது பிரிவினை ஏற்பட்டுப் போய்விடும்.

(10) மகர் வைப்பதற்குத் தகுதியில்லாதவைகளை மஹராக ஏற்படுத்தி நிகாஹ்செய்வதுபோலொத்த பாஸிதான நிகாஹ நடைபெற்றுப் போமாயின் அந்த விவாகத்தை காஜீதான் பிரித்துவிடவேண்டும், அல்லது புருஷன் தானே அவளை விட்டுவிடவேண்டும். அவன் விடமுடியாதென்று கூறிவிடுவானாகில் காஜீயில்லாத நிலைமையில் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கும்படி நேரிட்டு விடும்.

விவாகம், விவாகவிலக்குபோலொத்த சிற்சில விஷயங்கள் உதாரணமாக இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைபோலொற்ற இன்னும் எத்தனையோ பிரயோசனங்கள் காஜீ நியமனத்தால் ஏற்படுகிறது. அவ்விஷயங்களில் நம் இந்திய முஸ்லிம்களுக்கு காஜீ இல்லாததால் பெரும் கஷ்ட மேற்பட்டிருக்கின்றது. அக்கஷ்டங்களை கவர்ன்மெண்டாரின் உதவியின்றி எவ்வகையிலும் நிவர்த்தி செய்துகொள்ள இயலாதவர்களாக யிருக்கின்றோம்.

காஜீ, அதிகாரமுடையவராக இருத்தல் வேண்டும்.

காஜீ முஸ்லிமாக யிருப்பதுடன் அதிகாரமுடையவராக யிருத்தலும் வேண்டும். எனவே ஒரு இடத்திலுள்ள முஸ்லிம்கள் தாங்களாகவே ஒருவரை காஜீயாக நியமித்துக் கொள்வார்களாயின் அவர் காஜீயாக ஆகிவிடமாட்டார். வாதிபிரதிவாதிகள் தங்கள் விவகாரங்களை அவரிடம் ஒப்புவித்து முடிவைக் கோரினால்தான் அவருடைய தீர்மானம் பிரயோசனப்படும். அவ்வாறின்றி ஒரு சாரார் தங்கள் விவகாரங்களை அவரிடம் ஒப்புவித்தும் மற்றோர் சாரார் அதற்கு விரும்பாமலும் இருப்பார்களாயின் இந்நிலைமையில் அவருடைய தீர்மானம் பிரயோசனமற்றதாய் விடும். ஆகவே, காஜீ இருசாரார்களையும் கூப்பிட்டு விசாரணை புரிய அதிகாரமுடையவராக இருத்தல் ஆவசியமாகும். அதிகாரமேற்படுவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படுவதை பொருத்திருக்கிறது. ஆகவே காஜீ நியமன விஷயத்தில் இந்திய முஸ்லிம்களுக்கு கவர்ன்மெண்டாரின் உதவி பெரிதும் வேண்டற்பாலனவாக யிருக்கின்றது. ஏனெனின், சில விஷயங்களில் காஜீ இல்லாது முஸ்லிம்களின் காரியாதிகள் பெரும் கஷ்ட சங்கடத்திற்கு வந்து விடுகிறது. அவ்விவகாரங்களில் முஸ்லிம் அல்லாத அதிகாரியின் தீர்மானம் பிரயோஜனமற்றதாக ஆகிவிடுகின்றது. இதனை நிவர்த்திசெய்வதற்காக இந்திய முஸ்லிம்களாகிய நாம், இந்தியாவில் காஜிப் பதவியை அளித்து தங்கள் முஸ்லிம் குடிமக்களை கஷ்ட சங்கடத்திலிருந்து விடுதலை பெறும்படி செய்யவேண்டுமென கவர்ன்மெண்டாரைக்கேட்டுக்கொள்ள வேண்டும். மேலும் காஜீ நியமனவிஷயம்

முடிவடையும்வரை காஜியின் தீர்ப்புக்குக் கொண்டுவரும் விஷயங்கள் நடவடிக்கைக்கு வருமாயின், அவைகளை முஸ்லிம் அல்லாத நியாயாதிபதிகள் முடிவுசெய்யாது முஸ்லிம் அதிகாரிகளிடம் ஒப்படைத்து விடுவதற்கு ஏற்பாடுசெய்துவிடவேண்டும். அந்த அதிகாரிகள் அவ்விஷயங்களை தக்க முறையில் உலமாக்களிடம் எடுத்துக்கூறி அவர்கள் அளிக்கும் மார்க்கத் தீர்ப்பின்படி வழக்குகளை முடிவுசெய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வதிகாரிகள் தங்கள் தீர்ப்பில் அனந்தர பாத்தியதைகள் விஷயத்தில் மார்க்கத் தீர்ப்பை குறிப்பிடுவது போல் அந்தந்த விவகாரங்களிலும் மார்க்கதீர்ப்பை குறிப்பிட்டு விடுவது உத்தமம். இதுபொழுது இவ்வாறாகிலும் செய்யப்படுமாகில் இந்திய முஸ்லிம்களின் கஷ்டங்கள் ஒருவாறு நிவர்த்திக்கப்பட்டதாக ஆகிவிடும். எனவே, கவர்ன்மெண்டார் நம்முடைய இவ்வேண்டுகோளை பூர்த்தி செய்துவைத்து தங்கள் முஸ்லிம் குடிமக்களுக்கு பேரனுகூலம் புரிவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

கவர்ன்மேண்டாரால் நியமனஞ் செய்யப்பட்ட காஜீ

இந்தியாவில், கவர்ன்மெண்டார் தகுதியான ஒரு முஸ்லிமை காஜீயாக நியமித்து எவ்விஷயங்களுக்குக் காஜீயும் தீர்மானமும் தேவையாக யிருக்கின்றதோ அவ்விஷயங்களைத் தீர்ப்பதற்கு அதிகாரமும் கொடுத்துவிடுவார்களாயின், அவ்வாறு கொடுக்கப்பட்டவர் மார்க்கப்படி காஜீயாக ஆகிவிடுவார். எனவே விவாகப் பிரிவினை, விவாக விலக்கு, தேசாந்தரம் சென்று விட்டவகையில் மரணமடைந்து விட்டதாகத் தீர்ப்பளிப்பதுபோன்ற விஷயங்களில் அவரது கட்டளை செல்லுபடியாகும். ஆனால் மார்க்கக் கட்டளைப் பிரகாரம் தீர்ப்பளிப்பதற்குள்ள அதிகாரமும் அவருக்களித்திருக்க வேண்டும் எனவே மார்க்கத்திற்கு விரோதமாய்த் தீர்ப்பளிப்பதற்குக் கட்டாயப்படுத்தப் பட்டவராகியிருத்தல் கூடாது.

முஸ்லிம்கள் தாங்களே நியமித்துக்கொண்ட காஜீ

இந்திய முஸ்லிம்களில், ஒரு இடத்தில் வசிப்பவர்கள் கவர்ன்மெண்டாரின் அனுமதியின்றி யாரையாகிலும் காஜீயாக நியமித்துக் கொண்டார்களாயின் அவர் காஜீயாக ஆகிவிடமாட்டார். ஏனெனின், அவர் அதிகாரம் பெற்றவராக யில்லாததே காரணமாகும். ஆனால் வாதி பிரதிவாதிகள் ஏகோபித்து தங்கள் வழக்கை அவரிடம் ஒப்புவிப்பார்களாயின் அவர் கூறும் தீர்ப்பு செல்படியாகும். ஒருவர் தன் விவகாரத்தை அவரிடம் ஒப்புவித்தும் மற்றவர் ஒப்புவிக்காதும் போய்விட்டால் அந்தநேரத்தில் தீர்ப்பு அளிப்பது, அளிக்காதது போலவேதான் ஆகிவிடுகிறது. இருசாராரும் ஒற்றுமையாக ஒருவரை தீர்ப்பளிப்பதற்கு ஏற்படுத்தும் நிலைமையில் அவர் மார்க்கச் சட்டப்படி தீர்ப்பளிப்பாரானால் விவாகப் பிரிவினைபோன்றவைகளில் அவருடைய தீர்ப்பு செல்லுபடியாய்விடும். அதாவது கேஸை அவரிடம் ஒப்புவித்தபின் முடிவு சொல்லும்வரை யாரும் வாபஸ் பெற்றுக்கொள்ளாதிருக்கும் நிலைமையில் அந்த அதிகாரியின் தீர்ப்பும் காஜீயின் தீர்ப்பைப் போல் செல்லுபடியாகும். அதற்குப்பின் எவரும் அதனை ஏற்றுக்கொள்ளாதிருக்க முடியாது. ஆனால் அந்தத் தீர்ப்பு மார்க்கச் சட்டப்படி இருக்கவேண்டியது ஆவசியகமாகும்.

கவர்ன்மேண்டாரிடம் வேண்டுகோள்

(7) மார்க்கச் சட்டப்படி தீர்ப்பளிக்கக்கூடிய காஜீயை நியமிக்கவேண்டியது முஸ்லிம்கள்மீது கடமை என்பதையும், சில விஷயங்களில் முஸ்லிம் அல்லாதாரின் தீர்மானம் மார்க்கச் சட்டப்படி பிரயோசனமற்றதாயும் முஸ்லிம் அதிகாரியின் தீர்மானம் அவசியமானதாகவும் இருக்கிறதென்பதையும் நன்கு தெரிந்துகொண்டபின், தங்களது மார்க்க அவசியத்தை கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக்கூறி, இந்தியாவில் காஜீப்பதவியை ஏற்படுத்தி தம் முஸ்லிம் குடிமக்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்துவைப்பதற்கு ஹேது செய்துவைக்கும்படிகேட்டுக்கொள்ள வேண்டும். கவர்ன்மெண்டார் தங்கள் குடிமக்களுக்கு சௌகரியஞ் செய்துகொடுப்பதில் அதிலும் மார்க்க விஷயங்களில் வசதி அளிக்க கண்ணும் கருத்துமுடையவர்களாயிருக்கின்றார்கள். ஆகவே, நம்முடைய இக்கோரிக்கை அவசியம் நிறைவேறுமென்பது திண்ணம். தவிர முஸ்லிம் பிரதிநிதிகள் இவ்விஷயத்தை சட்ட நிரூபண சபையில் எடுத்துக்கூற முயற்சித்து வருவதை சகல முஸ்

லிம்களும் ஏற்று ஆதரவு புரியவேண்டியது அத்தியா அவசியமாகும்.

குறிப்பு: முஸ்லிம்களின் மதசம்பந்தமான விவகாரங்களை பைஸல் செய்வதற்காக காருண்ய கவர்ன்மெண்டார் முஸ்லிம்களுக்கு, இஸ்லாம் மார்க்க ஞானநிபுணத்துவம் படைத்த முஸ்லிம்களைக் காஜியாக நியமித்து, அவர்களுக்குச் சில அதிகாரங்களைக் கொடுத்து காஜி கோர்ட்டு ஏற்படுத்தி விடுவார்களாயின் அது முஸ்லிம்களுக்கு மிக மிக நன்மை பயப்பதாக இருக்கும் என்பதை நாம் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். இவ்விதமான கோர்ட்டு ஒன்று இல்லாததனாலேயே இஸ்லாம் மத சம்பந்தமான வழக்குகள் பல இதுகாலை நமதரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கோர்ட்டுகளில், இஸ்லாம் மார்க்கச் சட்டதிட்டங்களை யுணராத நீதிபதிகளால் மார்க்கத்திற்கு விரோதமாகத் தீர்ப்புச் செய்யப்படுகின்றன. எனவே, இந்தத் தீர்ப்புகளைப்பற்றிப் பரிசீலனை செய்வது இப்பொழுது நாம் கவனிக்க வேண்டிய விஷயமல்ல. இம்மாதிரியான தீர்ப்புகள் இனி நடைபெறுவண்ணம் காக்க முயற்சிப்பதுதான் நமது முக்கிய கடமையாகும். இம்மாதிரியான உரிமை பல தேசங்களிலும் பற்பல கவர்ன்மெண்டாராலும் முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நமது இந்திய ஹிந்து சமஸ்தானங்களில் சில இம்மாதிரியான உரிமை இப்பொழுதும் அளித்திருக்கின்றன. நமது பிரிட்டிஷ் இந்திய அரசாங்கமும் முன்னர் நமக்கு இவ்வுரிமையை அளித்திருந்தது. அப்பால் அது நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, காஜீ கோர்ட்டு வேண்டுமென நாம் கேட்பது இல்லாத ஒரு விஷயத்தைக் கேட்பதாகவோ அன்றி அளிக்க முடியாத ஒரு உரிமையைப் பெற முயலுவதாகவோ இல்லை. இவ்விஷயம் நம்முடைய ஜீவாதாரமான உரிமையுமாகும். புதுச் சீர்திருத்தம் வழங்க இருக்கும் இது சமயம் இதை நாம் வற்புறுத்தி ஏகோபித்துக் கேட்டுக்கொள்வோமாயின் இவ்வுரிமையை அரசாங்கத்தார் நமக்கு அளிக்கப் பின்வாங்க மாட்டார்கள் என்பதுதிண்ணம். ஆனால் ஒற்றுமையாகக் கேட்பது நமது கடமையாகும். இவ்விஷயத்தைப்பற்றி ஸர் முஹம்மது இக்பால், மௌலானா ஷபீ தாவூதீ, மௌலானா மஜ்ஹருத்தீன், ஸர் அப்துல்லா சுகரவர்தி முதலிய இந்திய முஸ்லிம் பிரமுகர்கள் கையொப்பமிட்டு இவ்விதமாகத் தீர்மானங்கள் செய்து அரசாங்கத்திற் கறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளும் விளம்பரத்தையும் விடுத்திருக்கின்றனர். இவ்வுரிமை நமக்கு இன்றியமையாததென நமது ஹிபாஜத்துல்இஸ்லாம் சஞ்சிகையில் "இந்திய முஸ்லிம்கள் வேண்டுவதென்னை" என்ற தலையங்கமிட்டு 1-4-30 தேதியில் லீடர் எழுதி இருக்கிறோம். சென்ற 29-9-33 தேதி நம் சங்கத்தின் ஆதரவில் சென்னை அங்கப்ப நாயக்கன் தெரு மஸ்ஜிதேமஃமூர் என்ற நவ்வாப் ஜாமிஃமஸ்ஜீதில் நமது சங்க உபதலைவரும் சென்னை டவுன் காஜியுமான மௌலானா அல்ஹாஜ்முஹம்மது பவீஹுத்தீன் சாகிப் அவர்களின் தலைமையில் கூடிய முஸ்லிம்களின் பொதுக் கூட்டத்திலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கும் அறிவித்துக்கொண்டிருக்கிறோம். அத்தீர்மானத்தை ஆங்காங்குள்ள முஸ்லிம்கள் பொதுக் கூட்டம் கூட்டி ஆதரித்து அரசாங்கத்திற்கு அறிவிக்குமாறு வேண்டுகிறோம். தீர்மானம் வருமாறு:—

புது கீர்திருத்தத்தில் முஸ்லிம்கனின் மத சம்பந்தமான விவகாரங்களை பைஸல் செய்வதற்காக இஸ்லாம் மார்க்க ஞான நிபுணத்வம் படைத்த காஜீ கோர்ட்டு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென அரசாங்கத்தை எல்லா முஸ்லிம்களும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று ஸர் முகம்மது இக்பால், ஸர் அப்துல்லா ஸூஹரவர்தீ, மௌலானா ஷபீ தாவூதி, மௌலானா மஜ்ஹருத்தீன், ஸையத்ஹூஸைன் இமாம், காஜாஹஸன் நிஜாமி முதலிய பல கனவான் கைச்சாத்திட்டு வெளியிட்டிருக்கும் வேண்டுகோளை இம்மகாநாடு ஆதரிப்பதோடு அவ்விதமான காஜீகோர்ட்டு ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறது"

எனவே முஸ்லிம்கள் ஆங்காங்கு கூட்டம் கூடி இத்தீர்மானத்தை ஆதரித்து சென்னை மாகாண கவர்னர் பிரைவேட் செக்ரடரி, சென்னை மாகாண முதல்மந்திரி, சென்னை மாகாண லோகல் போர்டு செல்ப் கவர்ன்மெண்டு காரியதரிசி ஆகியவர்களுக்கு அறிவிக்க வேண்டுமாய் மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

ஸிம்லாவில் காதியானிகளின் பஹிரங்கதோல்வி.

முஸ்லிம்களுக்கும் காதியானி வகுப்பாருக்கும் ஸிம்லாவில் நடைபெற்ற விவாதத்தில் முஸ்லிம்களுக்கு அபரிமிதமான வெற்றி ஏற்பட்டுவிட்டது.

சென்ற ஆகஸ்டுமீ 27வ திங்கட்கிழமை தினம் ஸிம்லாவிலுள்ள ஜாமிஃ மஸ்ஜிதின் விசாலமான மண்டபத்தில் முஸ்லிம்களுக்கும் காதியானி மிர்ஜாயிகளுக்குமிடையில் தர்க்க விவாதமகாநாடு நடைபெற்றது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் ஜீவித்திருக்கின்றார்களா? அல்லது மரணமாய்விட்டார்களா? (2) எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களுடன் நபிப்பட்டம் முடிவடைந்து விட்டதா இல்லையா? (3) மிர்ஸா தம்முடைய தஅவாவில் பொய்யரா அல்லவா? என்னும் விஷயங்களை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதென முடிவு செய்யப்பட்டிருந்ததால் அம்மகாநாடு 5000பெயர்களைக் கொண்டதாகவும் பெரும் மகத்தானதாகவும் காணப்பட்டது. முஸ்லிம்கள் சார்பாக மௌலானா அஹ்மத்தீன் மௌலானா முஹம்மத் அஸதுல்லா சாஹிப், மௌலானா லால்ஹுஸைன் சாஹிப் அக்தர் இவர்களும் காதியானிகள் சார்பாக ஜலாலுத்தின் ஷம்ஸு, முஹம்மது சலீம் ஆகிய இருவரும் தர்க்க விவாதம்புரிய வந்திருந்தனர்.

அன்று காலை 5½-மணி முதல் மாலை 7-மணி வரை துயர்படியாக விவாதம் நடைபெற்றது. ஆனால் தொழுகைக்காகமட்டும் இடை இடையே சிறிதுநேரம் நிறுத்தி வைக்கும்படி ஏற்பட்டது. விவாதத்திற்கிடையே மிர்ஸாயிகள் எடுத்துக்கூறிய ஆதாரங்களை எல்லாம் முஸ்லிம் தலைவர்கள் தவிடுபொடியாக்கிக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு அவைகளுக்கு மறுப்பாக இன்னோர் எடுத்துக்காட்டிய ஆதாரங்களைக்கண்டு மிர்ஸாயிகளின் இடுப்பு முறிந்து ஆந்தைகளேபோன்று விழிக்கும்படி ஏற்பட்டுவிட்டது. அவர்கள் முழுதும் தர்க்கம் புரிவது ஒரு பக்கலிருக்கட்டும். ஒரு கேள்விக்காகிலும் விடையளிக்கத் துணிவு கொள்ளாது போனதுதான் பெரும் விந்தைக்குறிய விஷயமாகக் காணப்பட்டது. முஸ்லிம் உலமாக்கள் பல முறையும் விடையளிக்கும்படி வற்புறுத்திக் கூறியும் காதியானிகள் மனத்துணிவு கொள்ளாதவர்களாகவே காணப்பட்டனர். அதிலும் முக்கியதோர் விசேஷம் யாதெனில் மிர்ஸாயிகளின் சார்பாக ஆதாரங்கள் கேழ்க்கப்படும்பொழுது உடனே அதே க்ஷணத்தில் எடுத்துக் காண்பிக்கப்படுவதாகயிருந்தது. இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்குங்கால் ஒரு ஆதார விஷயமாய், இதற்குள்ள ஆதாரத்தைக் காண்பித்துவிடுவார்களாயின் என்னைப் பொய்யனென்று கூறுங்களென்று முஹம்மது சலீம் கூறினார். உடனே ஹஸ்ரத் மௌலானா லால்ஹுஸைன் சாஹிப் அவர்கள் முன் வந்து அவர் கூறியவைக்குத் தக்க ஆதாரங் காண்பித்தார்கள். அதுசமயம் சபையில் புத்துணர்ச்சி தோன்றியது போலாய் விட்டதுடன் காதியானி மிர்ஸாயிகளின் நிலைமை பரிதபிக்கத் தக்க விதமாகவும் ஆய்விட்டது.

அதுபொழுது மௌலானா அவர்கள் விடை அளித்து வருங்காலை மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானி குர்ஆன்ஷரிப், ஹதீது, பிக்ஹு சட்டம், முதலியவைகள் தெரியாதிருந்ததுடன் புத்தி தீக்ஷணியமற்றவராகவுமிருந்தாரெனக்கூறி, எந்த மிர்ஸாயிக்காகிலும் தைரியமிருந்தால் இதனை மறுத்துக் கூற முன் வரட்டும் பார்ப்போம் என அறைகூவி அழைத்தும் ஒரு மிர்ஸாயியும் மௌலானா அவர்களின் வார்த்தையை மறுத்துக் கூற முன் வரவில்லை. தவிர மிர்ஸாதான் உண்மையாளரென்பதற்கு எவைகளை ஆதாரமாகக் கூறி அவைகளைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருந்தாரோ அவைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறி அவை பொய்யென ருசுப்பிக்கப்பட்ட பின் அதனை ருசுப்பிப்பவர்களுக்கு இனாமளிப்பதாகவும் அறிக்கையிடப்

பட்டது. ஆனால் எந்த மிர்ஸாயிக்கும் ஹஸ்ரத் அவர்களின் செலன்ஜை ஒப்புக்கொள்ள தைரியமேற்படவில்லை. எனவே மிர்ஸாயிக ளின் சார்பாக தர்க்கவாதம் புரிய முன்வந்த வர்கள் தோல்வியுற்றவர்களே போன்று அயர்ந்துவிட்டனர். ஆகவே மிர்ஸா பொய்ய ரென்பதாகவும், அவர் கண்டனத்திற் குறி யவரென்பதாகவும் நன்கு தெரிந்துபோயும் தர்க்கவாதம் புரிய முன் வந்திருப்போர் அவர் பொய்யரென்பதாகப் பஹிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டியதை விட்டு அல் லாஹ்தஆலா, ரசூல் (ஸல்.) இவர்கள்மீதும் குர்ஆன் ஹதீதுகளின்மீதும் பிரயோசன மற்ற வீண் விதண்டாவாதம் புரிய முற்பட்டு விட்டனர். ஆனால் முஸ்லிம்களின் சார்பாக நியமிக்கப்பட்டிருந்த வீரசிங்கங்கள் அன் னோரின் குதர்க்க வாதங்களுக்கெல்லாம் தக்க பதில் கொடுத்து வாய்திறக்காது செய்து விட்டனர். மிர்ஸாயிகள் இவ்வாறு ஒழுங் கற்ற முறையில் குதர்க்க வாதம் புரிவதைக் கண்ட முஸ்லிம்கள் அளவற்ற ஆத்திர மடைந்தார்களாயினும் முஸ்லிம்களின் சார் பாக நியமிக்கப்பட்டிருந்த தலைவர்களினுடை யவும் அஞ்சுமனே இஸ்லாஹுல் முஸ்லிமீன் (இன்னோரின் முயற்சியின் பயனைத்தான் தர்க்க வாதம் புரிவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது) சங்க அங்கத்தினர்களினுடையவும் அரிய முயற்சியினாலும், ஒழுங்கு ரீதியினாலும் சற்றேனும் சமாதானப் பங்கமேற்படவில்லை. ஆகவே முஸ்லிம்கள் வெற்றிக்கொடி நாட்டி விட்டனர். வழிகெட்டு முர்த்தாய்ப் போய் விட்டவர்களிலனேகர் இத்தர்க்க யேற்பாட் டின் பயனை தெளபாச் செய்து நேர்வழிக்கு வந்து விட்டனர். (அல்ஹம்துலில்லாஹ்) இன்ஷா அல்லாஹ் கூடிய சீக்கிரம் (ஒரு மாதத்திற்குள்) இத்தர்க்க விவாதத்தின் முழு விவரங்களும் புத்தக ரூபமாக வெளி யிடப்படும். இங்ஙனம்,

சையித் ஸர்வர் ஹுசைன்
செக்ரிடரி, அஞ்சுமன் இஸ்லாஹுல்
முஸ்லிமீன், ஸிம்லா.
(6-9-33 ஜமீன்தார்)

(மேலே கூறப்பட்டுள்ள விவாதத்திற்காக காதியானிகள் சார்பாக வந்து தோல்வி யடைந்து அவமானத்துடன் திரும்பிச் சென்ற முஹம்மது சலீம் என்பவரால், 'முஸ் லிம்களின் வீழ்ச்சி' என்னும் தலையங்கத் தின்கீழ் (தக்லீத்) இமாம்களைப் பின்பற்று தல் கூடாதென்றும், அதுதான் மானிடர் களின் வீழ்ச்சிக்குக் காரணமென்றும் எழு தப்பட்டிருப்பதை தா. இ. மொழிபெயர்த்து பிரசுரித்து வருகிறது.

பிராணிகளை அறுப்பதன் பயன்.

அவைகளைக் கோல்வதால் ஏற்படும் தீமை.

இக்காசினியில் வாழும் பிராணிகள் மாமிச பக்ஷணி என்றும், சாகபக்ஷணி என் றும் இருவகையாக இருக்கின்றன. மாமிச பக்ஷணியில் மனித வர்க்கமும் சேர்ந்திருக் கிறது. ஆயினும், இவர்கள் மாமிசங்களைப் பக்குவப் படுத்திக் கொள்வதிலும், தங்களுக் குரிய உணவுப்பிராணியைத் தெரிந்தெடுத் துக் கொள்வதிலும் வித்தியாச மிருக்கிறது. இவைகளை உலகோர் உற்றுக்கவனித்து நன்மை எது வென்பதைத் தெரிந்துகொள் ளாமல் இவ்வித்தியாசங்கள் அவரவர் மதக் கோட் பாட்டை யனுசரித்தவை என மேலெழுந்த வாரியாகக் கருதி வருகின்றனர். உண்மை அவ்வாறன்று. மனிதவர்க்கம் மாமிச பக்ஷணி என்றால் உலகிலுள்ள சகல உயிர்ப்பிராணிகளையும் பிடித்துக் கொன்று தின்னுவது அறிவுடைமையாகாது. மனித இயற்கைக்கு ஏற்றதும், அதற்கு இடையூறு மற்றதுமான மாமிசத்தையே அதற்கேற்ற முறையில் அருந்த வேண்டும். இவ்வாறு செய்வதுதான் அறிவுடைமையாகும். இவ் விஷயத்தைத்தான் இப்புவியிலுள்ள மதங் களும் எடுத்தியம்புகின்றன. எனவே, மனி தன் உண்ணத்தகுந்த பிராணிகள் யாவை என்பதைப் பற்றிய பிரச்சினையை இனி ஒரு சமயத்தில் பரிசீலனை செய்யலாம். இப்

பொழுது அவன் புசிக்கும் மாமிசத்தைப் பொருத்தவரை சிறிது ஆராய்வாம்:

மனிதனுக்கு உணவாக எடுக்கப்படும் மாமிசம் பெரும்பாலும் ஜீவனுள்ள பிராணிகளை மரிக்கச்செய்தே எடுக்கப்படுகிறது. தானாகச்செத்த பிராணிகளின் மாமிசத்தை உட்கொள்ளும் வழக்கம் இதுபோழ்து யாவராலும் வெறுக்கப்பட்டும் தடுக்கப்பட்டும் போயிற்று ஆதலால், உயிர்பிராணிகளை மரிக்கச் செய்வதைப்பற்றி ஆராய்வாம்: சிலர் பிராணிகளின் குரல்வளையை நெறித்துக் கொல்லுகின்றனர்; சிலர் ஒரே வெட்டாக வெட்டி உடலை விட்டுத்தலையைத் துண்டித்து விடுகின்றனர்; சிலர் அடித்துக் கொல்லுகின்றனர்; சிலர் தலையைத் துண்டிக்காமல் அறுத்துப் புசிக்கின்றனர். இவ்வித நிலைமையில் ஜீவஹிம்சை நிவாரணக் கோஷ்டியினர் பிராணிகளைக்கொன்று தின்பது ஜீவஹிம்சை என்று வாதாடுகின்றனர். இவர்களுக்கு நாட்டில் ஆதரவு அதிகம் இல்லை. ஆதலால், மாமிசத்திற்காகப் பிராணிகளைக் கொன்றாலும் அவைகளுக்கு ஹிம்சையுண்டாக்காத முறையில் இப்பொழுது புது மாதிரியாக கொல்லுவது வேண்டும் எனக்கூறுகின்றனர். எனவே, தலையைத் துண்டிக்காமல் அறுத்துப் புசிப்பதில் பிராணிக்கு ஜீவன் போகுவதற்குச் சிறிது காலதாமதம் ஏற்படுவதால் அந்தப் பிராணிக்கு அனாவசியமான கஷ்டமேற்படுகிறதென்றும், ஒரே நிமிஷத்தில் சிரசையும் உடலையும் துண்டித்துவிட்டால் சீக்கிரத்தில் உயிர்போய் விடுகிறது; இது ஜீவஹிம்சை நிவாரணத்திற்கு ஒத்ததாக இருக்கிறது என்றும் கருதுகின்றனர். ஆனால், இவ்விதமாகச்சிரசையும் உடலையும்வெவ்வேறாகத் துண்டித்துவிடும் வழக்கம் நம்முடைய இந்நாட்டில்முஸ்லிம், யூதர்களல்லாத சகோதரர்களிடம் இருந்துவருகிறது. அறுத்துப்புசிக்கும் வழக்கம் முஸ்லிம்களிடமும் யூதர்களிடமும் இருந்து வருகிறது. என்றாலும், இந்நாட்டில் முஸ்லிம்கள் கிட்டத்தட்டமூன்றிலொரு பாகத்தினராக இருப்பதாலும் மாமிச விற்பனை பெரும்பாலும் முஸ்லிம்களிடம் இருப்பதாலும் அறுத்துப் புசிப்பதே எங்கும் வழக்கமாக இருக்கிறது. சிரச்சேதம் செய்து புசிக்கும் வழக்கம் ஏனைய சகோதரரிலும் அவ்வளவு அபரிமிதமாக இல்லை. என்றாலும் இவ்வழக்கத்தைச் சிலாகிக்கும் கோஷ்டியினர் இருந்துவருகின்றனர்; இதைப் பற்றிப் பிரசாரமும் புரிகின்றனர். ஐரோப்பிய மேனாடுகளிலோ முஸ்லிம்கள் சுமார் 70 லக்ஷம் பேர்கள்தா னிருப்பதாலும் கிறிஸ்தவமதத்தினர் பெரும்பான்மையாக இருப்பதாலும் அறுத்துப் புசிக்கும் வழக்கம் அதிகமாக அங்கு இல்லை. அங்கு பெரும்பாலும் சிரச்சேதமே சிறந்து விளங்குகிறது. நவநாகரீகம் முதிர்ந்த நாடாகவும், அதை அவனியோருக்கு ஆரம்பமாய் அறிவிக்கும் நாடாகவும் இருப்பதால் இவ்விஷயத்திலும் புதிய முறையைக் கையாளுகின்றனர். அதாவது பிராணிகளை வரிசையாக நிறுத்தி மிஷினினால் வெட்டிவிடுகின்றனர். இதனால் க்ஷணப்பொழுதில் நூற்றுக்கணக்கான பிராணிகள் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டு விடுகின்றன. எனவே, இந்தியாவில் தலை துண்டிக்கப்படும் முறைக்கும் ஐரோப்பாவில் துண்டிக்கப்படும் முறைக்கும் சிறிது வித்தியாசம் இருப்பதெல்லாம் இந்த நவநாகரீகத்தினால் தான் என்றாலும் தலையைத் துண்டிப்பதில் இந்தியாவிலுள்ள யூத முஸ்லிமல்லாத நண்பர்களும் ஐரோப்பிய கிறிஸ்தவர்களும் ஒன்றுபட்டவர்களே. எனவே, தலையைத் துண்டிப்பதனால் அதிக நன்மையுண்டா? அல்லது தலையைத் துண்டிக்காமல் கழுத்தில் கத்தியால் அறுப்பதில் அதிக நன்மையுண்டா என்பதை விளக்குவது தான் இவ்வியாசத்தின் முக்கிய நோக்கமாகும்.

இஸ்லாம் மதம் மாமிசத்தை அருந்துவதை அனுமதிக்கிறதாயினும் எல்லா விதமான மாமிசத்தையும் அருந்த அனுமதிக்கவில்லை. மனிதருக்குத் தீங்குசெய்யக் கூடியதையும் நோயை யுற்பத்தி செய்யக்கூடியதையும் தடுத்து இருக்கிறது. அனுமதிக்கப்பட்ட மாமிசத்தையும் நோய் கிடங்கொடாமல் அதிலுள்ள கெடுதிகளை அப்புறப்படுத்திவிட்டுப் புசிக்கும்படி வற்புறுத்துகிறது. இதனால் தான் ஆடு முதலிய பிராணிகளில், சில குறிப்பிட்ட பாகத்தை அருந்த அனுமதிக்கவில்லை. அத்துடன் பிராணிகளின்உதிரத்தில் சிலவிஷக்கிருமிகள் இருப்பது வழக்கமாதலால் உதிரத்தை வெளியேற்றிவிட்டுப் புசிக்கும்படிவற்புறுத்துகிறது. இவ்வாறு உதிரத்தை வெளியேற்றுவதற்குக் குரல்வளையையும் அதை சார்ந்துள்ள முக்கிய நான்கு நரம்புகளையும் வெட்டிவிட்டால் தேகத்திலுள்ள சகல ரத்

தமும் வெளியாகி விடுகிறது என்ற தத்துவத்தையும் நமக்குப் போதிக்கிறது. திரேகத்திலுள்ள உதிரம் முழுவதும் வெளியாகிவிட்டால் பின்னர் உயிர் இருக்கமாட்டாது என்பது பிரத்தியக்ஷம். எனவே, முஸ்லிம்கள் பிராணிகளை அறுப்பதெல்லாம் அதைக் கொல்ல வேண்டுமென்ற ஒரு நோக்கத்திற்காக மட்டுமல்லாமல் அதிலுள்ள உதிரத்தை வெளியேற்ற வேண்டுமென்ற முக்கிய தத்துவத்திற்காகவுமே. இவ்வாறு செய்துவிடுவதால் மாமிசம் சுத்தமாகிவிடுகிறது. அதனை அருந்துவோருக்கும் எவ்விதத் தீங்கோ நோயோ ஏற்படுவதில்லை.

இதற்கு மாறாக, ஒரே க்ஷணத்தில் தலையைத் துண்டித்துவிடுவதால் வெட்டப்பட்ட பிராணிக்கு அதிவிரைவில் ஜீவன்போய் விடுகிறது. ஜீவன் போன பிராணியின் உதிரம் குளிர்ச்சியினால் உறைந்து மாமிசத்திற்கிடையில் தங்கிவிடுகிறது. ஆதலால், மாமிசத்தில் மனிதருக்குத் தீங்கு உண்டாக்கக் கூடிய சத்து நிலைத்து இருந்துவிடுகிறது. இவ்விபரத்தை அடியிற்காணும் ஐந்து விஷயங்களால் நன்குணரலாம்.

1. உதிரத்தை முற்றிலும் வெளிப்படுத்துவதற்கு திரேகத்திலுள்ள முக்கிய பெரிய நரம்புகளையும் உதிரக்குழாய்களையும் தரித்து விடவேண்டும். இவ்வாறு செய்தால்தான் உதிரம் சீக்கிரத்தில் அதிகமாக வெளியேற இடமுண்டு.

2. உதிரம் வெளிப்படும் போது மூளையின் சக்தியானது உடலுடன் சம்பந்தப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், மூளையின் சக்தி குன்றுவதால் இருதயத் துடிப்பு உடனே நின்றுவிடும். அதன்பயனாய் அவயவங்கள் சோர்வடைந்துவிடும். இதனால் உதிரம் சரியாக வெளியேற இடமில்லை. எனவே தலையைத் துண்டிப்பதால் இந்தக் கெடுதிகளெல்லாம் இருக்கின்றன. தலை துண்டிக்கப்படாமல் உடலுடன் சேர்ந்திருந்தால் உடலுக்கும் மூளைக்கும் சம்பந்தம் இருந்துகொண்டே இருக்கும்; இருதய ஓட்டமும் இருந்துக்கொண்டே இருக்கும்.

3. அறுக்கப்பட்ட பிராணிக்கு உயிர் போகும்வரை அதன் இருதய ஓட்டம் இருப்பது அவசியமாகும். ஏனெனில் இருதய ஓட்டத்தினால் உதிரம் உடலைவிட்டு வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். ஆனால், இருதய ஓட்டம் சீக்கிரம் நின்றுவிட்டால் ரத்தம் திரேகத்திற்குள்ளிலேயே தடைபட்டுவிடும்.

4. அறுக்கப்பட்ட பிராணிக்கு அதிக நேரம் சுவாசம் இருக்கவேண்டும். ஏனெனில், சுவாச ஓட்டத்திற்கும் ரத்த ஓட்டத்திற்கும் அதிக சம்பந்த மிருக்கிறது. சுவாச ஓட்டம் திடீரெனநின்றுவிட்டால் ரத்தஓட்டமும் உடன் நின்றுவிடுமென்பது வெளிப்படை.

5. அறுக்கப்பட்ட பிராணி அசைவற்றுக் கிடந்தால் உதிரம் சரியாக வெளிப்படாது என்பது தெரிந்த விஷயம். ஆதலால், அறுக்கப்பட்ட பிராணி கால்களை நன்றாய் உதறித் துடிக்கவேண்டும்.

இவ்விஷயங்களெல்லாம் இஸ்லாம் மதத்தில் நன்கு கவனிக்கப்பட்டு அதற்கான விதிவிலக்குகள் செய்யப் பட்டிருக்கின்றன. பிராணியை முறைப்படி அறுக்காமல் வெட்டித் தலையைத் துண்டித்துவிடுவதால் மேற்கூறப்பட்ட 5 சாதனங்களும் கிடைக்காது. அத்தகைய மாமிசத்தை அருந்துவது சுகாதார முறைக்கு ஏற்றதுமல்ல. என்னே இஸ்லாத்தின் இணையற்ற ஏற்பாடுகள்! எனவே, ஜீவஹிம்சை நிவாரக் கட்சிக்காரர்களும், சுகாதார வாதிகளும் இவைகளை நன்கு கவனிப்பார்கள் என்று நம்புகிறோம்.

சந்தா நேயர்கட்கு!

1933-ம் ஆண்டு ஆரம்பமாகி 10 மாதங்களாகியும் நமது சந்தா நேயர்களிற் சிலர் இதுவரை சந்தாவை அனுப்பாதிருக்கின்றனர். ஆகவே தாமதியாது சந்தாவை அனுப்பி வைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். இல்லையேல் அடுத்த மாசிகை வி. பி. மூலம் அனுப்பி வைக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சையித்மார்கள் யார்?

விஜய கவியின் விதண்டாவாத அறியாமை

கோலாலம்பூரில் பிரசுரமாகும் "தமிழ் நேசன்" பத்திரிகையில் "ஸையித் மார்கள் யார்?" என்ற மகுடமிட்டு விஜயகவி என்ற கைச்சாத்துடன், ஆகஸ்டு 12, 23, 26, 30 தேதிகளிலும், செப்டம்பர் 2, 13 தேதிகளிலும் கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது. அது பொறாமை, புழுக்கம், அறியாமை, அகம்பாவம், மௌட்டீகம் ஆகியவைகளையே வெளியில் கக்கி உருட்டித் திரட்டி ஒரு கட்டுரை ரூபத்தில் வெளிவந்திருக்கிறதெனக் கூறுவது மிகையாகாது.

1350 வருஷங்களுக்கு முன்னிருந்து இற்றைய நாள்வரை தோன்றிய மார்க்கக் கலாஞான திலகங்களாகிய மேன்மைதங்கிய இமாம்களும், குத்புமார்களும் வலிமார்களும் உலமாக்களும் மற்றும் அறிஞர்களும் மேதாவிகளும் ஏகோபித்து ஒப்புக்கொண்டு அனுஷ்டானத்திலிருந்துவரும் ஒரு பஹிரங்க விஷயமான "ஸையித்மார்கள்" என்ற நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் வம்சத்தை இல்லையென்று மறுத்தும், ஸையித்மார்களை அளவுகடந்து தூஷித்து, இழிவுப்படுத்தி எழுதியுமுள்ள ஆபாசக் கட்டுரையைக் கண்ணுறும் எந்த உண்மை முஸ்லிமுக்கும் ஆத்திரமும் ஆவேசமும், அருவருப்பும் உண்டாகாமலிருக்க முடியாதென்பது திண்ணம்.

இஸ்லாம் உலகம் ஒப்புக்கொண்டுள்ள பஹிரங்க இவ்விஷயம், தனக்கு எட்டவில்லையென்றால் மார்க்கக்கல்வி கற்ற உலமாக்களிடத்தில் இதைப்பற்றி சாதாரணமாக சந்தேக வினாக்கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டியது முறையாயிருக்க, அதை விட்டு விட்டு ஒரு ஹிந்துப் பத்திரிகையில் இவ்வித ஆபாச கட்டுரையை வரைந்து வெளியிட துணிந்ததிலிருந்து கவிக்கு "ஸையித்மார்கள்யார்?" என்பதன் உட்பொருளை யுணர்ந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கமில்லை யென்பது நன்கு விளங்கக் கிடக்கின்றது.

எனவே முதலாவதாக "ஸையித்மார்கள் யார்?" என்ற வினாவிற்கு மார்க்கக் கிரந்த ஆதாரங்களோடு விடை பகர்ந்துவிட்டுப் பின்னர் அவரின் பிதற்றல்களுக்கு தக்க வாயாப்பு கொடுக்க விரும்புகின்றேன்.

ஸையித்மார்கள்.

நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் அருமைப் புதல்வியரான பாத்திமா நாயகி (ரலி.) அவர்களின் செல்வக் குமாரர்கள் ஹஜரத் ஹஸன் (ரலி.), ஹஜரத் ஹுஸைன் (ரலி.) இவர்களின் சந்ததியார்களே ஸையித் மார்களாவர். ஹஜ்ரத் குத்புநாயகம் கவ்துல் அஃலம் முஹிய்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி.) அவர்களும், அன்னவர்களின் சந்ததியிலுள்ளவர்களாவார்கள்.

மற்ற நபிமார்களுக்கும், ஜனங்களுக்கும் கொடுக்கப்படாத சில உரிமைகளும், அனுமதிகளும், பதவிகளும் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு ஆண்டவனருளப்பட்டுள்ளனவென்பது நம் மார்க்க சித்தாந்தமாகும். உதாரணமாக நம்மனைவோர்களுக்கும் 4 மனைவிகளுக்கு மேல் ஏககாலத்தில் அனுபவித்துக்கொள்ள மார்க்கத்தில் அனுமதி கிடையாது; ஆனால் எம்பிரான் நபிநாயகம் (ஸல்.) அவர்களுக்கு மட்டும் ஏககாலத்தில் 10 மனைவிகளை மணந்து அனுபவித்துக் கொள்ளும் உரிமையை ஆண்டவனருள் புரிந்துள்ளான். இதைப் போன்று இன்னும் அநேக விஷயங்களுள. அவைகளுக்கு நாயகம் (ஸல்.) அவர்களின் "குஸூஸிய்யாத்" (சொந்த உரிமைகள்) எனப்படும். இவ்வித சொந்த உரிமைகளில் நாயகம் (ஸல்.) அவர்களின் அருமைப் புதல்வியரான பாத்திமா நாயகி (ரலி.) அவர்களை நாயகமவர்களின் ஆண் குமாரரின் ஸ்தானத்தில் ஆக்கிவைத்து, பாத்திமா நாயகியவர்களின் ஆண் சந்ததிகளை நாயகம் (ஸல்.) அவர்களின் ஆண்மக்களின் சந்ததிகளின் ஸ்தானத்தில் ஆண்டவன் ஆக்கிவைத்திருப்பதும் ஒன்றாகும். இதன் அகமியப் பொருளை யுணராக் குறையினாலேயே விஜயகவி என்பார்

‘நாயகமவர்கள் ஆண் மக்களை விட்டுச் செல்லவில்லையே, அங்ஙனமிருக்க ஸையிதுமார்கள், அவ்லாதுர்ரஸூல்கள் எங்கிருந்து உண்டானார்கள்?” என்றஸந்தேக வினா வினவ நேரிட்டிருக்கிறதெனத் தெரிகிறது. நாயகமவர்களின் உம்மத்துக்களாகிய எல்லா முஸ்லிம்களுடைய ஆண்மக்களின் ஆண் சந்ததிகள் தகப்பனுடைய அவ்லாதுகளாகவும் பிச்சளங்களாகவும் கருதப்படுவதுபோல் எம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் புதல்வியரான பாத்திமா நாயகி அவர்களின் ஆண் சந்ததிகள், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் அவ்லாத்களாகவும், பிச்சளங்களாகவும் நமது பரிசுத்த மார்க்கக் கட்டளைப்படி கருதப்பட்டு வருகிறது. அன்னவர்களே ஸையிதுமார்களும், அவ்லாதெ ரஸூலுமாவார்கள்.

இதற்கு புகாரீ, முஸ்லிம், ஜவாஹிருல் இக்தைன், கபீரி முதலிய மார்க்கக் கிரந்தங்களில் 100-க் கணக்கான ஹதீதுகளும், றிவாயத்துகளும் அநேக ஆதாரங்களுமுள்ளன. ஆனால் அவைகளை இவண் விரித்துரைக்க பத்திரிகை இடந்தராதாகையால், அவைகளிலிருந்து ஒரு சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஹஜ்ரத் ஜஅபர் (றலி) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்படுகிறதாவது :—

“அல்லாஹுத ஆலா ஒவ்வொரு நபியுடைய அவ்லாதுகளையும், பிச்சளங்களையும் அவரவர்கள் முதுகந்தண்டில் ஏற்படுத்தி விட்டான்; என்னுடைய அவ்லாதுகளை அலீ இப்னு அபீதாலிபின் முதுகந்தண்டில் ஏற்படுத்தி விட்டான்.”

என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீதை தப்ரானி இமாம் அவர்கள் கபீரியில் றிவாயத்துச் செய்கிறார்கள்.

* * *

“நபிகணாயகம் (ஸல்) அவர்களின் அருமைப் புத்திரியான பாத்திமத்துஸ் ஸுஹரா (ரலி) அவர்களின் அவ்லாதுகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவ்லாதுகளென்று கருதப்படுவது நாயகம் (ஸல்) அவர்களின் (குஸூஸிய்யாத்) சொந்தமாக அருளப்பட்ட அம்சங்களில் ஒன்றாகும்.” ……… “ஜவாஹிருல் இக்தைன்” முதலான கித்தாபுகளில் காண்க.

(பாத்திமா நாயகி (ரலி) அவர்களின் புதல்வர்களான) ஹஜ்ரத் ஹஸன் (ரலி) அவர்களுடைய அவ்லாதுகளை “ஸாதாத்தே ஹஸனீ” என்றும், ஹஜ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களின் அவ்லாதுகளை “ஸாதாத்தே ஹுஸைனீ” என்றும் கூறப்படுகிறது… (ஜவாஹிருல் இக்தைன்)

* * *

ஹஜ்ரத் உமறிப்னு கத்தாப் (ரலி.) அவர்கள், ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்களிடத்தில் அவர்களின் புதல்வியரான ஹஜ்ரத் உம்முகுல்தூம் (ரலி.) அவர்களை தங்களுக்கு நிகாஹ் செய்துகொடுக்கும்படி கேட்டார்கள். அதற்கு ஹஜ்ரத் அலீ (ரலீ.) அவர்கள் தங்களது மகளார் உம்முகுல்தூம் சிறு பிராயத்தை யுடையவர்களாக இருக்கிறார்கள்; அதுவும் தவிர தங்களது சகோதரரான ஜஅபர் உடைய குமாரருக்கு நிகாஹ் செய்துகொடுக்க ஏற்பாடு செய்துள்ளேன்” என்பதாக பதில் கூறினார்கள். அதற்கு ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் “சத்தியமாக என் சுக போக இச்சையை நாடி தங்களிடம் பெண் கேட்கவில்லை ஆனால், ‘ஒவ்வொரு வம்மிசமும் சந்ததிகளும் கியாமத்தென்னும் உலக முடிவுநாளில் தொடர்பற்றுப்போய் விடும் என்னுடைய வம்மிசத்தைத் தவிர; ஒவ்வொரு பெண் பிள்ளையுடைய ஆண் மக்களுக்குள்ள தகப்பன் தன்மை அவர்களின் தகப்பனுக்காயிருக்கும். பாத்திமாவின் பிள்ளைகளைத் தவிர; நான் அவர்களுக்கு தகப்பனுடைய பாத்தியதைக்காரனாவன்” என்று பெருமானவர்கள் திருவாய் மலர்ந்தருளியதை நான் கேட்டிருக்கிறேன் என்று கூறினார்கள்.

இந்த ஹதீதை இப்னு ஷஹ்பான் அவர்கள்ரிவாயத்துச்செய்திருக்கிறார்கள் ……… (ஜவாஹிருல் இக்தைன்)

* * *

மேற்கண்ட ஹதீதுகளிலிருந்து ஸையித்மார்கள் பாத்திமாநாயகி (ரலி.) அவர்களின் அருமைப் புதல்வர்களான ஹஜரத் ஹஸன் ஹஜ்ரத் ஹுஸைன் (ரலி.) இவர்களின் சந்ததிகளே யாவார்களென்றும், அவர்களே அவ்லாதெ ரசூலென்றும், அவர்களின் சந்ததியினர் கியாம நாள் வரை நிலைத்திருப்பார்களென்றும் நன்கு விளங்கக் கிடக்கின்றது.

மேலும்,

ஹஜ்ரத் ஜைத் பின் அல்கம் (ரலி) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்படுகிறதாவது;—

நபிகள் பிரான் றஸூல் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதாவது:—"உங்களிடம் 2 வஸ்துவை விட்டுப்போகிறேன்; நீங்கள் அவ் விரண்டையும் பின்பற்றி நடக்குங்காலமெல்லாம் நீங்கள் வழிகெட்டுப் போகமாட்டீர்கள். அவைகளில்,

(1) அல்லாஹுத ஆலாவின் திருவாக்கியங்களாகிய திருமறையாம் குர்ஆன் ஷரீப்,

(2) என்னுடைய அவ்லாதுகளாகிய அஹ்ல பைத்துகள் (குடும்பத்தினர்) என்பதே

மேற்கண்ட ஹதீதினல் நாயகம் (ஸல்.) அவர்களின் குடும்பத்தினர்க்கும் அவர்களின் அவ்லாதுகளுக்கும் எத்தனை மகிமையும் சங்கையும் உண்டென்பது நன்கு விளங்கக்கிடக்கின்றது.

ஆனல் இதில் ஒரு சந்தேகம் ஜனிக்கலாம்! அதாவது:—ஸையித்மார்களில் எவரேனும் குர்ஆன், ஹதீது முதலிய நம்மார்க்கக் கட்டளைகட்கு விரோதமாக நடப்பினும் அவர்களையும் அவர்களது நடப்பையும் பின்பற்ற வேண்டுமா? என்பதே.

இத்தகைய சந்தேகங்களுக்கு நம்மார்க்கக் கிரந்தங்களில் தெளிவான விவரம் காணக்கிடக்கின்றது. உண்மையான அவ்லாதெ றசூலாகிய ஸையித்மார்களிற் பெரும்பாலோர் நம் மார்க்க நெறிவழுவாது நடக்கும் தக்வா வுடையவர்களாகவே இருப்பர். எவரேனும் ஒரு சிலர் மார்க்க நெறி தவறி நடப்பின் அவர்களை நாம் பின்பற்றி நடக்கவேண்டிய அவசியமில்லை.

மேலே கூறப்பட்டுள்ள விஷயங்களெல்லாம் உண்மையான அவ்லாதெ ரசூலாகிய ஸையித்மார்களுக்கே உரித்தானதாகும்.

"அவ்லாதெ ரசூலல்லாதவர்கள் தங்களை அவ்லாதெ றசூலாகிய ஸையித்மார்களென்று கூறிக்கொள்வது ஹராமாகும்" என்று புகாரீ ஷரீப் முதலிய ஹதீது கித்தாபுகளில் கூறப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாயுள்ள அநேக விவரங்களும் நமது பரிசுத்த மார்க்கத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

அவ்லாதெ ரசூல் - ஸையித்மார்கள் எவ்வாறு அக்காலம் முதல் இக்காலம் வரை உலகத்தில் பரவி வசித்து வருகிறார்களென்ற வம்மிச பீடிகை நமது மார்க்கக் கிரந்தங்களில்விவரமாக கூறப்பட்டிருக்கிறது. அதன் சுருக்கம் வருமாறு:—

அவ்லாதுர் ரஸூல் (ஸல்.)

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு மூன்று புத்திரர்களும் நான்கு புதல்விகளுமிருந்தனர். (1) செய்யிதுனு காஸிம்:— இவர் ஹஜ்ரத் கதீஜா (ரலி.) அவர்கள் வயிற்றில் நபிகள் நாயகமவர்களுக்குப் பிறந்த சிரேஷ்டகுமாரராவார். இவர் நடப்பதற்குத் தகுந்தவயதை யடையவும் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

2. செய்யிதுனு அப்துல்லாஹ்:—நபிகள் நாயகமவர்களுக்கு நபித்துவம் கிடைத்த பின்பிறந்தவர். இவருக்கு தைய்யிப் என்றும் தாஹிர் என்றும் சிறப்புப் பெயர்களிருந்தன.

3. ஸெய்யிதுனு இப்ராஹீம்:—இவர் உம்முல் மூமினீன் ஹஸ்ரத் மாரியா காத்தூன் அவர்கள் வயிற்றில் நபிகள் நாயகமவர்களுக்கு கனிஷ்ட குமாரராகப் பிறந்தவர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு ஆண் குழந்தைகள் மூன்று இருந்தன வென்று மேலே குறிப்பிட்டாலும், ஸெய்யிதுனு காஸிம், ஸெய்யிதுனு இப்ராஹீம் ஆகிய இருவரைப்பற்றி எவ்வித அபிப்பிராய பேதமுமில்லை. ஆனல் இரண்டாவதாகக் குறிப்பிட்ட ஸெய்யிதுனு அப்துல்லாஹ்வைப் பற்றியும் அவரது சிறப்புப் பெயர்களைப்பற்றியும் அபிப்பிராய பேதமுண்டு. எவ்வாறாயினும் இவர்கள் யாவரும் பருவத்தையடையுமுன் தாருல்பகா அடைந்துவிட்டனர்.

பெண் குழந்தைகளில் ஸெய்யிதா ஜைனப் (ரலி.) சிரேஷ்ட புத்திரியாவார். இவர் ஹஜ்ரத் செய்யிதுனு காஸிம் அவர்களுக்குப்பின் பிறந்தவர். (2) ஹஜ்றத் ஸெய்யிதா ருக்கைய்யா (ரலி.)

3. ஸெய்யிதா உம்முகுல்தூம் (ரலி.) (4):—ஸெய்யிதத் துன்னிஸா பாத்திமத்துஸ் ஸஹ்ரா (ரலி.)

இந்நால்வரில் முதாவதான ஹஜ்றத் ஸெய்யிதா ஜைனப் (றலி.) அவர்கள் நபிகள் நாயகமவர்களின் 30-வது வயதில் பிறந்தவர். ஹஜ்றத் அபுல் ஆஸ் என்பவருக்கு விவாகம்

செய்து கொடுக்கப்பட்டார். இவருடைய வயிற்றில் அமாமா என்ற பெண் மகவும், அலீ என்ற ஆண்மகவும் பிறந்தனர். ஹஜ்றத் பாத்திமா (றலி.) அவர்களின் வபாத்துக்குப் பின் ஹஜ்றத் அலீ (றலி.) அவர்கள் ஷெ ஹஜ்றத் அமாமா(றலி.)வை மணம் புரிந்துகொண்டார்கள். இப்பிராட்டியாரின் சகோதரரான ஹஜ்றத் அலீ (நபிகள் நாயகமவர்களின் பேரர்) சிறு பிராயத்திலேயே தாருல்பகா அடைந்தார். ஆயினும் மக்காவை நாயகமவர்கள் கைப்பற்றியதற்குப்பின் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் வபாத்திற்குமுன் தாருல்பகாவை அடைந்ததாகத் தெரிகிறது.

2. ஸெய்யிதா ருக்கையா (றலி) நபிகள் நாயகமவர்களின் 33-வது வயதில் பிறந்தவர் இவர் ஹஜ்றத் உதுமான் (றலி) அவர்களுக்கு விவாகம்செய்து கொடுக்கப்பட்டு அப்துல்லாஹ் என்ற ஒரு புத்திரரை ஈன்றார். இக் குழந்தை இரண்டு வயதுவரை இருந்தது.

3. ஸெய்யிதா உம்முகுல்தூம் (றலி) :— இவர் ஹஜ்றத் உதுமான் (றலி) அவர்களுக்கே விவாகம் செய்து கொடுக்கப்பெற்றார். இவருக்கு சந்ததியில்லை. ஹிஜ்ரி 9-வது வருஷத்தில் வபாத்தானதாகத் தெரிகிறது.

4. ஹஜ்றத் பாத்திமதுஸ்ஸுஹ்றா (றலி):- இவர் நபிகள் நாயகமவர்களுக்கு நபித்துவம் கிடைத்த முதல் வருஷத்தில் பிறந்தவர். ஹஜ்றத் அலீகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களை மணந்து ஹஜ்றத் இமாம் ஹஸன் (றலி), ஹஜ்றத் இமாம் ஹுஸைன் (றலி) ஆகிய இரண்டு புத்திரர்களையும் ஹஜ்றத் உம்முகுல்தூம் (றலி.) ஸெய்யிதா ஜைனப் (றலி) என்ற புத்திரிகளையும் பெற்றெடுத்தார். ஹஜ்றத் உம்மு குல்தூமை ஹஜ்றத் உமர் (றலி) அவர்கள் மணம்புரிந்தார்கள். ஹஜ்றத் உமர் அவர்களுக்கு, இப்பிராட்டியார் வயிற்றில் ஹஜ்றத் ஜைத் என்ற ஆண் குழந்தையும் ருக்கையா என்ற பெண் குழந்தையும் பிறந்தது. ஸெய்யிதா ஜைனப் (றலி) அவர்களை ஹஜ்றத் அலீ (றலி) அவர்களின் தமையனரான ஹஜ்றத் ஜஃபரதையார் (றலி) அவர்களின் புதல்வர் அப்துல்லாஹ் என்பவர் விவாகம் செய்திருந்தார். இவருடைய வயிற்றில் ‘அதி’ என ஒரு ஆண்குழந்தை பிறந்தது. இவர் கர்பலா மைதானத்தில் ஷஹீதாக்கப்பட்டார்.

ஸெய்யிதுனா இமாம் ஹஸன் (றலி) :—இப் பெரியாருக்கு 1. ஜைது 2. ஹஸன் முதன்னா, 3 ஹுஸைன். 4. தல்ஹா 5. இஸ்மாயீல், 6. அப்துல்லா, 7. ஹம்ஜா, 8. யஅகூப், 9, அப்துர் ரஹ்மான், 10. அப்துல்லாஹ் அபூபக்ர், 11. காஸிம், 12. உமர் என 12-ஆண் மக்களும், 13. பாத்திமா, 14. உம்முஸல்மா, 15. உம்மு அப்துல்லாஹ், 16. உம்முல்ஹுஸைன் றமலா, 17. உம்முல் ஹஸன் என 5 பெண் மக்களும் இருந்தனர். இவர்களில் ஜைத்,ஹஸன்முதன்னா, ஹுஸைனுல் அஸ்ரம், உமர் ஆகிய நால்வருக்குச் சந்ததியிருந்தது. ஆனால் ஹுஸைனுல் அஸ்ரம், உமர் ஆகிய இருவரின் சந்ததிகள் சீக்கிரம் முடிவடைந்து விட்டன. ஜைத், ஹஸன் முதன்னாவின் சந்ததிகள் உலகத்திலிருக்கின்றன.

ஸெய்யிதுனா ஜைத் (றஹ்) அவர்கள் மரபில்தான் ஹைதராபாத் சமஸ்தானத்தைச் சேர்ந்த குல்பர்கா என்ற நகரில் அடங்கி இருக்கும் பிரக்யாதி பெற்ற ஹஜ்றத் ஸெய்யிது முஹம்மது கீஸுதராஸ் (றஹ்) என்ற குத்துபு அவர்கள் உதித்தார்கள்.

ஸெய்யிதுனா ஹஸன் முதன்னா (றஹ்) அவர்களுக்கு இப்ராஹீமுல்கமறு, ஹஸன் முதல்லது, அப்துல்லாஹ் மஹ்லு ஆகியவர்களும் (இவர்கள் இமாம் ஹுஸைன் (றலி) அவர்கள் புதல்வியின் வயிற்றில் பிறந்தவர்கள்.) தாவூத், ஜஃபர் ஆகியவர்களும் பிறந்தனர். அப்துல்லாஹ் மஹ்லு அவர்களுக்கு முஹம்மது தின்னப் ஸிஸ்ஸக்கியா, இப்ராஹீம், மூஸல்ஜௌன், யஹ்யா, சுலைமான், இத்ரீஸ், ஆக 6 ஆண்மக்களிருந்தனர். மூஸல்ஜௌன் அவர்கள் சந்ததியில்தான் நமது குத்துபுல் அக்தாப் ஸெய்யிதுனா முஹிய்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி, நாகூர் ஷாஹுல் ஹமீது நாயகர் தோன்றினர் இப்ராஹீமுல் கம்று என்பவரின் சந்ததியினர் ஏராளமாக இருக்கின்றனர். நமது இந்தியாவின் தலைநகரான டில்லியிலும் இவரது சந்ததியினர்கள் இருக்கின்றனர். ஹஸன் முதல்லது என்பவருக்கும் இப்பொழுது உலகில் சந்ததிகள் இருந்துவருகின்றன. தாவூத் என்பவர்க்கும் சந்ததியினர் இப்பொழுதுமிருக்கின்றனர். ஜஃபர் என்பவரின் சந்ததியினர் கஜ்வீன், முராவொ, ராவிந்து ஆகிய விடங்களிலிருக்கின்றனர்.

இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்கள் சந்ததி

ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களுக்கு ஜைனுல்ஆபிதீன் என்ற ஒரு புத்திரர் இருந்தார். 1. முஹம்மது பாகிர், 2. அப்துல்லாஹ், 3. ஜைதுஷ்ஷஹீத், 4. உமருல் அஷ்ரப், 5. ஹுஸைனுல் அஸ்கர், 6. அலீ அஸ்கர் ஆக 6 புத்திரர்களால் உலகில் சந்ததி பெருகி இருக்கிறது. உம்முகுல்தூம், கதீஜா என இரண்டு புத்திரிகளுமிருந்தனர்.

அப்துல்லாஹில் பாஹிர் :—என்பவரின் சந்ததியினர் பாரசீகத்திலுள்ள ரே, கும், ஜுர்ஜான் ஆகிய இடங்களில் இருக்கின்றனர்.

ஜைதுஷ் ஷஹீது :—இவரது வம்சமும் ஏராளமாகப் பெருகிற்று. கேத்ஹல், ஸூன் பஹ்ல் முதலிய இடங்களில் இருக்கின்றனர். இந்தியாவில் ஹஸ்ஸான் எனப் பெயர்பெற்ற மீர்குலாம் அலீ ஆஜாத்பல்கராமி குத்திஸ ஸிர்ருஹு அவர்கள் இப்பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இப்பெரியார் ஹிஜ்ரி 1200ல் வபாத்தானர்.

உமருல் அஷ்ரப் :—இவருடைய வம்சமும் உலகில் இருக்கிறது.

ஹுஸைனுல் அஸ்கர் :—இவருடைய வம்சம் இராக், ஹிஜாஸ், ஷாம் முதலிய தேசங்களில் இருக்கின்றன.

அலிய்யுல் அஸ்கர் :—இவருக்கும் சந்ததியினர் இருந்து வருகின்றனர்.

இமாம் பாக்கிர் :—இவர் ஹஜ்ரத் ஜைனுல் ஆபிதீன் (ரஹ்) அவர்களின் முதல் புதல்வர். இவரது தாயாரின் வம்சம் ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக்கைச் சேர்ந்தது. 1. மூஸாகாலிம், 2. இஸ்மாயீல், 3. அலீ, 4. முஹம்மது, 5. இஸ்ஹாக் ஆகிய 5 புதல்வர்களால் இவரது சந்ததி உலகில் இருக்கிறது.

3. முஹம்மது :—இவரது வம்சம் எகிப்தில் இருக்கிறது.

4. இஸ்ஹாக்;—இவரது வம்சமும் உலகில் இருக்கிறது. இவரை ஷீஆவகுப்பில் ஒரு பிரிவார் பன்னிரண்டு இமாம்களில் ஒருவராகக் கருதுகின்றனர்.

5. முஸாகாலிம்:—இவர் எல்லாரிலும் மூத்தவர். இவருக்கு 23 ஆண்குழந்தைகளும், 37 பெண்குழந்தைகளும் இருந்தன. இவர்களில் 10 பேருக்கு இன்னும் சந்ததியினர் இருக்கின்றனர். அஜ்மீர் ஷரீபில் அடங்கி இருக்கும் ஹஜ்றத்காஜாமுயீனுத்தீன்சிஷ்தி (றஹ்.) அவர்கள் இவ்வம்சத்தைச் சேர்ந்தவர்களே.

இமாம் அலியுர்ரிலா :—இவரது வம்சம் முஹம்மதுல் ஜவாத் என்ற புதல்வரால் லக்நௌ, கைர்ஆபாத், ஸபீதூன், ஸோனிபட், ஸாமானு முதலிய இடங்களில் இருக்கிறது.

இமாம் அலியுன்னக்கிய்யு:—இவரது வம்சம் அபூஅப்துல்லாஹ்ஜஃபர், ஹஸன் அஸ்கரீ ஆகிய இரண்டு புத்திரர்கள்மூலம் பெருகி இருக்கிறது. அப்துல்லாஹ் ஜஃபர் என்பவர் மாத்திரம் 120 மக்களுக்குத் தந்தை. ஆனல், அறுவரின் சந்ததிதான் விருத்தியாயிற்று. இவர்களது சந்ததி எகிப்திலும், இந்தியாவில் அம்ரோஹா, மலையாளம், புகாரீ ஆகிய இடங்களில் இருக்கின்றனர். டில்லியிலுள்ள ஹஜ்றத்காஜாகுத்துபுத்தீன் பக்த்யார்காக்கீ அவர்களும், மலையாளத்திலுள் அழிக்கல் என்ற இடத்தில் அடங்கி இருக்கிற ஸெய்யிது ஜலாலுத்தீன் புகாரீ ஆகிய இருவரும் இச்சந்ததியைச் சேர்ந்தவர்களே. ஸெய்யிது ஜலாலுத்தீன் புகாரீ அவர்களது வம்சத்தில் தான் மலையாளத்திலுள்ள புகாரித் தங்கள்மார்கள் பிறந்தவர்கள். இவர்களே யல்லாமல் நமது திருச்சி மௌலானு ஸெய்யிது முர்த்தஜாசாகிப், வேலூர் ஹஜ்றத்மக்கான் முதலியவர்கள் ஸெய்யிது மார்களாவார்கள். இந்தியாவிலும் இன்னும் அநேக அவ்லாது றசூல்கள் இருக்கிறார்கள் என்பதையும், நம்மவர் ஸெய்யிது மார்கள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதனையும் இந்திய பிரபல குத்துமார்களைப் பற்றியும் சிறிது விளக்கப்பட்டுளது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) மரணமாய் விட்டார்களா?

சோதரீர்! ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் பரிசுத்தமான-முர்ஸலான நபிமார்களி லொருவராகும். அவர்களுடையவும் அவர்களின் தாயாரான ஹஸ்ரத் மரியம ஸித்தீகா அவர்களுடையவும் அவர்களின் குடும்பத்தினர்களுடையவும் விவரங்களை திருக்குர்ஆன் அனேக அத்தியாயங்களில் விவரித்திருக்கிறது. எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் கியாமத்துடைய அடையாளமாகுமென்பதை திருக்குர்ஆன் பஹிரங்கமாக அறிவித்துவிட்டது. காதியானிகள் இது விஷயத்தில் பெருங்குழப்பத்தையும் பஸாதையும் உண்டுபண்ணுவர் என்பது நபிபெருமானர் (ஸல்.) அவர்களுக்கு முற்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்ததுபோலும் ஆகவே, ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் ஹயாத்துடன் இருக்கின்ருர்கள்; பிற்காலத்தில் இறங்குவார்கள் என்னும் விஷயத்தை வெகு விவரமாய் அறிவித்திருக்கிருர்கள். அதில் எவ்விதச் சந்தேகங் கொள்வதற்கும் இடமில்லை ஆகையால் மஸீஹ் (அலை.) அவர்கள் ஹயாத்துடன் இருக்கின்ருர்கள்; பின்காலத்தில் இறங்குவார்களென்பதில் உம்மத்துகள் இஜ்மாஉ செய்துவிட்டார்கள். இந்த மகத்தான மஸ்அலாவை மறுப்பவர்கள் வழிகெட்ட முர்தத்தாகி விடுவர் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகங்கொள்ளவே முடியாது. விஷயமிவ்வாறிருக்க, நம் தென்னட்டு அஹ்மதிகள் இப்பஹிரங்க போதனைக்கு மாற்றமாய் ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) அவர்கள் மரணமாய் காஷ்மீரத்தில் அடக்கப்பட்டுப் போய்விட்டார்களென்றும், கியாமத்நாள் சமீபத்தில் இறங்கமாட்டார்களென்றும் விதண்டாவாதஞ் செய்து வருகின்றனர்.

சமீபத்தில் பாஞ்சாலத்தில் தோன்றி மறைந்த மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானீ தன்னை மஸீஹ் என்று தாவாச்செய்ய வேண்டுமென உத்தேசங் கொண்டகாலம் முதற்கொண்டே அநேக விதண்டாவாதங்கள் புரிய முற்பட்டார். அவைகளில் ஹஸ்ரத் ஈஸா (அலை.) மரணமடைந்து காஷ்மீர் ஸ்ரீநகர் கான்யார் வீதியில் அடக்கப்பட்டிருக்கிருர்க ளென்று கூறியதும் ஒன்ருகும். ஈஸா (அலை.) மரணமடைந்துவிட்டார்களென்று ஸ்தாபித்துவிட்டால்தான், பிற்காலத்தில் வருவார்களென்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தாம் தானென்று கூறுவதற்கு வசதியாகயிருக்குமென்று ஆதாரமற்ற பொய்க் கூற்றுகளை கிளப்பிவிட்டார் அவருடைய கொள்கைகளும் கூற்றுக்களும் தக்கமுறையில் மறுக்கப்பட்டு உயிரிழந்த பிணங்களைப் போலாய்விட்டன. இவ்வாருக உயிறற்ற பிணங்களே போன்று மறைந்துபோன விஷயங்களை நந்தமிழ் நாட்டில் கிளப்பிவிட்டு வீண்பிளவு ஏற்படுத்தி வருவது விசனிக்கத் தக்கதேயாகும். அவைகளில், நூருத்தீன் என்பவர் எழுதிய கட்டுரையில் ஒரு நவீனமுறை கையாளப்பட்டிருக்கிறது. அக்கட்டுரையில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களையும், ஆதாரமாக எடுத்தாளப்பட்டிருக்கும் கிதாபுகளையும் நிரூபித்துக் காட்டுமாறு கூத்தாநல்லூர் ஜனப் முஹம்மது சுல்த்தான் ஆலிம்சாஹிப் அவர்களால் ஒரு பஹிரங்க அறிக்கை வெளியிடப் பட்டிருக்கிறது. மேலும் அந்நூருத்தீனின் கட்டுரையை மறுத்து ஜனப் லெ. அ. முஹம்மது யாஸீன் சாஹிபும், மௌலவீ அப்துல் ஜலீல் சாஹிபும் மற்றும் பலரும் தக்க ஆதாரங்களோடு கட்டுரைகள் வரைந்திருக்கின்றனராதலின் அவைகளை ஒருங்கே திரட்டி இதன்கீழ் பிரசுரிக்கப்படுகின்றன.

1933-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 1, 8, தேதிகளில் வெளியான தாருல் இஸ்லாம் பத்திரிகையில் "ஏன் வீண் விதண்டா வாதம்" என்று தலையங்கமிட்டு மௌலவி நூருத்தீன் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். ஹஜ்ரத் ஈஸா நபி (அலை.) அவர்கள் மரண மடைந்துவிட்டதாக வற்புறுத்துவதே அக் கட்டுரையின் முழுநோக்கமாகும். அதற் காதாரமாக திருக் குர்ஆனின் 3-54 ; 5-117 வசனங்களையும், "துர்ருல் மன்சூர்" வா. 4 பக்கம் 118-119-யும் "அஸஹுன் முஸப்பா" வா. 1 பக்கம் 409-யும், "மஜ்மஉல் பிஹார்" வா. 1 பக்கம் 282-யும், "ஜவாஹிருல் ஹிஸான் - பீ - தப்ஸீரில் குர்ஆன்" (அல்ஜேரியா பிரிண்ட்) வா. 1 பக்கம் 272-யும், "இக்மாலு இக்மாலுல் முஅல்லிம்" பக்கம் 285-யும், "முஸ்னத் இமாம் அஃலம்" பக்கம் 88-யும், "முஸ்னத் அஹ்மதிப்னு ஹன்பல்" வா. 6 பக்கம் 219-220-யும், "ஜாதுல் மஆத்" பக்கம் 19-யும், மேற்படி வா. 1 பக்கம் 301-230 யும் குறிப்பிட்டிருக்கிறார்.

இதைக்கண்ட பொது மக்கள், இத்தனை கிதாபுகளிலும் வருவதாக கித்தாபுகளின் பெயர்களையும், பக்கங்களையும் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, இஃது உண்மையாக இருக்கலாமோவென்று நினைக்கக் கூடும். ஆனது பற்றியே அதில் நூருத்தீன் என்பார் செய்துள்ள சூழ்ச்சியையும், புரட்டையும் பொது மக்களுக்கு வெளிப்படுத்திவிட வேண்டியது உண்மையை யுணர்ந்தவர்கள்மீது கடமையாகுமென்பதைக் கருதியே இக் கண்டனத்தை எழுத துணிந்துள்ளேன்.

ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் மரண மடைந்து விட்டதாக திருக் குர்ஆன் 3-54 லும், 5-117லும் கூறப்படவில்லை. அவ்வாறு கூறப்பட்டிருப்பதாக பிடிவாதம் செய்யும் இந்தநூருத்தீன், பகிரங்கமாக நிரூபிக்க முன் வருவாரா ? இந்த நூருத்தீன் குறிப்பிட்டிருக்கிற கிரந்தங்களில், துர்ருல்மன்சூர், முஸ்னது இமாம் அஃலம், ஜாதுல்மஆத், தபகாத், தப்ஸீர்ஜலாலைன் முதலிய அநேக கிதாபுகளைப் பார்வையிட்டேன். ஆனால் இந்நூற்களில் நூருத்தீன் குறிப்பிட்டிருக்கிற பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் அவர் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள் முழுதுமோ, அல்லது சில வாக்கியங்களோ, அதற்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களோ எதுவும் காணப்படவில்லை. அவர் உண்மையில் அந்தக் கிதாபுகளைக் கண்கூடாகப் பார்த்து எழுதியவராக இருப்பின் தாம் குறிப்பிட்ட நூற்களில் அவருடைய தாவாவிற்கு ஆதாரங்களை எடுத்துக் காட்டட்டும் பார்ப்போம் !

ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் மரண மடைந்துவிட்டதன் விபரம் புஸ-ஸ-ல்ஹிகமில் இருப்பதாக, இதற்கு முன் இன்னோரின் பார்ட்டியைச் சார்ந்த ஒருவர் கூறினர். ஆனால் அந்த நூலிலும் அவ்வாறு கூறப்படவில்லை. ஆகவே இன்னோர் சத்திய மதத்தின் கொள்கைகளைச் சரியாக உணராமல் தாறுமாருய் பத்திரிகை, புத்தகங்களில் எழுதிவிட்டு, தங்கள் தாவாவிற்கு ஆதாரமாக ஏதேனும் ஒரு கிதாபைக் குறிப்பிட்டு விடுகின்றனர். இன்னோர் பொதுமக்களை ஏமாற்றுவான் வேண்டி, இப்பொழுது புதிதாக இந்த உபாயத்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர் போலும் !

ஈஸா (அலை.) மரணமாகி விட்டார்களென்பதற்கு நூருத்தீன் என்பார் காட்டும் ஆதாரங்களில் முக்கியமாக கீழ்காணும் விஷயத்தைக் குறிப்பிடுகிறார்.

"எம்பிரான் (ஸல்) அவர்கள் மரண மடைந்தபோது ஸஹாபாக்கள் எல்லாம் திகைப்புற்றிருந்தனர் ; ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் வாயிலுக்கு எதிரேயிருந்துகொண்டு, "எவரேனும் நாயகம் (ஸல்) அவர்கள் தேக வியோகமாகி விட்டார்களெனக் கூறினால் இதோ என் கையிலிருக்கும் கத்தியால் அவருடைய சிரசைக் கொய்துவிடுவேன்" என்று கம்பீர முழக்கம் செய்துகொண்டிருந்தார்கள் ....அது சமயம் அபூபக்ர் (ரலி.) அவர்கள் "நாயகம் மரணமடைந்தது உண்மையே ; இவர்கள் மரணமடைந்ததில் என்ன ஆச்சரியமிருக்கின்றது? இவர்களுக்கு முன் தோன்றிய எல்லா நபிமார்களும் (ஹஜ்ரத் மஸீஹ் உட்பட) மரணமடைந்து போயிருக்கிறார்கள். எனவே நமது இந்த நபியும் இயற்கையாக மரணமடைந்து விட்டாலோ, அல்லது கொல்லப்பட்டுப் போனாலோ நீங்கள் உங்கள்பின் புறமாகத் திரும்பி விடப்போகிறீர்களா ? இந்த நபி மரணமடைந்துவிட்டால் உங்கள் மார்க்கத்தை திரஸ்கரித்து விடப் போகிறீர்களா ?" என்று கூறி

னார்கள். இந்த விஷயத்தை சகல ஹதீஸ் கிரந்தங்களிலும் அநேகமாகக் கண்டுகொள்ளலாம் குறிப்பாகப் தப்ஸீர் துர்ருல்மன்ஸூர் வா. 4 பக்கம் 118, 119 பார்க்க.

ஹஜரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் கூறிய மேலே குறிப்பிடப்பட்ட கூற்றிலிருந்து நூருத்தீன் என்பார் ஏதேதோ குயுக்தி அருத்தங்கள் செய்து ஹஜ்ரத் ஈஸா (அலை.) மரணமாகி விட்டார்களென்று பிடிவாதமாய் எண்பிக்க முயன்றிருக்கிறார். ஹஜ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் கூறிய கூற்றுக்கள் அநேகஹதீது கித்தாபுகளில் வருகின்றனவென்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவர்களுடைய அக் கூற்றிலிருந்து ஹஜ்ரத் ஈஸா (அலைஹி) அவர்கள் மரணித்துப் போனார்களென்று விளங்குவதாக நூருத்தீன் கூறும் குதர்க்க வாதத்தையே நான் மறுக்கிறேன்.

நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் வபாத்தை முன்னிட்டு ஹஜ்ரத் அபூபக்ர் (ரலி.), ஹஜ்ரத் உமர் (ரலி), ஹஜரத் உதுமான் (ரலி), ஹஜ்ரத் அலீ (ரலி.) முதலிய கலீபாக்களும் மற்றும் எல்லா சஹாபாக்களும் ஆற்றொணாத்துயருற்று மனக்கலக்கமுற்றிருந்த சந்தர்ப்பத்தில் ஹஜ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள், முந்தின நபிமார்கள் (அலைஹி முஸ்ஸலாம்) மரணமானதுபோல் நமது நபிகளாயகம் (ஸல்.) அவர்களும் மரணமாகி விட்டார்களென்று கூறிய கூற்றிலிருந்து ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்களும் மரணமாகிவிட்டார்களென்று எந்த குருட்டு விளக்கமுடையவனும் கூட விளங்கிக் கொள்ளமாட்டானென்பதும், அந்நேரத்தில் ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்களும் ஏனைய ஸஹாபாக்களும் ஈஸா (அலை.) அவர்கள் மரணமாகவில்லையேயென்று தர்க்கிக்காமல் சும்மாயிருந்து விட்டதால் ஈஸா (அலை.) மரணமாகி விட்டதாக இவர்களும் ஒப்புக் கொண்டார்களென்றும் எந்த மந்தப் புத்திக்காரரும் கூற முன் வர மாட்டாரென்பதும் திண்ணம்.

அந்த நேரம் வார்த்தைகளைக் குறித்து தர்க்க வாதஞ் செய்யக் கூடிய நேரமாக இருக்கவில்லை யென்பதை யாரே மறுக்கவல்லார்? அரபி இலக்கண இலக்கியச் சட்டத்திலும், அரபியர்களின் பழக்க வழக்கத்திலும், மிகு தம்பேர்கள் வந்து விட்டால் எல்லோரும் வந்து விட்டார்களெனக் கூறுவது வழக்கமாயிருந்து வருவதை யொட்டியே ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள், முந்தின நபிமார்கள் மரணமானதுபோல் என்று கூறினார்களே யன்றி, ஒவ்வொரு நபிமார்களும் மரணமாகி விட்டார்களென்று கூறவுமில்லை; அவ்வாறு விளங்கிக்கொள்வதற்கு அவர்களின் கூற்றில் இடங் கொடுக்கவு மில்லையென்பது வெளிப்படை. மேலும் அவ்விதப் பழக்க வழக்கம் நம்மிலும் இருந்து வருவதை இன்றும் காணலாம். உதாரணமாக,

நாம் நடத்தும் விவாக சபைகளிலோ, விருந்து சபைகளிலோ, மகாநாட்டுக் கூட்டங்களிலோ சபைகளை நடத்துவதற்கு எல்லாரும் வந்துவிட்டார்களா எனக் கேட்கப்படின், அங்கு வரவேண்டிய முக்கியஸ்தர்களும் பெரும்பாலோரும் வந்துவிட்டால் "எல்லோரும் வந்துவிட்டார்கள்" என்று கூறுவது கண்கூடு. அச்சபைக்கு ஒருவர் இருவர் வராமலிருந்தால் அதனைக் காரணமாகக் கொண்டு 'எல்லோரும் வந்துவிட்டார்கள்' என்று சொன்னவர் தவறாகச் சொன்னாரென்று யாரும் கூறமாட்டாரென்பது திண்ணம். எனவே, ஹஜ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் கூறிய கூற்றின் இவ்வுண்மையை யுணர்ந்ததனாலேயே ஸஹாபாக்கள் விவாதமொன்றும் செய்யாமலிருந்துவிட்டனரென்பது செவ்வனே விளங்கக் கிடக்கின்றது. உண்மை இங்ஙனமிருக்க, நூருத்தீன் என்பார் ஏதேதோ குயுக்தியான அருத்தங்களை குருட்டுத்தனமாக விளங்கிக் கொண்டு இதை ஒரு பெரும் ஆதாரமாக கையாண்டிருப்பதோடு பாரவான்களாகிய 4 இமாம்களும் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய மேற்கண்ட கூற்றை மறுக்காமலிருந்து விட்டது கொண்டு ஈஸா (அலை) மரணித்துப் போனார்களென்பதை அவர்களும் ஒப்புக் கொண்டிருந்ததாக குறிப்பிடுகிறார். இவரது விபரீத விளக்கந்தானென்னே!

ஹஜ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களின்வாக்கியத்திற்கும், ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் ஹயாத்தாகவே இருக்கிறார்கள் என்பதற்கும் எத்தகைய முரணும் இல்லையென்பதன் உண்மையைப் பாரவான்களாகிய இமாம்கள் உணர்ந்ததனாலேயே ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி.) அவர்களின் வார்த்தைகளின்

மீது யாதொன்றும் கூறாமல் சும்மா இருந்து விட்டார்களென்பது திண்ணம்.

நூருத்தீன் என்பாரின் விபரீத விளக்கம் பாரவான்களாகிய இமாம்களுக்கு உண்டாகியிருக்குமாயின், அப்பொழுதே அதற்கு மறுப்புக்கூறி யிருப்ப ரென்பதிலையமில்லை. உண்மை இவ்வாறிருக்க, ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள், "எல்லா நபிமார்களும் மரண மடைந்தே போயிருக்கிறார்கள்" என்று கூறிய கூற்றுக்கிடையே (ஹஜ்ரத் மஸீஹ் உட்பட) என்று பிராகட் கொடுத்து நூருத்தீன் எழுதி யிருப்பதற்கு ஏதேனும் ஆதாரத்தைக் காட்ட அவரால் முடியுமா? தன் சொந்த குயுக்தியைக் கொண்டு இவ்வாறு பிராகட் கொடுத்து எழுதுவதெல்லாம் பொது மக்களை ஏமாற்றுவதற்கல்லவா?

இது நிற்க, மேலும்

"4 இமாம்களான முஜ்தஹிதே முத்லக் (நிபந்தனை யற்ற ஆராய்ச்சியாளர்) களுக்குள் ஒருவராகிய இமாம் மாலிக் (ரஹ்) ஹஜ்ரத் ஈஸா (அலைஹி) அவர்கள் மரணமடைந்து விட்டார்களெனக் கூறியிருக்கிறார்கள்" மஜ்ம உல் பிஹார் வா-1. பக்கம் 282 பார்க்க. எனக் கூறுகிறார்.

மேற்கண்ட கூற்று, ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்கள் மீது நூருத்தீன் சுமத்தும் அபாண்டப் பொய்யான பெரும்பழியாகுமென்பதில் சந்தேகமில்லை.

நூருத்தீன் என்பார் கூறும் மாலிக் என்பவர் ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களல்லவென்பது நிச்சயம். ஏனெனின், ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களே ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் வானத்தினின்றும் இப்பூவுலகின் கண் இறங்குவார்களென்று 'ஹுதைபா" என்னும் நூலில் கூறி யிருப்பதாக "ஷரஹு முஸ்லிமில்" எழுதியிருப்பதை ஷெய்குல் ஹதீது மௌலானா முஹம்மத் அன்வர்ஷா அவர்கள் தங்களின் "இக்பாருல் முல்ஹி தீ, பீ. வுரூரியாதுத்தீன்" என்னும் கிரந்தத்தில் வரைந்திருக்கிறார்கள். (மத்பூ ஆத் மஜ்லிஸுல் இல்மி 7-ம் பக்கம் பார்க்க.)

இதிலிருந்து நூருத்தீன் என்பார் குறிப்பிடுவது ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களல்லவென்பது நிஷ்பட்சமாக விளங்கி விட்டதன்றோ?

மேலும் ஹஜ்ரத் அபூஹனீபா (ரஹ்.) அவர்கள் இதை ஆட்சேபிக்கவில்லையாதலின் அவர்களும் இதனை ஏற்றுக்கொண்டார்களென்று விளங்குவதாக நூருத்தீன் கூறுவது தவறென்பது நன்கு விளங்கிவிட்டது. ஏனெனின், ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்கள், ஈஸா (அலை.) மரணித்துப் போனார்களெனக் கூறவில்லையென்பது நிச்சயமாகிவிட்டபொழுது, ஹஜ்ரத் இமாம் அஃலம் அவர்கள் இது சம்பந்தமாக இமாம் மாலிக் இடம் மறுத்துக் கூறாமலிருந்தது ஹஜ்ரத் ஈஸா (அலைஹி) மவ்த்தாகி விட்டார்களென்பதை ஹஜ்ரத் இமாம் அஃலம் (ரஹ்.) ஒப்புக்கொண்டதாக ஏற்படுகிறது எனக் கூறுவது சுத்தத் தவறாகுமென்பது வெள்ளிடை விலங்கல். மேலும்,

இமாமுல் அஃலம் அபூ ஹனீபா (ரஹ்.) அவர்கள் எழுதியுள்ள "பிக்ஹுல் அக்பரில்" எழுதப் பட்டிருப்பதாவது:—தஜ்ஜாலும், யாஜூஜ் மாஜூஜும் வருவதும், சூரியன் அஸ்தமிக்கும் திசையிலிருந்து உதயமாகுவதும், வானத்திலிருந்து ஈஸா (அலை.) அவர்கள் இறங்குவதும், கியாமத்து நாளின் ஏனைய அடையாளங்களும் உண்மையே என்பதே. சந்தேகத்திற்குக் கூட இடமில்லாதவாறு இவ்விதம் எழுதியிருக்க, இமாம் அஃலம் அவர்களும் ஈஸா (அலை.) இறந்துவிட்டார்களென ஒத்துக்கொண்டிருப்பதாகக் கூறியது அபாண்டமே. மேலும்,

ஹஜ்ரத் இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் தங்களுடைய முஸ்னதில் "மர்யமுடைய மகன் ஈஸா (அலை.) கியாமத்திற்குமுன் இப்பூவுலகிற்கு வருவது உண்மையே" என்று எழுதியிருக்கிறார்கள்.

இதிலிருந்து ஹஜ்ரத் இமாம்மாலிக், ஹஜ்ரத் இமாம் அஃஜம், ஹஜ்ரத் இமாம் அஹ்மதிப்னுஹன்பல் ஆகிய 3 இமாம்களும் ஏகோபித்து ஈஸா (அலை.) ஹயாத்தாகவே இருக்கிறார்கள்; பின்னால் இப்பூவுலகிற்கு வருவார்களென்று கூறியிருப்பது அவர்களுடைய கித்தாபுகளிலிருந்தே நிரூபணமாகிவிட்டது.

ஹஜ்ரத் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் இமாம் அஃலம் (ரஹ்) அவர்களின் முக்கிய சிஷ்யரான இமாம் முஹம்மத் (ரஹ்) அவர்

களுடைய சிஷ்யராகவும், ஹஜ்ரத் ஹன்பலீ இமாமவர்களுக்கு உஸ்தாதாகவும் இருந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய கொள்கையும் மற்ற இமாம்களுடைய கொள்கையைப் போலாகுமென்பதில் என்ன சந்தேகம்?

உண்மை இவ்வாறிருப்பதால், நூருத்தீன் என்பார் ஹஜ்ரத் ஈஸா (அலை.) மரணமாகிவிட்டார்களென்பதை 4 இமாம்களும் ஏகோபித்து ஒப்புக்கொண்டுள்ளார்களெனக் கூறியிருப்பது சுத்தத் தவறென்று நன்கு நிரூபணமாகிவிட்டது.

மேலும் நம்மவர்களில் வயோதிகர்களுக்கு "வயது காலம்" என்று கூறுவதைப்போல் 40 வயதுக்கு மேற்பட்டவருக்கு "மாலிக்" என்று கூறுவது அரபிகளிடத்துள்ள ஓர் வழக்கமாக இருந்துவருகிறது. இதனை இப்னுஹஜர் அஸ்கலானி அவர்கள் தங்களது தஹ்தீபுத் தஹ்தீப் என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நூருத்தின் எடுத்துக்காட்டும் "மஜ்மஉல்பிஹார்" என்ற நூலின் முழு வாசகமாவது ;—

"முஹம்மதிய ஷரீஅத்தின்படி தீர்ப்புச் செய்கிறவர் இறங்குவார்; ஈஸா (அலை.) மரிக்கவில்லை என்பதே எல்லோரின் நம்பிக்கை. இன்னும் இறந்து போனதாக மாலிக் (வயது காலம்) கூறியிருக்கிறார். இன்னும் அவர் 33 வயதுடையவரா யிருந்தார்; அல்லாஹ் அவரை வானத்தின் பக்கம் உண்மையாக உயர்த்திக்கோள்ள நாடினான். முத்தவாத்திரான ஹதீதுகளின்படி ஈஸா நபி பிற்காலத்தில் வருவார்.

இதுதான் மஜ்மஉல் பிஹாரின் முழு வியாசம். இதில் ஈஸா (அலை.) இறந்துவிட்டதாக கூறுவது ஒரு அநாமதேய வயோதிகப் பேர்வழியின் அபிப்பிராயமென்று நிரூபணமாகிறது.

இந்த மாலிக் என்ற வயோதிகரைத் தான் ஹஜ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் என்று தவறுக நூருத்தீன் என்பார் புரட்டிக் கூறியிருக்கிறார்.

ஈஸா (அலை.) மரணமடைந்து விட்டதாக புஸூஸில் வருவதாக அக்கோஷ்டியினர் கூறுகின்றனர். அதுவும் சுத்தத் தவறாகும். அவர்களின் இக்கூற்றுக்கு புஸூஸில் எவ்வித ஆதாரமும் கிடையாதென்பது திண்ணம்.

புஸூஸில் எழுதப்பெற்றிருப்பதெல்லாம் அவர்களுடைய வயது இன்றுவரை (இப்னு அரபி (ரஹ்) அவர்களின் காலம் வரை) 1000 வருடங்களுக்கு மேலாகின்றனவென்பதே. அதற்கு வியாக்கியானம் எழுதிய ஸெய்யிதுனு அப்துல்கனியின் நாபிலிஸி அவர்கள் அதை விரித்துக் கூறுகையில் "மக்கள் யாவரும் இத்தரணியின் கண்ணே அடையும் மரணமாகிய மௌத்துத்தபஇயை (இயற்கை மரணம்) ஈஸா (அலை.) அவர்கள் அடையவில்லை என்றும், இனிமேல் இறுதிக் காலத்தில் அவர்கள் இவ்வுலகிற்கு வந்து விவாகம் செய்து நம்மைப்போல் உண்டு உறங்கி மவுத்துத்தப இயை அடைவார்கள்" என்றுமே வலியுறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

ஆனல் ஒருசில விதண்டாவாதிகள் கூறுவதுபோல், நான்காம் வானத்தில் சாப்பாட்டிற்கும், மல ஜல பாதைக்கும் என்ன செய்வார்கள் என்றுகேள்விகேட்க சில வழிகேடர் தோன்றுவர் என்பதற்காகவே, அத்தகைய கேள்விக்கு இடமில்லை யென்பதை வற்புறுத்தி இத்தரணியின் இயற்கைத் தன்மையான பசி, தாகம், மலஜல உபாதைகள் அவர்களை விட்டு நீக்கப்பட்டு விட்டது என்று கூறி, இவ்விதம் நீக்கப்படுவதற்கு மௌத் துன்னப்ஸானி என்று அதே நாபிலிஸி குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாறே இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் தங்களுடைய தப்ஸீரில் திரு குர்ஆன் அ. 3-வ. 54 க்கு எழுதிய வியாக்கியானத்திடையே கூறியிருக்கிறார்கள். இப்பெரியார் ஹஜ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையினரின் புதல்வரும் கியாதிபெற்ற ஸஹாபியுமாவர். இவர்களுடைய தப்ஸீரே தப்ஸீர்களில் முதன்மையான தென்பதும், இவர்கள் இமாமுல்முபஸ்ஸிரீன் என்ற சிறப்புப் பெயர் உடையவர்களென்பதும் வெளிப்படை.

இவ் வுண்மையை உணராமல் ஒரு சிலர், ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் நாலாம் வானத்தில் என்ன உண்கிறார்கள், எவ்விடத்தில் மலஜல உபாதைகளைக் கழிக்கிறார்கள் என்று முணுமுணுக்கின்றனர்.

கிற்க, திருக் குர்ஆனும், ஹதீதும் கூறுவ தென்ன வென்ருராய்வோம்: குறிப்பாக ஷெ மௌலவி என்பார் சுட்டிக் காட்டியுள்ள திருகுர்ஆன் 3-54-ல் "ஈஸாவே! உமக்கு நான் வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுபவ னுக இருக்கிறேன். இன்னும் என்னளவில் உம்மை உயர்த்துபவனுகவு மிருக்கிறேன். இன்னும் காபிரானவர்களை விட்டு உம்மைப் பரிசுத்தப்படுத்துபவனுக இருக்கிறேன்" என்று கூறப்பட்டிருக்கிறது.

இன்னும் சூரா 5. 117-118-லுள்ள குர் ஆன் ஆயத்தின் விபரமாவது:—

"மர்யமுடைய மகன் ஈஸாவே! உம்மை யும் உம் தாயாரையும் அல்லாஹ்வைத் தவிர வேறு இரு தெய்வங்களாகப் பாவிக்கும்படி மனிதர்களுக்கு நீர்தாஞ கூறினீர்? என்று அல்லாஹ் கூறியபோது "உன்னைத் துதிக்கி றேன்; எனக்கு உரிமையில்லாததைநான்கூற எனக்கு என்ன (உரிமை) இருக்கிறது. நான் அதைக் கூறியிருந்தால் நிச்சயமாக நீ அதை அறிவாய். என் மனத்திலுள்ளதை நீ அறி கிருய், உன் மனத்திலுள்ளதை நான் அறிய மாட்டேன். நிச்சயமாக மறைவான விஷ யங்களை நீதான் மிகவும் அறிபவன். எனக்கு றப்பாகவும், உங்களுக்கு றப்பாகவும் இருக் கிற அல்லாஹ்வையே வணங்குங்கள் என்று எனக்கு நீ ஏவியதையல்லாமல் அவர்களுக்கு நான் (வேறு எதையும்) கூறவில்லை. இன்னும் அவர்களில் நான் இருந்த காலமெல்லாம் அவர்கள்மீது நான் சாக்ஷியாக இருந்தேன். ஆனல் எனக்கு நீ (வாக்குத்தத்தத்தை) நிறைவேற்றியபோது அவர்கள் மீது நீதான் காவலனுக இருந்தாய்" என்பதே.

திரு குர்ஆன் சூரா 43 வசனம் 61ல் "இன்னும் நிச்சயமாக அவர் (ஈஸா.) கியாமத்து நாளின் அடையாளம்; ஆகவே, நீங்கள் அதைச் சந்தேகிக்க வேண் டாம்" என்று இறைவன் கூறிவிட்டான். இவையன்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளில் இரண் டொன்றைக் கீழே குறிப்பிடுகிறேன்.

1. "அல்லாஹ்வின்மீது சத்தியமாக, நிச் சயமாக அவர் (ஈஸா.) இன்றையதினம் அல் லாஹ் இடத்தில் ஜீவித்திருக்கிறுர். ஆனல், அவர் இறங்கும்போது நீங்கள் யாவரும் அவரை ஒப்புக்கொள்ளுங்கள்" என்று நபி கள் நாயகம் (ஸல்) திருவுளமானதாக தப் ஸீர் இப்னு ஜரீர் வா. 6 பக்கம் 14-வில் ஹஸன் (ரலி.) அவர்களுடைய ரிவாயத்துக் கூறுகிறது.

2. "எவனுடைய கையில் என் ஆத்மா இருக்கிறதோ அவன்மீது சத்தியமாக மர்ய முடைய மகன் நியாயம் தீர்க்கிறவராகவும், அதிபதியாகவும்உங்களில் இறங்குவது நிச்சய மாகவேநெருங்கிவிட்டது" எனநபிகள் நாய கம்திருவுளமானதாக அபூஹுரைரா (ரலி.) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறுர்கள். இந்த ஹதீது ஸிஹாஹ் சித்தாவைச்சேர்ந்த புகாரி, முஸ்லிம் அபூதாவூத் திர்மதீ ஆகிய கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கின்றது.

நாயகம்(ஸல்)அவர்கள் கூறியிருப்பதாவது. மர்யமின் குமாரர் ஈஸா, முஹம்மதை உண் மைப்படுத்துகிறவராகவும், அவரின் மார்க் கத்தைப் பின்பற்றுகிறவராகவும் இறங்கு வார்; தஜ்ஜாலைக் கொல்லுவார். இதற்குப் பின் கியாமத் ஏற்படுவதைத் தவிர வேறொ ன்றுமில்லை. பஜாஜ், தப்ரானி.

நபிகளுயகம் (ஸல்) அவர்கள் யூதர்களைப் பார்த்து "நிச்சயமாக ஈஸா (அலை) மரண மடையவில்லை; கியாமத்து நாளைக்கு முன் உங்களிடம் திரும்பவருவார்" என்று கூறிய தாக பெருமானவர்களின் அருமைப் பேர ராகிய ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்கள் ரியாவத்துச் செய்திருக்கிறுர்கள். ("தப்ஸீர் இப்னுகதீர்.")

இது சம்பந்தமான அனேகம் ஹதீதுகள் முதவாத்திருன தறஜாவை எத்தியவைகளா யிருக்கின்றன.

சோதரர்காள்! நூருத்தீன் குறிப்பிட்ட மேற்கண்ட முதலிரண்டு ஆயத்துக்களில் ஹஜ்ரத் ஈஸா நபி அவர்கள் மரணித்துவிட்ட தாகக் கூறப்படாமல் அவர்களை உயர்த்திக் கொள்ளப்பட்டதாகவே கூறப்பட் டிருக் கிறது. தவிரவும் நாம் குறிப்பிட்ட 3 வது ஆயத்தில் அவர்கள் (ஈஸா நபி) கியாமத்து நாளைக்கு ஒரு அடையாளமாக இருக்கிறுர் கள் என்று தெளிவாக விளக்கப்பட் டிருக் கிறது. இவ்வாறு ஈஸா (அலை) கியாமத்தின் அடையாளமாக விருப்பதென்பது அவர்கள் உயிருடனிருந்து இறுதிக் காலத்தில் இவ் வவனியின்கண் இறங்குவார்களென்பதைதே திருவசனம் பஹிரங்கமாக அறிவித்திருக்

கின்றது. இதனை எந்த கல்விமானும் மறுப்பதற்கியலாது.

முதலிரண்டு ஆயத்துக்களிலும் 'முத்தவப்பீக', 'தவப்பைத்தனி' என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அப் பதத்திற்கு நிறைவேற்றுதல், பூர்த்தி செய்தல் என்பது தான் பொருளாகும். எனினும் அரபிகள், தம் வழக்கத்தில் மரணத்திற்கும் அப்பதத்தை உபயோகப்படுத்துகின்றனர். அவர்களின் வழக்கத்தை யனுசரித்து ஈஸா (அலை) மரணமடைந்துவிட்டதாகப் பொருள்கொள்ள நாம் குறிப்பிட்ட 3-வது ஆயத்தும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் முத்தவாத்திரான ஹதீதுகளும் இடங்கொடுக்கவில்லை. அன்றியும், இந்த மூன்றாவது அர்த்தமாகிய மவ்த்து என்ற அர்த்தத்தையே வாங்குவதென்றாலும் அந்தப்பதம் அரபி இலக்கணப்படி 'இஸ்முபாயிலாக' இருக்கிறது. இஸ்முபாயில் காலத்தைக் குறிப்பிடக் கூடியதல்ல. அவ்வாறு காலத்தைக் குறிப்பிட்டாலும் எதிர்காலத்தையே குறிப்பிடும்; இறந்த காலத்தைக் குறிப்பிடமாட்டா தென்பது அரபி இலக்கணந் தெரிந்த யாவரும் அறிந்த விஷயமே.

ஹதீதுகளிலோ, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சத்தியஞ் செய்து ஹஜ்ரத் ஈஸா (அலை) ஜீவித்திருப்பதையும், அவர்கள் உலகிற்கு இறங்கிவருங்காலம் நெருங்கிவிட்டதென்பதையும் வற்புறுத்திக் கூறி, அவர்கள் வந்த பிறகு அவர்களை முஸ்லிம்கள் நிராகரிக்கக்கூடாதென்றும் எச்சரித்திருக்கிறார்கள்.

இது நிற்க, நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீதுகளையே, ராவிகள் சரியல்லவென்றும், ஸஹீஹான ஹதீதுகளல்லவென்றும், அவ்ஹதீதுகளை ஆதாரமாகக் கொள்ளலாகாதென்றும் விதண்டாவாதம் புரியும் காதியானி அஹ்மதிக் கோஷ்டியைச் சார்ந்த நூருத்தீன் என்பார், தமது கூற்றுக்கு ஆதாரமாக

"ஒருவர் மதீனாவிற்குப் பக்கத்திலுள்ள மலைக்குச் சென்றதாகவும், அங்கு கல்லறையொன்றைக் கண்டதாகவும் அதில் ஞாபகச் சின்னக் கல்லொன்றை கண்டெடுத்ததாகவும், அக்கல்லில் ஏதோ ஒருபாஷையில் எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்ததாகவும், அதில் இது "மர்யமுடைய மகன் றசூலுல்லாஹ் ஈஸாவுடைய கல்லறை யென்று எழுதப்பட்டிருந்ததாகவும், மேலும் ஈஸா (அலை) அங்கு வந்து வசித்துக்கொண்டிருந்தார்களென்றும் அங்கேயே மவ்த்தாகிவிட்டார்களென்றும் அக்கல்லில் எழுதப்பட்டிருப்பதாக பாரசீக வர்த்தகர்கள் கூறியதாக எடுத்தியம்புகிறார் என்னே இவரின் புத்திபோனவாறு? ஹதீதுகளெல்லாம் சரியா? அல்லவா என்று கூறுபவர், யாரோ சொன்ன ஆதாரமற்ற கட்டுக் கதையை, ஈஸா (அலை) மவ்த்தாகி விட்டார்களென்பதற்கு ஒரு பெரும் ஆதாரமாகக்கூற முன் வந்த நூருத்தீனின் புத்தியின் போக்கைப்பற்றி என்ன தான் கூறுவது?

நூருத்தீனுடைய கோஷ்டியினரான ஒரு சிலர் ஈஸா (அலை) அவர்கள் காஷ்மீருக்கு வந்து ஆங்கு வசித்து அங்கே மரணமடைந்தார்களென்றும்; அங்கு அடக்கப்பட்டார்களென்றும் அவர்களுடைய நூல்களில் எழுதியிருக்கிறார்கள். இவர்களின் தலைவராகிய குலாம்அஹ்மத் காதியானியோவெனின், ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஷாம் தேசத்தில் அடக்கப் பெற்றிருப்பதாக தாம் வஹீமூலம் அறிவதாகக் கூறியுள்ளார்.

நூருத்தீன் என்பாரே! உங்களோர் கூறியுள்ள மேற்கண்ட கூற்றுகளில் எதை நீர் நம்புகின்றீர்? என்று வினவுகின்றேன்.

முன்னுக்குப் பின் முரண்பட்ட கூற்றுக்களை கூறுவதில் காதியானிகள் மகா சமர்த்தர்களென்பதை உலகம்நன்கறியும். எனவே நான் மேலே கூறியுள்ள விவரங்களிலிருந்து நூருத்தீன் என்பாரின் கூற்றுக்கள்சுத்தத் தவறானவைகளும், புரட்டானவைகளும் பொய்யானவைகளுமாகு மென்பதை நேயர்கள் நன்குணர்ந்து கொள்ளுவார்களென நினைக்கின்றேன்.